


# தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www. tamilnaduepaper.com




CHENNAI | Volume- 3 | Issue:284 | 29-04-2026 | புதன்கிழமை | Free E- Paper | ● சென்னை ● மதுரை ● கோவை ● திருச்சி

## இன்றைய பஞ்சாங்கம்

புதன்கிழமை
(29-04-2026)
பராபவ ஆண்டு,
சித்திரை-16

சூரிய உதயம் 5.48

திதி:
திரயோதசி இரவு 9.01 வரை
பிறகு சதுர்த்தசி

நட்சத்திரம்:
அஸ்தம் நள்ளிரவு 1.10 வரை
பிறகு சித்திரை.

யோகம் :
மரண/சித்தயோகம்.

நல்ல நேரம்
காலை 6.00 – 7.00.
மாலை 4.00 – 5.00.

இராகு காலம்
நண்பகல் 12.00–1.30 மணி.

எமகண்டம்
காலை 7.30–9.00 மணி.

குளிகை
மதியம் 10.30 – 12.00 மணி

ஜோதிட நிபுணர்:
இராஜபாளையம்
இராமமூர்த்தி
செல்: 8189908040

# மொழி, பிராந்தியவாதம் மூலம் நாட்டில் பிளவுகளை விதைக்க முயற்சி: பிரதமர் மோடி

**காங்டாக், ஏப்.29**

மொழி மற்றும் பிராந்திய அடிப்படையில் நாட்டைப் பிளவுபடுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் வேளையில், சிக்கிம் 'ஒரே பாரதம், சிறந்த பாரதம்' என்ற தொலைநோக்குப் பார்வையை வெளிப்படுத்தி வருகிறது என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார்.

காங்டாக்கில் உள்ள பால்ஜோர் மைதானத்தில் நடைபெற்ற சிக்கிம் மாநில அந்தஸ்து பெற்ற 50-வது ஆண்டு விழாவில் உரையாற்றிய பிரதமர் மோடி, "இன்று நாம் சிக்கிமின் 50-வது ஆண்டு விழாவைக் கொண்டாடுகிறோம். ஒரு நிகழ்வு வரலாற்றுச் சிறப்புமிக்கதாகவும், இத்தகைய தெய்வீகமான சூழலில் நடைபெறும்போதும், அதன் மகத்துவம் பன்மடங்கு பெருகுகிறது. இந்த மைதானம் அந்த அற்புதமான ஒளிவட்டத்தால் நிரம்பியுள்ளது. கலைஞர்களையும் நடன அமைப்பாளர்களையும் நான் வாழ்த்துகிறேன். ஊடகங்கள் இந்த நிகழ்வை மீண்டும் மீண்டும் ஒளிபரப்ப வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.




அரசியல் நலன்களுக்காக, மொழிவாதம், பிராந்தியவாதம் மற்றும் சமூகப் படிநிலை போன்றவற்றின் அடிப்படையில் நாட்டில் பிளவுகளை விதைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும் ஒரு காலகட்டத்தில், ஒரே இந்தியா, மாபெரும் இந்தியா என்ற தொலைநோக்குப் பார்வையின் உண்மையான ஒரு காட்சியை சிக்கிம் இன்று நமக்கு வழங்கியுள்ளது. இந்தச் சிறிய நிகழ்ச்சியில், அவர்கள் நமது தேசத்தின் பன்முகத்தன்மையையும் ஒற்றுமையையும் அழகாக வெளிப்படுத்தியுள்ளனர்.

நேற்றிரவு மழையும், இப்போது சூரிய ஒளியும். சிக்கிமின் வண்ணங்கள் உண்மையிலேயே தனித்துவமானவை. சிக்கிம் கிழக்கின் பெருமை.

எனது சாலைப் பேரணியின் போது எனக்கு மிகவும் பிடித்த விஷயம் எதுவென்றால், அது சிக்கிமின் சாலைகளில் நிலவிய தூய்மைதான். இதற்காக உங்கள் அனைவருக்கும் நான் எனது வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். சிக்கிம் மக்கள் இயற்கையின் உண்மையான தூதுவர்களாகத் திகழ்கின்றனர். எனவே, நாட்டின் மக்கள் அனைவரும் சிக்கிமிற்கு வருகை தருமாறு நான் கேட்டுக்கொள்கிறேன்" என்றார்.

முன்னதாக இன்று, சிக்கிம் மாநிலம் உருவானதன் 50-வது ஆண்டு நிறைவு விழாவின் நிறைவு நிகழ்ச்சியில், சிக்கிமில் 4,000 கோடி ரூபாய்க்கும் அதிகமான மதிப்புள்ள பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை பிரதமர் மோடி தொடங்கி வைத்தும், அவற்றுக்கான அடிக்கல்லை நாட்டியும் வைத்தார்.

# எல்லை தாண்டிய பயங்கரவாதம்: இரட்டை நிலைப்பாட்டிற்கு இடமில்லை: ராஜ்நாத் சிங்

**புதுடெல்லி, ஏப்.29:**

பயங்கரவாதத்திற்கு எதிராக என்றுமே இரட்டை நிலைப்பாடு இல்லை என பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் (ஏப். 28) தெரிவித்தார்.

பயங்கரவாதிகளுக்கு அடைக்கலம் கொடுத்து பாதுகாப்பான புகலிடங்கள் வழங்கும் அமைப்புகள், நிறுவனங்கள், நாடுகளுக்கு எதிராக ஷாங்காய் ஒத்துழைப்பு கூட்டமைப்பின் பாதுகாப்புத் துறை உறுப்பினர்கள் செயல்பட வேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

கஜகஸ்தான் தலைநகர் பிஷ்கெக் பகுதியில் ஷாங்காய் ஒத்துழைப்பு கூட்டமைப்பு மாநாடு இன்று (ஏப். 28) நடைபெற்றது. பாகிஸ்தான் பாதுகாப்புத் துறை அமைச்சர் கவாஹா ஆசிஃப் உள்ளிட்ட பலர் இதில் பங்கேற்றனர்.



இந்த மாநாட்டில் மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் பேசியதாவது:

''பயங்கரவாதிகளுக்கு அடைக்கலம் கொடுத்து பாதுகாப்பான புகலிடங்களை வழங்கும் நாடுகள், நிறுவனங்கள், வலையமைப்புகளுக்கு எதிராக ஷாங்காய் ஒத்துழைப்பு கூட்டமைப்பு உறுப்பினர்கள் செயல்பட வேண்டும். எல்லை தாண்டிய பயங்கரவாதத்திற்கு பிராந்திய பாதுகாப்புத்துறையை தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும். பயங்கரவாதத்தின் மையங்கள் நியாயமான தண்டனைகளில் இருந்து இனி தப்ப முடியாது என்பதை இந்தியாவின் ஆபரேஷன் சிந்தூர் நிரூபித்தது" எனக் குறிப்பிட்டார்.

பாகிஸ்தான் பெயரைக் குறிப்பிடாமல் பேசிய ராஜ்நாத் சிங், "பயங்கரவாதத்திற்கு எந்த தேசியமும் இல்லை, இறையியலும் இல்லை. ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் நம்பகத்தன்மைகள் தேர்ந்தெடுக்கப்பட்ட பதில்களாக இல்லாமல், தொடர்ச்சியான நடவடிக்கைகளாக இருக்கும்" எனக் குறிப்பிட்டார்.

# தெற்காசியாவில் முதன்மை மாநிலமாக தமிழகம் உயர வேண்டும்: முதல்வர் ஸ்டாலின்

**சென்னை, ஏப்.29:**

தமிழ்நாடு தொடர்ச்சியாக 2-வது நிதியாண்டிலும் இரட்டை இலக்க பொருளாதார வளர்ச்சியை பதிவு செய்துள்ளது. 2024-25 நிதியாண்டில் 11.19% வளர்ச்சியைக் கண்ட நிலையில், 2025-26 நிதியாண்டில் 10.83% வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளதாக ஒன்றிய புள்ளியியல் துறை சார்பில் தகவல் வெளியாகியுள்ளது.

இது குறித்து முதல்வர் ஸ்டாலின் தனது எக்ஸ் தளத்தில், "தமிழ்நாடு என்றாலே சாதனை! சாதனை! சாதனை. திராவிட மாடல் தனித்துவமான மாடல். சொன்னதை, எண்களிலும் நிரூபித்துக் கொண்டிருக்கிறோம். முதல் மூன்றாண்டுகளில் அடித்தளம் அமைத்து, இப்போது தொடர்ந்து இரண்டாண்டுகளாக இரட்டை இலக்க வளர்ச்சி என்ற சாதனையை நிகழ்த்தியுள்ளோம்.

சிறப்பான நமது நிர்வாகத்திற்கு, உழைப்பால் துணை நின்ற தமிழ்நாட்டு மக்களுக்கு நன்றி. இது தொடக்கம்தான். உங்கள் துணையோடு இன்னும் பல உயரங்களை அடைவது உறுதி. நம்முடைய போட்டி என்பது மற்ற இந்திய மாநிலங்களுடன் அல்ல; தெற்காசியாவில் முதன்மை மாநிலமாகத் தமிழ்நாடு உயர வேண்டும்." இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.




# மேற்குவங்காள 2ம் கட்ட தேர்தல்: இன்று வாக்குப்பதிவு



**கொல்கத்தா, ஏப்.29:**

294 தொகுதிகளை கொண்ட மேற்கு வங்காள சட்டசபைக்கு 2 கட்டங்களாக தேர்தல் நடைபெற்று வருகிறது. அதன்படி, முதற்கட்டமாக 152 தொகுதிகளுக்கு கடந்த 23ம் தேதி தேர்தல் நடைபெற்றது. இதில் 93.19 சதவீத வாக்குகள் பதிவானது.

இந்நிலையில், மேற்குவங்காள 2ம் கட்ட தேர்தலில் இன்று வாக்குப்பதிவு நடைபெற உள்ளது. அதன்படி எஞ்சிய 142 தொகுதிகளுக்கும் நாளை வாக்குப்பதிவு நடைபெற உள்ளது. அதன்படி, இன்று காலை 7 மணிக்கு தொடக்கும் வாக்குப்பதிவு மாலை 6 மணிக்கு நிறைவடைய உள்ளது.

வாக்குப்பதிவு இன்று நடைபெற உள்ள நிலையில் வாக்குப்பதிவு எந்திரங்களை வாக்குச்சாவடிகளுக்கு அனுப்பும் பணி நிறைவடைந்துள்ளது. 2ம் கட்ட தேர்தலை அசம்பாவிதங்கள் இன்றி நடத்த தேர்தல் ஆணையம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. அதன்படி, தேர்தல் நடைபெறும் தொகுதிகளில் பாதுகாப்புப்பணியில் மத்திய பாதுகாப்புப்படையினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

அதேவேளை, தேர்தலில் பதிவாகும் வாக்குகள் வரும் 4ம் தேதி எண்ணப்பட்டு அன்றே முடிவுகள் அறிவிக்கப்பட உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

# உலகின் 5-வது பெரிய ராணுவ செலவு செய்யும் நாடு என்ற அந்தஸ்தை பெற்றது இந்தியா

**புதுடெல்லி, ஏப்.29:**

2025-ல் ராணுவத்திற்கு அதிகம் செலவு செய்த நாடுகள் பட்டியலில், அமெரிக்கா, சீனா, ரஷியா, ஜெர்மனி டாப் 4 இடங்களை பிடித்துள்ளன. 5-வது இடத்தை இந்தியா பெற்றுள்ளது, மொத்த உலக ராணுவ செலவினத்தில் 58%-ஐ இந்த 5 நாடுகள் கொண்டுள்ளன. இதன் மொத்த மதிப்பு 1.68 ட்ரில்லியன் டாலர் ஆகும். 2025-ஆம் ஆண்டில் உலக நாடுகளின் மொத்த ராணுவ செலவு 2,887 பில்லியன் டாலராக உயர்ந்துள்ளது.

2025ம் ஆண்டில் 92.1 பில்லியன் டாலர் செலவினத்துடன் உலகின் 5-வது பெரிய ராணுவ செலவு செய்யும் நாடு என்ற அந்தஸ்தை இந்தியா பெற்றுள்ளது. உலகளாவிய ராணுவ செலவில் இந்தியாவின் பங்கு 3.2 சதவீதமாக உள்ளது. கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் இந்தியாவின் ராணுவ செலவு 8.9% அதிகரித்துள்ளது.



பாகிஸ்தானுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையின் போது, ஆயுதப் படைகள் தங்களைப் போருக்குத் தயார் நிலையில் வைத்திருக்க அவசரகால அடிப்படையில் பல ஆயுதங்களைக் கொள்முதல் செய்தன. 2026-27 மத்திய பட்ஜெட்டில் பாதுகாப்புத் துறைக்கு ரூ.7.85 லட்சம் கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் ரூ 2.19 லட்சம் கோடி புதிய ஆயுதங்கள், போர் விமானங்கள் மற்றும் நீர்மூழ்கிக் கப்பல்கள் வாங்கப் பயன்படுத்தப்பட உள்ளன. சீனா மற்றும் பாகிஸ்தான் உடனான எல்லைப் பதற்றங்கள் இந்தியாவின் பாதுகாப்பு செலவை தொடர்ந்து உயர்த்தி வருகின்றன.

இந்தியா தனது ஆயுத இறக்குமதியை 2016-20 மற்றும் 2021-25 காலகட்டங்களுக்கு இடையே 4% குறைத்துள்ளது. இருப்பினும், உலகளாவிய ஆயுத இறக்குமதியில் 8.2% பங்களிப்புடன் இந்தியா இன்னும் 2-வது இடத்தில் உள்ளது.

இந்தியா தனது ராணுவத் தேவைகளுக்காக ரஷியாவை சார்ந்திருப்பதை வெகுவாகக் குறைத்து வருகிறது. 2011-15 இல் 70% ஆக இருந்த ரஷியாவின் பங்கு, தற்போது 40% ஆகக் குறைந்துள்ளது.

தற்போது பிரான்ஸ், இஸ்ரேல் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகள் இந்தியாவிற்கு ஆயுதங்களை வழங்கும் முக்கிய நாடுகளாக உருவெடுத்துள்ளன.



## திருக்குறள் குறள்-604

குடிமடிந்து குற்றம் பெருகும் மடிமடிந்து
மாண்ட உஞற்றி லவர்க்கு



சோம்பலில் அகப்பட்டு சிறந்த முயற்சி இல்லாதவராய் வாழ்கின்றவர்க்கு குடியின் பெருமை அழிந்து குற்றம் பெருகும்.

## சிந்திக்க ஒரு நொடி



மன காயத்திற்கு ஆறுதல் என்பது தற்காலிக தீர்வு, மாறுதல் என்பது நிரந்தர தீர்வு, ஆறுதல் தேடாதே மாறுதல் தேடு வாழ்க்கை வசந்தமாகும்.

**ராஜகோபாலன்.J**
சென்னை 18

## நம் வாசவி அம்மன் ஜனனோற்சவ திருவிழா



**கிருஷ்ணகிரி, ஏப்.29:**

கிருஷ்ணகிரி மாவட்டம் ஒசூர் ஸ்ரீ வாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் தேவஸ்தானத்தில் நம் வாசவி அம்மன் ஜனனோற்சவ திருவிழாவை முன்னிட்டு மூலவர்க்கும், உற்சவருக்கும் அபிஷேகங்கள், வண்ணமலர் மாலைகளால் அலங்காரங்கள், தாமரைப்பூ மாலையுடன், தங்க ஆபரணங்களால் அலங்கரித்து, வாழை, மாவிலை தோரணங்களால் அலங்கரித்து,வேத மந்திரங்கள் ஒலிக்க, ஆர்ய வைஸ்ய பெண்கள் அனைவரும் பக்தி பாடல்களை பாடி, மங்கள வாத்தியங்கள் இசைக்க, பிரசாதம், நெய்வேத்தியங்களுடன், மகா தீபாராதனையும் நடைபெற்றது. நம் வாசவி அம்மனை வேண்டி அருள் பெற்றனர். இரவு பெண்கள் அனைவரும் தீப ஆர்த்திகள் அம்மனுக்கு பக்தி பாடல்களை பாடி ஆரத்தி காண்பிக்கப்பட்டது. மங்கள வாத்தியங்களுடன் நம் வாசவி அம்மன் திருவீதி உலாவும் நடைபெற்றது. பூஜைகள் வெகு சிறப்பாக நடைபெற்றது. ஆர்ய வைஸ்ய ஆண்கள், பெண்கள் அனைவரும் நம் வாசவி அம்மனை வேண்டி அருள் பெற்றனர். அனைவருக்கும் பிரசாதங்களும், காலை, மதியம் அறுசுவை உணவு வழங்கப்பட்டது. தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை.

## சித்திரை பிரம்மோற்சவம் 8-ஆம் நாள் உற்சவம்




**திருவண்ணாமலை, ஏப்.29:**

திருவண்ணாமலை மாவட்டம் கீழ்பென்னாத்தூர் சித்திரை பிரம்மோற்சவத்தை முன்னிட்டு பஞ்ச மூர்த்திகள் சிறப்பு அபிஷேகங்கள், வண்ணமலர் மாலைகளால் அலங்காரங்கள், பிரசாதம், நெய்வேத்தியங்களுடன் மகா தீபாராதனையும் நடைபெற்றது. மாலை ஸ்ரீசுந்தரேசுவர பெருமான் ஸ்ரீ மீனாட்சி அம்மன் ரிஷப வாகனத்தில் திருக்காட்சி மாட வீதி உலா உடன் செஞ்சி விசாலாட்சி கோலாட்டம் குழுவின் கோலாட்டம் கலை நிகழ்ச்சியும் வெகு சிறப்பாக நடைபெற்றது. ஏராளமான பக்தர்கள் மாடவீதி உலாவில் கலந்து கொண்டு மீனாட்சி சுந்தரேசுவரரை வேண்டி அருள் பெற்றனர்.

தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

## வாடிப்பட்டியில் மீனாட்சியம்மன்கோவில் சித்திரைதிருவிழா: மீனாட்சியம்மன் திருக்கல்யாணம்







**வாடிப்பட்டி,ஏப்.29:**

மதுரை மாவட்டம் வாடிப்பட்டி பேரூராட்சி 2 வார்டுகுலசேகரன்கோட்டையில் குலசேகரபாண்டியமன்னரால்கட்டப்பட்ட பழமையும் பெருமையும் வாய்ந்த இயற்கை எழில்கொஞ்சும் சிறுமலை ஓடைக்கரையில் எழுந்தருளியுள்ள மீனாட்சிசுந்தரேசுவர் திருக்கோவில் சித்திரை திருவிழா கடந்த 19ந்தேதி கொடியேற்றத்துடன் தொடங்கியது.

தினந்தோறும் மாலை 6மணிக்கு மீனாட்சிஅம்மன் சிம்மவாகனத்திலும், அன்ன வாகனத்திலும்,காமதேனுவாகனத்திலும்,பட்டுப்பல்லக்கிலும்,குதிரைவாகனத்திலும்,ரிஷபவாகனத்திலும்,யாளிவாகனத்திலும் அருள் பாலித்தார். 26ந்தேதி மதியம் 3மணிக்கு தவத்திரு ஏடுராதாகிருஷ்ணன் மண்டகப்படியிலிருந்து செங்கோல், வைரகிரீடம், தங்ககவசம் ஆபரணப்பெட்டி புறப்பாட்டு இரவு 7.50மணிக்கு மீனாட்சி அம்மனுக்கு பட்டாபிஷேகம் நடந்தது. 27ந்தேதி திங்கள்கிழமை காலை 8மணிக்கு போடிநாயக்கன்பட்டி பாமா ருக்குமணி சமேத கோபாலகிருஷ்ணன் கோவிலில் இருந்து சீர்வரிசையுடன் உற்சவர் புறப்பாடு மற்றும் சந்தைபாலம் பாலதண்டாயுதபாணி கோவில்களில் இருந்து சீர்வரிசை புறப்பாடு நடந்தது.


அதேபோல் மாலை 6மணிக்கு தாதம்பட்டி இரட்டைவிநாயகர்கோவிலிருந்து மேளதாளத்துடன் சுந்தரேசுவரை அழைத்துச் சென்று வல்லபகணபதிகோவிலில் மீனாட்சியம்மன் திக்விஜயம் நடந்தது.

அதன்பின் சுந்தரேசுவர் மீனாட்சிஅம்மன் மாலை மாற்றுஉற்சவத்தை தொடர்ந்து 108முளைப்பாலிகை மற்றும் 108 சீர்வரிசைதட்டுடன் ஊர்வலமாக 2கிமீதுhரம் நடந்துசென்று திருக்கோவிலை அடைந்தது.

28ந்தேதி செவ்வாய்க்கிழமை காலை 10.45மணிக்கு சிவப்புகலர் அங்கியும் பச்சைபட்டு உடுத்திய மீனாட்சிசுந்தரேசுவர், சிகப்புகலர்படாரில் அரக்கபச்சைபட்டுடுத்திய மீனாட்சிக்கு மங்களநான்பூட்டி திருக்கல்யாணம் நடந்தது. இதில் மீனாட்சியம் மனாக விஸ்வ நாதபட்டர், சுந்தரேசுவரராககுமரேசன்பட்டர் ஆகியோரும் சர்வசாதகமாக ஜெய்கணேஷ்பட்டரும் கோவில் அர்சகர் கிருஷ்ணகுமாரும் சிறப்பு பூஜைகள்செய்தனர். 12மணிக்கு திருமாங்கல்யம்சரடு அன்னதானம் வழங்கப்பட்டது. மாலை 6மணிக்கு பரதநாட்டியநிகழ்ச்சி நடந்தது.

29ந்தேதி புதன்கிழமை இன்று மாலை 6மணிக்குதேரோட்டம் நடக்கிறது. 30ந்தேதி வியாழக்கிழமை மாலை 6மணிக்கு தீர்த்தவாரியுடன் திருவிழா நிறைவடைகிறது. இதற்கான ஏற்பாடுகளை கோவில் திருப்பணிக்குழுவினர் மற்றும் கிராமபொதுமக்கள் செய்து வருகின்றனர்.

## அருள்மிகு அண்ணாமலையார் திருக்கோயிலில் வசந்த உற்சவம் 7-ஆம் நாள் பொம்மை பூ கொட்டும் விழா





**திருவண்ணாமலை, ஏப்.29:**

அருள்மிகு அண்ணாமலையார் திருக்கோயிலில் சித்திரை மாதம் 7-ஆம் நாள் வசந்த உற்சவத்தை முன்னிட்டு உற்சவருக்கு அபிஷேகங்கள், வண்ணமலர் மாலைகளால் அலங்காரங்கள், தங்க ஆபரணங்களுடன், அலங்காரத்துடன் மகா தீபாராதனையும் நடைபெற்றது. பொம்மைக்கு அலங்காரம் செய்யப்பட்டு பன்னீர் மண்டபத்தில் ஒவ்வொரு முறையும் பொம்மை சுவாமி மேல் பூ கொட்டும் பின்னர் தீபாராதனையும் நடைபெற்றது. ஏராளமான பக்தர்கள் பொம்மை பூ கொட்டும் விழாவில் கலந்து கொண்டு அண்ணாமலையாரை வேண்டி அருள் பெற்றனர்.

பொம்மை பூ கொட்டும் நிகழ்வை குழந்தைகள் பார்த்து ரசித்தனர். தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

## கிரிவலப்பாதையில் சுகாதார வளாகம் ஆய்வு



**திருவண்ணாமலை, ஏப்.29:**

அண்ணாமலையார் திருக்கோயில் சித்ரா பௌர்ணமியை முன்னிட்டு கிரிவலப் பாதைகளில் பக்தர்கள் வசதிக்காக அமைக்கப்பட்ட சுகாதார வளாகத்தை திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித் தலைவர் உயர்திரு. க. தர்ப்பகராஜ் இ. ஆ. ப. அவர்கள் ஆய்வு மேற்கொண்டார். தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

## வாக்கு எண்ணுகை மையத்தில் ஆய்வு



**திருவண்ணாமலை ஏப்.29:**

திருவண்ணாமலை மாநகராட்சி ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் உள்ள வாக்கு எண்ணுகை மையத்தில் திருவண்ணாமலை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் உயர்திரு. க. தர்ப்பகராஜ் இ. ஆ. ப. அவர்கள் மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னேற்பாடு பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார். தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

## சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் ஆய்வு




**திருவண்ணாமலை ஏப்.29:**

திருவண்ணாமலை அருள்மிகு அண்ணாமலையார் திருக்கோயிலில் சித்ரா பௌர்ணமியை முன்னிட்டு கிரிவலப் பாதைகளில் நெடுஞ்சாலைத்துறை சார்பில் பக்தர்கள் வசதிக்காக அமைக்கப்பட்டுள்ள சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் நிலையத்தை திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித் தலைவர் உயர்திரு. க. தர்ப்பகராஜ் இ. ஆ.ப. அவர்கள் ஆய்வு மேற்கொண்டார். தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

## பாவேந்தர் பாரதிதாசனின் 136-வது பிறந்தநாள் விழா தொகுப்பு





“பாவேந்தர்” பாரதிதாசன் அவர்கள் 29.4.1891 அன்று புதுச்சேரியில் கனகசபை - இலக்குமி அம்மாள் இணையரின் மகனாகப் பிறந்தார். இவரது இயற்பெயர் ‘கனக சுப்புரத்தினம்’. இவர் தமது இளம் வயதிலிருந்து தமிழ்மொழி மீது தணியாத தாகமும் பற்றும் கொண்டிருந்தார். 1946 ஆம் ஆண்டு “அமைதி-ஊமை” என்ற நாடகத்திற்காக “‘தங்கக்கிளி பரிசு” வென்றார்.

மகாகவி பாரதியார் அவர்கள் புதுவையில் தங்கியிருந்தபோது, அவருடன் நெருங்கிய நட்பு கொண்டிருந்தார். பாரதியாரின் கவிதைகளில் மிகுந்த ஈடுபாடு கொண்டு அவர் போலவே இனிய கவிதைகளை எழுதிக் குவித்தார். பாரதியார் அவர்களைத் தம் வழிகாட்டியாக ஏற்றுக்கொண்டு, பாரதிதாசன் எனத் தம் பெயரையே மாற்றிக் கொண்டார்.

பாரதிதாசன் ஒரு தமிழாசிரியர், தமிழ்க் கவிஞர், அரசியல்வாதி, திரைக்கதை ஆசிரியர், எழுத்தாளர் என்று பல்வேறு துறைகளில் தமிழ்மொழியின் இனிமையை மக்களிடம் எடுத்துச் சென்றவர். பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள் 86க்கும் மேற்பட்ட நூல்கள், கதைகள், கட்டுரைகளைப் படைத்துள்ளார். ‘பிசிராந்தையார்’ நாடகத்திற்காக 1970ஆம் ஆண்டில் அவருக்கு, ‘சாகித்திய அகாடமி விருது’, வழங்கப்பட்டது.

‘எங்கள் வாழ்வும் எங்கள் வளமும், மங்காத தமிழென்று சங்கே முழங்கு’, “தமிழுக்கும் அமுதென்று பேர், அந்தத் தமிழின்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்” எனும் தேன்சுவை சொட்டும் பாடல்கள் பல படைத்துள்ளார். தம் படைப்பாற்றல் மூலம் தமிழுக்குப் பல வழிகளில் தொண்டாற்றி, தமிழ் இனத்திற்கு எழுச்சியூட்டிய பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள் 74 ஆண்டுகள் வாழ்ந்து 21.4.1964 அன்று இயற்கை எய்தினார்.



**தொகுப்பு:**
**பா.சீனிவாசன்,**
**துணைத் தலைவர்,**
**வந்தை வட்ட கோட்டை தமிழ்ச் சங்கம்,**
**வந்தவாசி.**

## மானாமதுரை திமுக வேட்பாளர் தமிழரசி நகராட்சி தலைவர் மாரியப்பன் கென்னடி ஆகியோர் வாக்குபதிவு செய்தனர்

**மானாமதுரை ஏப் 29:**

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை தனி தொகுதியில் சட்டமன்ற தேர்தலில் திமுக கூட்டணியில் தற்போதைய எம்எல்ஏ தமிழரசி அதிமுக கூட்டணியில் பாஜக வேட்பாளர் பொன் பாலகணபதி மற்றும் நாம் தமிழர், தவெக, மற்றும் சுயேட்சை வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

இதில் திமுக வேட் பாளர் தமிழரசி சங்க மங்கலம் பகுதியில் உள்ள வாக்கு சாவடியில் தனது வாக்கை பதிவு செய்து மானாமதுரை தொகுதி உள்ள இளையான்குடி திருபுவனம் ஒன்றியங்களில் சென்று பார்வையிட்டார்.

மானாமதுரை நகராட்சி தலைவர் முன்னாள் எம்எல்ஏ மாரியப்பன் கென்னடி ஆதனூர் சாலையில் உள்ள வாக்குச்சாவடியில் தனது வாக்கை பதிவு செய்தார். காலை 7 மணிமுதல் வாக்காளர் வாக்கு சாவடிக்கு சென்று ஆர்வமுடன் வாக்குகளை பதிவு செய்தனர்.





# செலவு கணக்கு தாக்கல் செய்யாத 529 வேட்பாளர்கள் தகுதி நீக்கம்

**புதுடெல்லி, ஏப்.29:**

கடந்த மக்களவை மற்றும் சட்டப்பேரவைத் தேர்தல்களில் போட்டியிட்டு, நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் தேர்தல் செலவுக் கணக்குகளைத் தாக்கல் செய்யத் தவறிய 529 வேட்பாளர்களைத் தகுதி நீக்கம் செய்து தேர்தல் ஆணையம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

இதையடுத்து, இவர்கள் அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு நாடாளுமன்றம் மற்றும் சட்டப்பேரவைத் தேர்தல்களில் வாக்களிக்கவோ, போட்டியிடவோ முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. 1951-ம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் பிரிவு 10ஏ-ன் கீழ் செலவு கணக்குகளை முறைப்படி தாக்கல் செய்யாத 529 வேட்பாளர்கள் மீது தகுதி நீக்க நடவடிக்கையை தேர்தல் ஆணையம் எடுத்துள்ளது. கடந்த மார்ச் 16-ம் தேதி பிறப்பிக்கப்பட்ட இந்த உத்தரவின்படி, மேற்கு வங்கத்தைச் சேர்ந்த 4 பேர் உட்பட நாடு முழுவதும் உள்ள 529 சுயேச்சை வேட்பாளர்கள் தங்களது அடிப்படைத் தேர்தல் உரிமைகளை இழக்கின்றனர். சட்ட விதிகளின்படி, தேர்தலில் போட்டியிடும் ஒவ்வொரு வேட்பாளரும் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்ட 30 நாட்களுக்குள் தங்களது முழுமையான தேர்தல் செலவுக் கணக்கைத் தாக்கல் செய்வது கட்டாயமாகும். அப்படி சமர்ப்பிக்க தவறுவோரை மூன்று ஆண்டுகளுக்குத் தகுதி நீக்கம் செய்யத் தேர்தல் ஆணையத்திற்கு அதிகாரம் உள்ளது.

இந்தத் தகுதி நீக்கமானது இந்தியத் தேர்தல் ஆணையத்தால் நடத்தப்படும் தேர்தல்களுக்கு மட்டுமே பொருந்தும். அதேநேரம், மாநிலத் தேர்தல் ஆணையங்களால் நடத்தப்படும் உள்ளாட்சி தேர்தல்களுக்கு இது பொருந்தாது. அதிகபட்சமாக உ.பி.யில் 120, கர்நாடகா 59, மத்திய பிரதேசம் 39, சத்தீஸ்கர் 36, தமிழ்நாடு 33, பிஹார் 28, தெலங்கானா, பஞ்சாப், உத்தராகண்ட் தலா 27, ஆந்திரா 25, கேரளா 16 உள்ளிட்ட மாநிலங்களின் 529 வேட்பாளர்கள் தகுதி நீக்கப் பட்டியலில் இடம்பெற்றுள்ளனர்.

# இந்தியாவையே திரும்பிப் பார்க்க வைத்துள்ளது தமிழ்நாடு! - தங்கம் தென்னரசு



**சென்னை, ஏப்.29:**

பொருளாதார வளர்ச்சி மூலமாக இந்தியாவையே திரும்பிப் பார்க்க வைத்துள்ளது தமிழ்நாடு என அமைச்சர் தங்கம் தென்னரசு கூறியுள்ளார்.

2024-2025 ஆம் நிதியாண்டில் 11.29 சதவிகிதமாக இருந்த தமிழ்நாட்டில் பொருளாதார வளர்ச்சி தொடர்ந்து 2025-2026 ஆம் நிதியாண்டில் இரட்டை இலக்கத்தில் 10.83 சதவிகித வளர்ச்சியை எட்டியுள்ளதாக மத்திய புள்ளியியல் துறை தகவல் வெளியிட்டுள்ளது.

நாட்டின் இரண்டாவது மிகப்பெரிய பொருளாதார வளர்ச்சியைக் கொண்டுள்ள மாநிலமான தமிழ்நாட்டின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி, 2024 - 2025 ஆம் நிதியாண்டில் ரூ. 31.19 லட்சம் கோடியில் இருந்து 2025-26 ஆம் நிதியாண்டில் ரூ.35.29 லட்சம் கோடியாகவும் உயர்ந்துள்ளது. இதுபற்றி அமைச்சர் தங்கம் தென்னரசு தனது எக்ஸ் பக்கத்தில், "தொடர்ந்து 2வது நிதி ஆண்டாக இரட்டை இலக்க பொருளாதார வளர்ச்சியைப் பதிவு செய்து இந்தியாவையே திரும்பிப் பார்க்க வைத்துள்ளது நம் தமிழ்நாடு! எந்தத் தடையையும் தகர்த்து, தமிழ்நாட்டை முதன்மை மாநிலமாக நிலைநிறுத்திவரும் நம் முதலமைச்சர் ஸ்டாலின் என்ற தொலைநோக்குப் பார்வைக் கொண்ட தலைவனின் கனவுகளும் உழைப்புமே இதற்கு மூல முதற்காரணம்.

தொழில் வளர்ச்சி, உட்கட்டமைப்பு மற்றும் சரியான திட்டமிடல் என அனைத்துத் துறைகளிலும் முதல்வர் காட்டி வரும் அக்கறையே, இன்று நம் மாநிலத்தை இந்தச் சிகரத்தில் ஏற்றி வைத்துள்ளது. வளர்ச்சி நாயகன் தலைமையில் திராவிட மாடல் 2.0-வில் தமிழ்நாடு இன்னும் பல சாதனைகளைப் புரியும்!" என்று பதிவிட்டுள்ளார்.

# நடுக்கடலில் மீன் பிடித்தபோது தாக்குதல் நடத்திய இலங்கை கடற்கொள்ளையரை பிடித்த நாகை மீனவர்கள்

**நாகப்பட்டினம், ஏப்.29:**

கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த நாகை மீனவர்களுக்கும், இலங்கை கடற்கொள்ளையர்களுக்கும் மோதல் ஏற்பட்டது. இதில் ஒருவரை நாகை மீனவர்கள் பிடித்து வந்து போலீஸாரிடம் ஒப்படைத்தனர்.

மேலும் 2 பேர் படகு மூலம் தப்பினர். நாகை மாவட்டம் செருதூரிலிருந்து பாலமுருகன் என்பவருக்குச் சொந்தமான பைபர் படகில் கடந்த 25-ம் தேதி சக்திமயில், அபிமன், பாலசுப்பிரமணியன், பழனிச்சாமி, கன்னியாகுமரி உவரி பகுதியை சேர்ந்த அபி ஆகியோர் கடலுக்கு மீன்பிடிக்கச் சென்றனர்.

நேற்று முன்தினம் இரவு 11 மணியளவில் அங்கு ஒரு படகில் இலங்கை கடற்கொள்ளையர்கள் 3 பேர் வந்தனர். மீனவர்களைத் தாக்கி, படகில் இருந்த மீன்கள், ஜிபிஎஸ் கருவி, செல்போன் ஆகிய வற்றை பறித்துக் கொண்டு, வலையையும் அறுக்க முற்பட்டனர்.

அதை தடுக்க முயன்றபோது இருதரப்பினர் இடையே மோதல் ஏற்பட்டது. இதில், கடற்கொள்ளையர்களில் ஒருவரை செருதூர் மீனவர்கள் பிடித்தனர். மற்ற 2 பேர் படகில் தப்பினர்.

பிடிபட்ட நபர் இலங்கை காங்கேசன்துறை வழலையைச் சேர்ந்த அயந்தன் என்பதும், இவர் உள்ளிட்ட 3 பேரும், இதற்கு முன் செருதூர் மீனவர் மணிவாசகம் என்பவரது படகை மறித்து, அதிலிருந்தவர்களை தாக்கி உடமைகளை கொள்ளையடித்ததும் தெரிய வந்தது.



பின்னர் அவரை செருதூர் மீன்பிடி இறங்கு தளத்துக்கு நேற்று அழைத்து வந்து கீழையூர் போலீஸாரிடம் மீனவர்கள் ஒப்படைத்தனர். கடலில் நடந்த மோதலில் காயமடைந்த அயந்தன், நாகை அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அதேபோல, கடற்கொள்ளையர்கள் தாக்கியதில் காயமடைந்த செருதூர் மீனவர்கள் 7 பேரும் மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதுகுறித்து பாதிக்கப்பட்ட மீனவர் மணிவாசகம் கூறும்போது, எங்கள் படகை வழிமறித்த இலங்கை கடற்கொள்ளையர்கள், படகில் இருந்த மீன்பிடி சாதனங்கள் மற்றும் மீன்களை பறித்துக் கொண்டனர்.

தொடர்ந்து நள்ளிரவு முதல் அதிகாலை 3 மணி வரை அடித்து உதைத்து கொடுமைப்படுத்தினர். எனது மகனின் கழுத்தில் கத்தியை வைத்து மிரட்டி, இனி நீங்கள் வந்தால் பெட்ரோல் குண்டு வீசி கொன்று விடுவோம் என மிரட்டினர் என்றார்.

தாக்குதல் நடத்திய இலங்கை கடற்கொள்ளையர்களில் ஒருவரை தமிழக மீனவர்கள் பிடித்து வந்து தமிழக போலீஸாரிடம் ஒப்படைத்துள்ளது இதுவே முதல்முறை என்பது குறிப்பிடத்தக்கது.

# 10, 12-ம் வகுப்பு பொதுத்தேர்வு முடிவுகள் திட்டமிட்டபடி வெளியீடு

**சென்னை, ஏப்.29:**

தமிழக அரசின் பள்ளிக்கல்வி பாடத்திட்டத்தில் 12-ம் வகுப்பு பொதுத்தேர்வு கடந்த மார்ச் மாதம் 2-ந் தேதி தொடங்கி 26-ந் தேதி வரை நடைபெற்றது. இதனை சுமார் 8 லட்சம் மாணவ-மாணவிகள் எழுதினர். இதேபோல 10-ம் வகுப்பு பொதுத்தேர்வு கடந்த மார்ச் மாதம் 11-ந் தேதி தொடங்கி கடந்த 6-ந் தேதி வரை நடந்தது. இத்தேர்வை சுமார் 9 லட்சம் மாணவ-மாணவிகள் எழுதினர்.

இதைத்தொடர்ந்து விடைத்தாள்கள் திருத்தும் பணி தமிழகம் முழுவதும் பல்வேறு மையங்களில் நடைபெற்றது. இப்பணிகள் சமீபத்தில் முடிவடைந்தன. இதைத்தொடர்ந்துமாணவ-மாணவிகள் பெற்ற மதிப்பெண்கள் கணினியில் பதிவேற்றும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது.

12-ம் வகுப்பு பொதுத்தேர்வு முடிவு மே மாதம் 8-ந் தேதி வெளியிடப்படும் எனவும், 10-ம் வகுப்பு பொதுத்தேர்வு முடிவுகள் மே மாதம் 20-ந் தேதி வெளியிடப்படும் என ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது. அதன் அடிப்படையில் அதற்கான பணிகளை பள்ளிக்கல்வி, தேர்வுத்துறை அதிகாரிகள் முழுவீச்சில் ஈடுபட்டு வருகின்றனர்.

மேலும் பொதுத்தேர்வு முடிவுகள் திட்டமிட்ட தேதிகளில் வெளியிடப்படும் என தேர்வுத்துறை வட்டாரத்தில் தெரிவித்தனர்.

பிளஸ்-1 அரியர் தேர்வு எழுதியவர்களுக்கும் அடுத்த மாதம் 20-ந் தேதி தேர்வு முடிவு வெளியிடப்படுகிறது.

# இரு தொகுதிகளில் போட்டி: தேர்தல் செலவை வேட்பாளர் ஏற்க உத்தரவிடக் கோரிய வழக்கு தள்ளுபடி

**சென்னை, ஏப்.29:**

தேர்தல்களில் இரு தொகுதிகளில் போட்டியிடும் வேட்பாளர்களிடம், ஒரு தொகுதி பதவியை ராஜினாமா செய்யும் போது, தேர்தல் செலவை திருப்பி செலுத்துவதாக உத்தரவாத பத்திரம் பெற வேண்டும் என தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிடக் கோரிய வழக்கை சென்னை உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது.

மதுரை மேலூரை சேர்ந்த மணி என்பவர் தாக்கல் செய்த மனுவில், சட்டமன்றம், மக்களவை தேர்தல்களில் சில வேட்பாளர்கள் இரண்டு தொகுதிகளில் போட்டியிடுகின்றனர். இரு தொகுதிகளிலும் வெற்றி பெறும் பட்சத்தில், ஒரு தொகுதி பதவியை ராஜினாமா செய்ய வேண்டும். அந்த தொகுதிக்கு இடைத்தேர்தல் நடத்த வேண்டியுள்ளது. அதனால் அரசுக்கு செலவு ஏற்படுகிறது எனக் குறிப்பிட்டுள்ளார். அதனால், இரு தொகுதிகளில் போட்டியிடும் வேட்பாளர்களிடம், ராஜினாமா செய்யும் தொகுதியின் தேர்தல் செலவுகளை ஏற்க வேண்டும் என உத்தரவாத பத்திரம் பெற வேண்டும் என தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிட வேண்டும் என கூறப்பட்டுள்ளது. இந்த மனு,



தலைமை நீதிபதி எஸ்.ஏ.தர்மாதிகாரி மற்றும் நீதிபதி ஜி.அருள்முருகன் அமர்வில் விசாரணைக்கு வந்தபோது, வேட்பாளர்கள் இரு தொகுதிகளில் போட்டியிட சட்டம் அனுமதியளிக்கிறது. இந்த சட்டப்பிரிவை எதிர்த்த வழக்கை உச்ச நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளதைச் சுட்டிக்காட்டி, வழக்கை தள்ளுபடி செய்து உத்தரவிட்டது.

தமிழ்நாடு இ பேப்பர்.காம்
www.tamilnaduepaper.com
இ பேப்பரை தினமும் இலவசமாக பெற விரும்புவர்கள்.
"welcome Tamilnadu" என்று கீழ் உள்ள வாட்ஸ்ஆப் எண்ணிற்கு அனுப்பி வையுங்கள். தங்களின் அமைப்பு செய்திகள் தங்கள் பகுதியில் நடைபெறும் நிகழ்ச்சிகளை வெளியிட செய்தி மற்றும் புகைப்படத்தை கீழ்உள்ள வாட்ஸ்ஆப்பிற்கு அனுப்புங்கள்
94452 65389

# தமிழகத்தில் 8.5 ஜிகாவாட் சூரியசக்தி மின்உற்பத்தி

**சென்னை, ஏப்.29:**

தமிழகத்தில் 8.5 ஜிகாவாட் சூரியசக்தி மின்உற்பத்தி செய்யப்படுகிறது என்று தமிழ்நாடு சூரிய ஆற்றல் உற்பத்தியாளர்கள் சங்கத் தலைவர் பி.சிவக்குமார் கூறினார்.

சென்னை, நந்தம்பாக்கம், வர்த்தக மையத்தில் தென்னிந்திய அளவிலான 10 -ஆவது ஆண்டு புதுப்பிக்கத்தக்க எரிசக்தி குறித்த கண்காட்சி மற்றும் கருத்தரங்கின் தொடக்க விழா திங்கள்கிழமை நடைபெற்றது.

நிகழ்வில், ஃப்ராஸ்ட் அன்ட் சலீவன் நிறுவனத்தின் பொருளாதார பகுப்பாய்வு இணை இயக்குநர் நேஹா தாமஸ், ஆஸ்திரேலிய துணைத் தூதர் சிலாய் ஜாக்கி, இன்ஃபார்மா மார்க்கெட்ஸ் இன் இந்தியா நிறுவனத்தின் ஆற்றல் துறைக்கான மூத்த குழு இயக்குநர் ரஜ்னீஷ் கட்டார் உள்பட தொழில்துறைத் தலைவர்கள், உலகளாவிய பிரதிநிதிகள் பலர் கலந்து கொண்டனர். வரும் புதன்கிழமை (ஏப்.29) வரை இந்த கண்காட்சி மற்றும் கருத்தரங்கு நடைபெறுகிறது.

கண்காட்சி குறித்து இன்ஃபார்மா மார்க்கெட்ஸ் இன் இந்தியா நிறுவன நிர்வாக இயக்குநர் யோகேஷ் முத்ராஸ் கூறுகையில், புதுப்பிக்கத்தக்க ஆற்றல், சேமிப்பு மையமாக தமிழகம் தொடர்ந்து வளர்ந்து வருகிறது. இதனால் உள்நாடு, உலகளாவிய பங்குதாரர்களுக்குப் பரந்த வாய்ப்புகள் கிடைக்கின்றன.

அக்டோபர் 2025 நிலவரப்படி, இந்தியாவின் மொத்த நிறுவப்பட்ட மின் உற்பத்தித் திறனில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தியின் பங்களிப்பு 39.66 சதவீதமாக உள்ளது என்றார்.

தமிழ்நாடு சூரிய ஆற்றல் மேம்பாட்டாளர்கள் சங்கத் தலைவர் பி.சிவக்குமார் கூறுகையில், 2030-ஆம் ஆண்டுக்குள் இந்தியாவில் 280 ஜிகாவாட், தமிழ்நாட்டில் 20 ஜிகாவாட் சூரிய மின்சக்தி உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் இப்போது 8.5 ஜிகாவாட் சூரிய மின்சக்தி உற்பத்தி செய்யப்படுகிறது. நிர்ணயிக்கப்பட்ட 20 ஜிகாவாட் இலக்கை அடைய வணிக நிறுவனங்கள், தொழிற்சாலைகளில் சூரிய மின்சாரம் உற்பத்தி செய்ய ஏதுவாக நெட் மீட்டர்கள் பொருத்தவும், நெட்வொர்க் கட்டணத்தை குறைக்கவும் தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இத்துடன், பொதுமக்களிடையே சூரிய மின்சக்தி பயன்பாடு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்றார் அவர்.

# அண்ணா பல்கலை. இணைப்புக் கல்லூரி அங்கீகார விண்ணப்பங்களுக்கு புதிய விதிகள்

**சென்னை, ஏப்.29:**

வரும் கல்வியாண்டுக்கு அண்ணா பல்கலைக்கழக இணைப்பு பொறியியல் கல்லூரி அங்கீகாரம் கோரும் விண்ணப்பங்களுக்கு கடுமையான வழிகாட்டி விதிகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இது குறித்த அண்ணா பல்கலைக்கழக சுற்றறிக்கை விவரம் வருமாறு:

அண்ணா பல்கலை நிறுவன இணைப்பு மையத்தில் 2026-27 கல்வியாண்டுக்கான இணைப்பு அங்கீகாரத்தைப் பெற விரும்பும் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனங்கள் இணையவழி மூலமாக மட்டும் விண்ணப்பிக்க வேண்டும். பொறியியல் கல்லூரி ஆசிரிய உறுப்பினர்களின் தனிப்பட்ட மற்றும் கல்விசார் விவரங்களை இணையதளத்தில் பதிவு செய்ய வேண்டும். ஆசிரியரின் புகைப்படம், கேமரா மூலம் நேரடியாகவும் அப்புகைப்படம் அந்தந்த நிறுவனத்தின் வளாகத்துக்குள்ளேயே எடுக்க வேண்டும். விண்ணப்பப் படிவத்திலேயே புகைப்படம் தானாகவே 'புவிக்குறியீடு' செய்யப்படும் என்பதால், நிறுவன வளாகத்திற்கு வெளியே எடுக்கப்படும் புகைப்படங்கள் இருப்பின், அந்த குறிப்பிட்ட ஆசிரியரின் விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

ஆசிரியர்களின் விவரங்கள் பதிவு செய்து முடித்ததும், ஒரு தனித்துவமான 10-இலக்க 'ஆசிரியர் அடையாள எண்' உருவாக்கப்பட்டு இது எதிர்கால தொடர்புகளுக்கும் பயன்படுத்திக் கொள்ளப்படும்.

சமர்ப்பிக்கப்பட்ட ஆசிரியர்களின் விவரங்களை, அந்தந்த நிறுவனத்தின் முதல்வர் மிகுந்த கவனத்துடன் சரிபார்க்க வேண்டும். ஒவ்வொரு ஆசிரியரின் விவரங்களையும், யூஐடிஏஐ மூலம் முறையாகச் சரிபார்க்கப்பட்ட 'பயோமெட்ரிக்' (விரல்ரேகை) முறையைப் பயன்படுத்தி சரிபார்த்து உறுதிப்படுத்துவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

அகில இந்திய தொழில்நுட்பக் கல்வி கவுன்சில் (ஏஐசிடிஇ) -ஆல் வழங்கப்பட்ட 'அங்கீகார நீட்டிப்பு' ஆணை, மாணவர் சேர்க்கை விவரங்கள், வழங்கப்படும் இளநிலை, முதுநிலைப் படிப்புகள், ஆய்வக வசதிகள், வகுப்பறைகளின் இருப்பு நிலை, நூலக வசதி, கட்டட வரைபடங்கள், நிலம் தொடர்பான விவரங்கள் போன்றவற்றை, அந்தந்த நிறுவனத்தின் முதல்வர் மட்டுமே தொடர்புடைய ஆவணங்களுடன் இணைத்து விண்ணப்பத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.

ஏற்கெனவே நிரந்தர இணைப்பு அங்கீகாரம் பெற்றுள்ள கல்வித் திட்டங்கள் தொடர்பான விவரங்களையும் விண்ணப்பத்தில் சமர்ப்பிக்க வேண்டும். விண்ணப்பத்தை சமர்ப்பித்த பின்னர், நிறுவன முதல்வர் அந்த விண்ணப்பத்தின் அச்சுப்பிரதியை எடுத்து, அதில் உரிய இடங்களில் கையெப்பம் இட வேண்டும். இந்த நகலை, ஆய்வுக் குழுவினர் ஆய்வு மேற்கொள்ள வரும்போது அவர்களிடம் சமர்ப்பிக்க வேண்டும். இவை உள்ளிட்ட 9 புதிய விதிமுறைகள் வழங்கப்பட்டுள்ளன.

# வேளச்சேரி - பரங்கிமலை மின்சார ரயில் சேவைக்கு அமோக வரவேற்பு: தினமும் 28,000 பேர் பயணம்

**சென்னை, ஏப்.29:**

வேளச்சேரி - பரங்கிமலை இடையே பறக்கும் மின்சார ரயில் சேவை தொடங்கி 42 நாட்களை கடந்த நிலையில், நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது. தற்போது நாள்தோறும் 28 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பயணிக்கின்றனர்.

இத்தடத்தில் உள்ள புழுதிவாக்கம் நிலையத்தில் மின்தூக்கி, நகரும் படிக்கட்டு போன்ற வசதிகளை ஏற்படுத்த வேண்டும் என பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சென்னையின் பொது போக்குவரத்தில் முக்கியப் பங்கு வகிக்கிறது புறநகர் மின்சார ரயில் சேவை. சென்ட்ரல், கடற்கரை நிலையங்களில் இருந்து பல்வேறு இடங்களுக்கு மின்சார ரயில்கள் இயக்கப்படுகின்றன.

இதில் கடற்கரை - வேளச்சேரி இடையே இயக்கப்படும் பறக்கும் ரயில் வழித்தடத்தில் தினசரி ஒரு லட்சத்துக்கும் மேற்பட்டோர் பயணிக்கின்றனர்.

இதற்கிடையே, சென்னை கடற்கரை - வேளச்சேரி பறக்கும் ரயில் தடத்தின் விரிவாக்கமாக, வேளச்சேரி - பரங்கிமலை திட்டப் பணிகள் தொடங்கப்பட்டு 17 ஆண்டுகளுக்குப் பிறகு, கடந்த மார்ச் 14-ம் தேதி ரயில் சேவை தொடங்கியது.

இந்த வழித்தடம் மடிப்பாக்கம், கீழ்க்கட்டளை, புழுதிவாக்கம், ஆதம்பாக்கம், வேளச்சேரி உட்பட சுற்றுவட்டாரப் பகுதிகளைச் சேர்ந்த மக்களுக்கு பேருதவியாக உள்ளது. இத்தடத்தில் ஆரம்பத்தில் தினசரி 15 ஆயிரம் முதல் 20 ஆயிரம் பேர் பயணித்தனர்.

இது படிப்படியாக அதிகரித்து, தற்போது தினசரி 28 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பயணிக்கின்றனர்.

பரங்கிமலை ரயில் நிலையம் ஒரு முக்கிய போக்குவரத்து மையமாகத் திகழ்வதால் பயணிகளின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

இந்த நிலையத்தில் இருந்து புறநகர் மின்சார ரயில்கள், மெட்ரோ ரயில்கள் மூலமாக சென்னை நகரின் பல்வேறு இடங்களுக்கு எளிதில்செல்ல முடியும்.

இந்த ஆண்டு இறுதிக்குள் இத்தடத்தில் தினசரி பயணிப் போர் எண்ணிக்கை 30 ஆயிரத்தை கடந்து விடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஆதம்பாக்கம் நிலையம் அதேநேரம், ஆதம்பாக்கம் ரயில் நிலையத்தை விரைவில் திறக்க வேண்டும் என்றும், புழுதிவாக்கம் ரயில் நிலையத்தில் அடிப்படை வசதிகளை ஏற்படுத்த வேண்டும் என்றும் பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதுகுறித்து, புழுதிவாக்கத்தைச் சேர்ந்த ஜி.சிவக்குமார் கூறும்போது, "பரங்கிமலை - வேளச்சேரி தடத்தில் உள்ள புழுதி வாக்கம் நிலையம் தற்போது பரபரப்பாக காணப்படுகிறது. ஆனால், இந்த நிலையத்தில் பயணிகளுக்கான அடிப்படை வசதிகள் போதுமானதாக இல்லை.

மின்தூக்கிகள், நகரும் படிக்கட்டு வசதிகளை ஏற்படுத்தி, முறையாகப் பராமரிக்க வேண்டும். ரயில் நிலையம், தூய்மையாகவும், சுகாதாரமாகவும் பேணப்பட வேண்டும். அதேபோல், ஆதம்பாக்கம் ரயில் நிலையத்தை விரைவில் மக்கள் பயன்பாட்டுக்கு கொண்டுவர வேண்டும்" என்றார்.

இதுகுறித்து, சென்னை ரயில்வே கோட்ட அதிகாரிகள் கூறும்போது, "புழுதிவாக்கம் நிலையத்தில் மின்தூக்கி, நகரும் படிக்கட்டு போன்ற வசதிகளை ஏற்படுத்தும் பணி செயல்பாட்டில் உள்ளது. ஆதம்பாக்கம் ரயில் நிலையம் மக்கள் பயன்பாட்டுக்கு விரைவில் திறக்கப்படும்" என்றனர்.

## மாமல்லபுரம் தலசயன பெருமாள் கோவிலில் சித்திரை பிரம்மோற்சவம்: சேஷ வாகன சேவை



**சென்னை, ஏப்.29:**

மாமல்லபுரத்தில் உள்ள தலசயன பெருமாள் கோவிலில் ஆண்டுதோறும் சித்திரை பிரம்மோற்சவ விழா விமரிசையாக நடைபெறும். அவ்வகையில் இந்த ஆண்டுக்கான பிரம்மோற்சவ விழாவிற்காக கடந்த 16-ம் தேதி பந்தக்கால் நடப்பட்டது. 24-ம் தேதி பிரம்மோற்சவ கொடியேற்றம் நடைபெற்றது. தொடர்ந்து பெருமாள் ஸ்ரீதேவி, பூதேவியுடன் மாடவீதிகளில் வலம் வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தார். இரவு மங்களகிரி உற்சவங்கள் நடைபெற்றன.

விழா நாட்களில் தினமும் சிறப்பு பூஜைகள், வாகன சேவை நடைபெறுகிறது. பல்வேறு வாகனங்களில் உற்சவர்கள் எழுந்தருளி பக்தர்களுக்கு அருள்பாலிக்கின்றனர். விழாவின் நான்காம் நாளான சேஷ வாகன சேவை நடைபெற்றது. பெருமாள் ஸ்ரீதேவி, பூதேவியுடன் சிறப்பு அலங்காரத்துடன் சேஷ வாகனத்தில் எழுந்தருளி பக்தர்களுக்கு காட்சியளித்தார். இந்நிகழ்வில் திரளான பக்தர்கள் கலந்துகொண்டு தரிசனம் செய்தனர். விழாவின் முக்கிய நிகழ்ச்சியான கருட சேவை இன்று நடைபெறுகிறது. 30-ந் தேதி தேரோட்டம் நடைபெற உள்ளது.

## தூத்துக்குடி, மதுரை, திருச்சி, கோவையில் இருந்து சென்னைக்கு விமான கட்டணம் பல மடங்கு உயர்வு

**சென்னை, ஏப்.29:**

தமிழக சட்டப்பேரவை தேர்தல் கடந்த 23-ம் தேதி நடைபெற்றது. சென்னை, புறநகர் பகுதிகளில் வசிக்கும் லட்சக்கணக்கான மக்கள் தேர்தலில் வாக்களிப்பதற்காக சொந்த ஊர்களுக்குச் சென்றனர்.

வாக்களித்த பின்னர் நேற்று முன்தினம் மாலை முதல் சென்னைக்கு வரத் தொடங்கினர். பேருந்து, ரயில்களில் டிக்கெட் கிடைக்காதவர்கள் விமானங்களில் சென்னை செல்வதற்கு திட்டமிட்டனர்.

நேற்று முன்தினம் இரவில் தூத்துக்குடி, மதுரை, திருச்சி, கோவை ஆகிய விமானங்களில் பயணிகள் கூட்டம் அலைமோதியது. ஓரிரு விமானங்களில் மட்டுமே, சில டிக்கெட்டுகள் இருந்தன. அந்த டிக்கெட் கட்டணம் பலமடங்கு அதிகரித்திருந்தது. தூத்துக்குடி - சென்னைக்கு வழக்கமாக ரூ.5,354 இருந்த கட்டணம் நேற்று முன்தினம் இரவுமுதல் நேற்று காலை வரை ரூ.17,089 வரையும், மதுரை - சென்னைக்கு ரூ.5099 ஆக இருந்த கட்டணம் ரூ.32,508 வரையும், திருச்சி - சென்னைக்கு ரூ.4,551 ஆக இருந்த கட்டணம் ரூ.14,310 வரையும், கோவை - சென்னைக்கு ரூ.4,634 ஆக இருந்த கட்டணம் ரூ.11,149 வரையும் உயர்ந்திருந்தன.

## கூவம் திரிபுராந்தக சுவாமி கோவிலில் சித்திரை பிரம்மோற்சவ விழா.. கோலாகலமாக நடைபெற்ற தேரோட்டம்



**திருவள்ளூர், ஏப்.29:**

திருவள்ளூர் அடுத்த கடம்பத்தூர் ஒன்றியம், கூவம் கிராமத்தில் அருள்மிகு திரிபுரசுந்தரி அம்பாள் சமேத திரிபுராந்தக சுவாமி கோவில் அமைந்துள்ளது. இந்த கோவிலில் உள்ள திரிபுராந்தக சுவாமியை அர்ச்சகர்கள்கூட தொட்டு பூஜை செய்தது கிடையாது. இதன் காரணமாக சுவாமியை தீண்டா திருமேனியர் என்று அழைப்பார்கள்.

இந்தக் கோவிலில் சித்திரை பிரம்மோற்சவ திருவிழா கடந்த 21ஆம் தேதி கொடியேற்றத்துடன் துவங்கியது. இதனைத் தொடர்ந்து தினமும் காலையிலும் மாலையிலும் வாகன வீதி உலா நடைபெறுகிறது. பல்வேறு வாகனங்களில் சோமாஸ்கந்தர் திருவீதி உலா வந்து பக்தர்களுக்கு அருள்பாலிக்கிறார்.

விழாவின் முக்கிய நிகழ்ச்சியான தேரோட்டம் இன்று நடைபெற்றது. வண்ண மலர்களால் அலங்கரிக்கப்பட்ட திருத்தேரில் திரிபுர சுந்தரி அம்பாளுடன் திருபுராந்தக சுவாமி எழுந்தருளியதும், தேர் வடம்பிடிக்கப்பட்டது. இதில் ஏராளமான பக்தர்கள் கலந்துகொண்டு தேர் இழுத்தனர். கூவம் சுற்றுவட்டார பகுதிகளைச் சேர்ந்த திரளான பொதுமக்கள் தரிசனம் செய்தனர். தேர் சென்ற வீதியில் ஒவ்வொரு வீடுகளிலும் சுவாமிக்கு பொதுமக்கள் கற்பூர தீபாராதனை காண்பித்து வழிபாடு செய்தனர். செவ்வாய்க்கிழமை இரவு திருக்கல்யாண உற்சவம் நடைபெற உள்ளது.

மே 4ஆம் தேதி பஞ்சமூர்த்தி அபிஷேகம் மற்றும் பஞ்சமூர்த்தி ரிஷப வாகன சேவையுடன் சித்திரை பிரம்மோற்சவ பெருவிழா நிறைவு பெறுகிறது.

## ஆரணி கோட்டை கைலாசநாதர் கோவில் தேரோட்டம்: திரளான பக்தர்கள் பங்கேற்பு




**ஆரணி, ஏப்.29:**

ஆரணி கோட்டை பகுதியில் அறம் வளர் நாயகி உடனுறை கைலாச நாதர் கோவிலில் சித்திரை பெருவிழா கடந்த 21 ஆம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கியது.

தினமும் காலை, மாலை இரு வேளையும் உற்சவர் திருவீதி உலா நடைபெற்று வந்தது.

விழாவின் முக்கிய நிகழ்வாக இன்று காலை தேரோட்டம் நடைபெற்றது. இதனையொட்டி மலர்களால் அலங்கரிக்கப்பட்ட உற்சவர், தேரில் எழுந்தருளினார். சிறப்பு பூஜைக்குப் பின்னர் தேர் வடம் பிடிக்கப்பட்டது. சிவபுராணம் பாடியபடி திரளான பக்தர்கள் வடம் பிடித்து தேர் இழுத்தனர். தேரோடும் வீதியெங்கும் பக்தர்கள் உப்பு, பொரி உருண்டை, மிளகு, சாக்லேட் போன்றவைகளை இறைத்து வழிபட்டனர். மேலும் வியாபாரிகள் ஆங்காங்கே அன்னதானம் வழங்கினர். நீர்மோர், பானகம், குளிர்பானங்கள், ஐஸ்கிரீம் போன்றவையும் வழங்கப்பட்டன.

## திருக்கழுக்குன்றம் வேதகிரீஸ்வரர் கோவிலில் சித்திரை பெருவிழா தேரோட்டம்



**செங்கல்பட்டு, ஏப்.29:**

செங்கல்பட்டு மாவட்டம் திருக்கழுக்குன்றத்தில் பிரசித்திபெற்ற வேதகிரீஸ்வரர் கோவிலில் சித்திரை பெருவிழா கடந்த 21-ம் தேதி தொடங்கி நடைபெற்று வருகிறது. தினமும் சிறப்பு பூஜைகள், சுவாமி வீதி உலா நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன.

24-ம் தேதி வெள்ளிக்கிழமை புருஷா மிருகம் வாகனத்தில் பஞ்சமூர்த்திகள் திருவீதி உலா வந்தனர். முத்திகை நல்லான் குப்பம் குழுவினர் சீர்பாதம் தாங்கினர். இதில் ஏராளமான பக்தர்கள் கலந்துகொண்டு சாமி தரிசனம் செய்தனர்.

விழாவின் ஏழாம் நாளான இன்று காலையில் வேதகிரீஸ்வரர், திரிபுரசுந்தரி அம்மன், விநாயகர், முருகர், சண்டிகேஸ்வரர் ஆகிய சுவாமிகளுக்கு சிறப்பு அபிஷேகம், சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டது. இந்நிகழ்வில் ஏராளமான பக்தர்கள் கலந்துகொண்டு சாமி தரிசனம் செய்தனர்.

அதன்பின்னர் முக்கிய நிகழ்வான பஞ்சரத தேரோட்டம் விமரிசையாக நடைபெற்றது. இதில் செங்கல்பட்டு, சென்னை மற்றும் சுற்றுவட்டார பகுதிகளைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்துகொண்டு வடம்பிடித்து தேர் இழுத்தனர்.

தேரோட்டத்தை முன்னிட்டு விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. ஒரு சில அரசுப் பள்ளி மற்றும் தனியார் பள்ளிகளில் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.





வறுமை, நோய், அறியாமை மூன்றும் முற்றிலும் நீங்கும்
போர் என்னும் பொல்லா அரக்கனை பூமியில் இல்லாமல் ஆக்கினால்...!
தொடர்புக்கு: 9791667528



## நலம் தரும் மருத்துவம்

### சருமம் ஜொலிக்கவும், இளமையாக இருக்கவும் இந்த ஒரு பழம் போதும்!



நட்சத்திர வடிவில் இருக்கும் நட்சத்திரப்பழம் (கார்ம்போலா) என்று அழைக்கப்படுகிறது. இது ஆசிய நாடுகளில் அதிகம் காணப்படுகிறது. இதன் தோலும் சாப்பிடக்கூடியதாகும். நல்ல பழுத்த பழம் மஞ்சள் நிறத்தில் இருக்கும் காயாக இருக்கும் போது பச்சை நிறத்தில் இருக்கும்.

இந்த பழம் அதிக அளவில் மலேஷியாவில் உற்பத்தி செய்யப்படுகிறது. இந்த மரத்தை எவர்கிரீன் மரம் என்று அழைக்கிறார்கள். இந்தப் பழத்தை அறிமுகப்படுத்தியவர்கள் போர்ச்சுகீசியர்கள் ஆவர்.

இது புளிப்பு மற்றும் இனிப்புச் சுவை கொண்டது. இது சாலட் மற்றும் ஜூஸ்களில் சேர்க்கப்படுகிறது. குறைந்த கலோரி, நிறைந்த நீர்ச்சத்து, நார்ச்சத்து, காப்பர், மக்னீசியம் மற்றும் பி5 சத்து நிறைந்தது. இந்த பழம் உண்பதால் ஏற்படும் ஆரோக்கிய நன்மைகள் குறித்து இப்பதிவில் காண்போம்.

இதில் சிறந்த ஆன்டி-ஆக்சிடன்ட் மற்றும் வைட்டமின் சி சத்து உள்ளதால் ஆக்சிடேட்டிவ் அழுத்தத்திலிருந்து பாதுகாக்கிறது. இதன் சி சத்து நோயெதிர்ப்பு சக்தியை அதிகரிக்கிறது.

இதில் நார் சத்து அதிகம் உள்ளது. இதனால் மலச்சிக்கலை தடுத்து செரிமானத்தை ஆரோக்கியமாக வைக்கிறது. வயிறு வீக்கமோ மலச்சிக்கலோ ஏற்பட்டால் நீர்சத்து நிறைந்த இந்த பழத்தை உட்கொள்வது நல்லது. செரிமான சக்தி மேம்படும்.

இதில் பொட்டாசியம் உள்ளதால் நரம்புகளுக்கும் தசை இயக்கத்திற்கும் சிறந்தது, இரத்த அழுத்தத்தை கட்டுக்குள் வைக்கும்.

குறைந்த கலோரிகளும், அதிக நார்சத்தும் நிறைந்ததால் இதை உண்ணும்போது வயிறு நிரம்பிய உணர்வு ஏற்படும். இதன்மூலம் வேறு உணவுகளை நாடத் தோன்றாது. உடல் எடையும் கட்டுப்படும்.

இதன் ஆன்டி-ஆக்சிடன்ட்ஸ் ஆக்சிடேடிவ் அழுத்தத்தை குறைப்பதால் இளமையாக இருக்க வைக்கும்.

## வெயிலுக்கு ஏசி வாங்க பணமில்லையா? இந்த கேட்ஜெட்டை உடனே வாங்குங்க!




கோடை காலத்தில் ஏசி வாங்கலாம் என்று நினைத்தால் ஒருபக்கம் கரண்ட் பில் ஏறிவிடுமோ என்ற பயம், மறுபக்கம் பெரிய பட்ஜெட் என பல யோசனைகள் மனதில் ஓடும். சீலிங் ஃபேனில் இருந்து வரும் அனல் காற்றில் இருந்து தப்பிக்க ஒரு பெஸ்ட் ஆல்டர்நேட்டிவ் தான் இந்த டவர் ஃபேன்கள்.

குறைவான இடத்தை அடைத்துக்கொண்டு, அறை முழுவதும் மிக வேகமாகப் பரவும் வகையிலான காற்றைக் கொடுப்பது இதன் ஸ்பெஷாலிட்டி. தற்போது அமேசானில் பம்பர் ஆஃபரில் கொட்டிக்கிடக்கும் சில அருமையான டவர் ஃபேன் மாடல்களைப் பற்றி இந்தப் பதிவில் பார்க்கலாம் வாங்க.

ப்ரீமியம் தரத்தில் HIFRESH TOWER FAN!

பட்ஜெட் கொஞ்சம் அதிகமாக இருந்தாலும் பரவாயில்லை, ஒரு தரமான கேட்ஜெட் வேண்டும் என நினைப்பவர்களுக்கு இந்த மாடல் அட்டகாசமான சாய்ஸ். பிளேடுகள் இல்லாத இதன் மாடர்ன் டிசைன் குழந்தைகளுக்கும் மிகவும் பாதுகாப்பானது. இதில் ஐஸ் பேக்குகளைப் பயன்படுத்தும் வசதியும் இருப்பதால் குட்டி ஏசி போலவே இது செயல்படும். ரிமோட் கண்ட்ரோல் மற்றும் டச் வசதியுடன் வரும் இந்த மாடல், தற்போதைய மெகா தள்ளுபடியில் ₹10,999 ரூபாய்க்கு உங்களுக்குச் சொந்தமாகும்.

அட்வான்ஸ் டெக்னாலஜியில் CASA COPENHAGEN AEROLOOP TOWER FAN!

மிகவும் நேர்த்தியான டிசைன் மற்றும் லேட்டஸ்ட் வசதிகளுடன் உங்கள் வீட்டை ரொம்பவே ஆடம்பரமாகக் காட்ட இந்த மாடல் சூப்பராகப் பொருந்தும். பிளேடு இல்லா தொழில்நுட்பம், டிஸ்ப்ளே மற்றும் பல மணி நேரங்கள் செயல்படும் டைமர் வசதி என அத்தனை ஸ்பெஷல் அம்சங்களும் இதில் உள்ளன. சுமார் 70 டிகிரி கோணத்தில் சுழன்று காற்றை வீசும் இந்த பிரீமியம் மாடலை வெறும் ₹8,549 ரூபாய்க்கு ஆர்டர் செய்து மகிழலாம்.

பட்ஜெட்டில் கலக்கும் SYMPHONY SURROUND BLADELESS TOWER FAN!

பாதுகாப்பான மற்றும் அதே சமயம் பிரபலமான பிராண்டில் டவர் ஃபேன் தேடுகிறீர்கள் என்றால், சிம்பொனி நிறுவனத்தின் இந்த மாடல் சிறந்த தேர்வாக இருக்கும். எளிய கண்ட்ரோல் நாப் மற்றும் குறைவான மின்சாரம் செலவாகும் மோட்டார் என தினசரி பயன்பாட்டிற்கு இது ரொம்பவே ஏற்றது.

கிரே நிறத்தில் அழகாகத் தோற்றமளிக்கும் இந்த ஃபேன் வெறும் ₹5,999 ரூபாய்க்கு ஆஃபரில் கிடைக்கிறது.

குறைந்த விலையில் IBELL DELUXE & PREMIER TOWER FAN!: அதிக பணம் செலவழிக்காமல் ஒரு தரமான டவர் ஃபேனை எதிர்பார்க்கிறீர்கள் என்றால் இந்த இரண்டு மாடல்களும் உங்களை ஏமாற்றாது.

ஐபெல் மாடல் சுமார் 25 அடி தூரம் வரை காற்றை வீசும் திறனுடன் வெறும் ₹3,460 ரூபாய்க்கு கிடைக்கிறது. அதேபோல, 180 டிகிரி சுழலும் ஆட்டோ ஸ்விங் வசதியுடன் கூடிய பிரீமியர் ஃபேன் ஆஃபர் விலையில் ₹3,998 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. இரண்டுமே எந்த சத்தமும் இன்றி மிக அமைதியாக இயங்கும் திறன் கொண்டவை.

இந்த சுட்டெரிக்கும் வெயிலைச் சமாளிக்க உடனடியாக ஒரு தீர்வைத் தேடுபவர்களுக்கு இந்த டவர் ஃபேன்கள் நிஜமாகவே ஒரு வரப்பிரசாதம்தான். மேலே குறிப்பிட்ட அனைத்து மாடல்களுமே அதன் விலைக்கு ஏற்ற தரத்துடனும், வீட்டின் எந்த மூலைக்கும் எளிதாக எடுத்துச் செல்லும் வசதியுடனும் வருகின்றன.

முக்கியமாக ஏசியுடன் ஒப்பிடும்போது இவற்றின் மின்சார செலவு மிக மிகக் குறைவு.

கோடைக்கால ஆஃபர்கள் முடிவதற்குள் உங்களுக்குப் பிடித்தமான, உங்கள் பட்ஜெட்டிற்கு ஏற்ற மாடலை உடனே லிங்க்கை கிளிக் செய்து ஆர்டர் பண்ணுங்க.

# "வராத மாப்பிள்ளை"



"மாப்பிள்ளை வீட்டுக்காரங்க வர்றாங்க" என்று ராதாவின் வீடு முழுக்க உற்சாகம்.
ஆனால் அவர்கள் வரவில்லை.
மாறாய் ஒரு போன் வந்தது.
"ஒரு சின்ன ஆக்ஸிடெண்ட்" என்று.. அன்று இரவு, ராதாவின் மொபைலுக்கு ஒரு மெசேஜ் வந்தது. "நான்தான் வர வேண்டிய மாப்பிள்ளை...... ஆக்ஸிடெண்ட் எதுவும் இல்லை.. நான்தான் வேணுமின்னே வராம இருந்தேன்." அவள் அதிர்ச்சியில், "ஏன்?" கேட்டாள்.
"நான் ஏற்கனவே கல்யாணம் ஆனவன்.... நானும் அவளும் பிரிந்து வாழ்ந்திட்டிருக்கோம்.... என் வீட்டுல அதை மறைச்சு மீண்டும் கல்யாணம் பண்ண நினைக்கிறாங்க....உங்களை ஏமாற்ற நான் விரும்பல..."
அடுத்த நாள் ராதா அவனைச் சந்தித்தாள். அவன் கண்களில் நேர்மை இருந்தது.
அவன் கதையை முழுதாய்க் கேட்டு முடித்தவள் மறுநாளே அவன் மனைவி ஜோதியைச் சந்தித்தாள்.
"நீங்க ஒருத்தருக்கொருத்தர் காதலிச்சீங்கதானே... அது உண்மைக் காதல் தானே.... அப்புறம் ஏன் சீக்கிரமே உடைஞ்சிடுச்சு?... அப்படின்னா அது சும்மா பொழுது போக்குக் காதலா?" ராதா கேட்க, ஜோதியால் பதில் சொல்ல முடியவில்லை
தொடர்ந்து அந்த ஜோதியுடன் பேசியதி ராதா புரிந்து கொண்டது, 'அந்தப் பிரிவு தற்காலிகமே, அவள் இன்னமும் கணவனை நேசிக்கிறாள்' என்கிற உண்மையை.
"மீண்டும் ஆரம்பிக்கலாமா?" ராதா கேட்க ஜோதி மறுக்கவில்லை.
அவர்கள் இருவரையும் ஒரு பொது இடத்தில் சந்திக்க வைத்து விட்டு ராதா நகர்ந்தாள்.
"ஒரு கல்யாணம் நின்றது... ஆனால் இன்னொரு கல்யாணம் காப்பாற்றப்பட்டது."



**முகில் தினகரன்**
கோயமுத்தூர்


# கீழ்வானம் சிவக்கும்

ஒரு அவசர வேலையா நாகை செல்ல வேண்டி இருந்ததால் ஏற்கனவே ரிசர்வேசன் செய்திருந்த என்னோட சீட்ல உட்கார்ந்து இருந்தேன் ஒரு எழுபது வயது இருக்கும் வயதான ஆனால் நல்ல ஆரோக்யமான தோற்றத்தில் இருக்கும் ஒருவர் ஏறி என்னோட சீட்டுக்கு பக்கத்திலே உட்காந்தார் அவருக்கு நடுப்பர சீட்டு ஒதுக்கி இருந்ததால் என்னோட சீட்டு வேண்டும் என்றார் நானும் பரவாயில்ல வயசானவரென கொடுத்துவிட்டேன் ஒரு மூனு மணி நேரத்தில் நாகை வந்துவிடும்.
அவர் பார்வையால் நன்றி தெரிவித்து ஜன்னலோரம் அமர்ந்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார் . தஞ்சாவூர் ஸ்டேசன் வந்தபோது ரெண்டுப்பேரு கண்ணு தெரியாதவங்க ரெண்டு கட்டையை வைத்து தாளம் போட்டப்படி பாட்டுப் பாடி கை ஏந்தினார்கள் சிலர் தூங்குவது போல பாவலா காட்ட,,, சிலர் முகத்தை வேறுபக்கம் திருப்பிக் கொண்டனர்
என் பக்கத்தில் உட்கார்ந்து இருந்த வயசானவர் அவர்களை கூப்பிட்டு இருவருக்கும் ரெண்டு நூறு ரூபாய் நோட்டை கொடுத்தார். நான் ஆச்சரியமாக அவரைப் பார்த்தேன். என்னோட ஆச்சரியத்தை உணர்ந்த அவர் லேசா சிரிச்சிட்டு திரும்பிக் கொண்டார் பிறகு அவரே சொன்னார்
" அவங்களுக்கு வேற வேலை செய்யமுடியாது இந்த உலகத்திலே வேற எதையும் ரசிக்கமுடியாது யாரும் வேலையும் தரமாட்டாங்க அவங்கக்கிட்ட இருக்குற திறமையையும் நம்ம போன்ற மனிதர்களையும் நம்பிதான் யாசகம் கேக்காமல் திறமைக்கு சன்மானம் கேக்குறாங்க,,, அவங்களுக்கு நாம செய்யலன்னா கடவுளா வந்து கருணைக் காட்டப் போறாரு" என்றார்
எனக்கு ஓங்கி அறைந்ததுப்போல இருந்தது
"அண்ணா,உங்க புள்ளங்க என்ன பன்றாங்க, பேரன் பேத்திங்க இருக்காங்களா? திருச்சியில் எங்க இருக்கீங்க? என்ன பன்றீங்கன்னு கேள்வியை அடிக்கினேன்
" எனக்கு சொந்தவூர் நாகப்பட்டினம்தான் இப்போ நான் கேரளாவில் பாலக்காட்ல இருக்கேன் எனக்கு கல்யாணம் ஆகலை"
நான் ஏன் கல்யாணம் ஆகல என்பதுப்போல பார்த்தேன் புரிந்துக்கொண்டவர் லேசா சிரித்தப்படி அடுத்த அதிச்சியை சொன்னார்
" என்னோட காதலி நாகப்பட்டினம் பக்கத்தில வேளாங்கண்ணிலதான் இருக்கா அவளப்பாக்க போறேன்"
மறுபடியும் அதிர்ச்சி
"காதலியா,,,,? இன்னுமா காதலிக்கிறீங்க கல்யாணம் செய்யலியா அல்லது இப்பதான் காதலிக்கிறீங்களா,,? அவங்களும் இன்னும் உங்கள காதலிக்கிறாங்களா,,?
"அவளுக்கு கல்யாணமாச்சு நான்தான் அவள் நினைவோட ஒண்டிக்கட்டையா கல்யாணம் செய்துக்காம இருக்கேன்"
"அவங்க இப்பவும் வேளாங்கண்ணியிலதான் இருக்காங்களா அண்ணா,,,?"
"அவங்க எங்க இருக்காங்கன்னு தெரியாது ஆனா வயசானப் பிறகு குறிப்பிட்ட இந்த வருசம் வேளாங்கண்ணி கொடியேற்றம் அன்னைக்கு சந்திப்போமுன்னு பேசி வச்சிருக்கோம் அவங்க ஒவ்வொரு கொடியேற்றம் நடக்கும்போதும் இங்க வருவாங்க,," "அவங்கள எப்படி கரெக்டா கண்டுப் பிடிப்பீங்க?"
"அம்பது வருசமா காதலிக்கிறேன் எத்தனை தடவ இந்த வேளாங்கண்ணி கடற்கரையில மணிக்கணக்கா உட்காந்து பேசி இருப்போம் காதலியை கண்டுப்பிடிக்கிறது அவ்வளவு சிரமமா,,,? அவள் என் இதயத்தில் மட்டும் இல்ல,, என் இரத்த நாளங்களில் சுத்திக்கொண்டு இருக்கிறாள் "
என்றப்படி கண் கலங்கினார் நான் கண்டும் காணாமல் விட்டேன் சிலப்பேரை சமாதானம் செய்தால் ரொம்ப அழ ஆரமித்துவிடுவார்கள் என்பதால். கொஞ்சநேரம் தலை கவிழ்ந்தப்படி இருந்தார் கர்சீப்பை எடுத்து கண்களை ஒற்றிக்கொண்டார் பிறகு நானே ஆரமித்தேன்
"அவங்க மேல இவ்வளவு லவ் இருக்கு கல்யாணம் செய்து இருக்கலாமே அண்ணா ஏன் விட்டீங்க"
"நான் இந்து மதம் அந்தப்பொண்ணு கிருஸ்த்துவர் நான் வேளாங்கண்ணி பீச்ல கடை வச்சிருந்தேன் வாராவாரம் சர்சுக்கு குடும்பத்தோடு வருவாங்க ஸ்டேசனரி பொருள்கள் என் கடையில் தான் வாங்குவாங்க நாங்க ரெண்டு பேரும் ஒருத்தரை ஒருத்தர் உயிருக்கு உயிரா காதலிச்சோம்" "முதன்முதலா நீங்க காதலிக்கிறதா எப்படி சொன்னீங்க அண்ணா"
" நான் சொல்லல அவங்கதான் ஒரு தடவ கடைக்கு வரும்போது ஒரு பாசிமணி வாங்கிட்டு பணம் தரும்போது அதுக்கூட சேர்த்து ஒரு லெட்டரும் கொடுத்தாங்க "
"ஓ...அப்படியா அதுல என்ன எழுதியிருந்தது"
"நீ நெனக்கிற மாதரி ஒன்னுமில்ல ஐ லவ் யூ ன்னு எழுதியிருந்தது எனக்கும் அவங்க மேல ஆசை இருந்தது அதனால ஒகே சொல்லிட்டேன்"
"ரெண்டுபேரும் காதலிச்சீங்க அப்புறம் ஏன் கல்யாணம் செய்யல அண்ணா"
"நானும் அவளும் அடிக்கடி பீச்ல மீட் பன்னுவோம்ல அதை யாரோ பாத்துட்டு அவங்க வீட்ல சொல்லிட்டாங்க,,, அவங்க வீட்ல அவளை மிரட்டி வெளியே வரவிடல இப்போமாதரி செல்போன் வசதி இருந்தா தகவல் கெடச்சி இருக்கும் அதுக்கும் வாய்ப்பில்லை அவள் என்ன செய்யவா"
" கேக்கவே சங்கடம்மா இருக்குங்க அண்ணா,,, நீங்க வேற கல்யாணம் செய்திருக்கலாமே,,,"




"செய்திருக்கலாம்,,, அவள்தான் என் ரத்தநாளங்களில் சுத்தி திரியுறான்னு சொன்னேனே பிறகு எப்படி,,,? வேற ஒரு பொண்ண கல்யாணம் செய்து போலியா வாழமுடியாது அது பாவம்,,"
"அவர் சிரித்தப்படி என்னை பார்த்தார் நான் அவர் கண்ணைப் பார்த்தேன் கலங்கி இருந்தது" நானும் அவங்கள போய் பார்க்கலாமென நினைத்தேன் அவரிடம் மெதுவா கேட்டேன் வாயேன் வந்துப் பாரேன் என்றார். வண்டி புத்தூர் இரயில்வே கேட் நெருங்கியதும் வேளாங்கண்ணி சாலையையும் மாதாக்கோவில் கோபுரம் தெரிவதையும் ஆசையோடு பார்த்தார் அவரது தவிப்பு கண்களில் தெரிந்தது பிறகு நாகையில் இறங்கி நான் ஒரு வேலையாக போய்விட்டேன் சாயங்காலம் அவர் ஒரு இடத்திற்கு வரச்சொல்லியிருந்தார் நான் அவர் சொன்ன ஆலய கேண்டின் அருகில் வந்து நிற்பதற்கு வந்தேன் எனக்கு முன்பாகவே அவர் வந்து நின்றார். ஒரு அஞ்சரை மணி இருக்கும் ஒரு அம்மா சுற்றும் முற்றும் பார்த்தப்படி ஒரு பத்துவயசு பொண்ணை கூட்டிக்கிட்டு வந்தார்,,, இந்த அண்ணா முகத்தில் ஒரு புன்னகை தெரிந்தது அவர்கள் வரும் திசையை நோக்கி வரவேற்பதுப்போல சென்றார் எனக்கு புரிந்துவிட்டது இவர்தான் அவர் காதலியென்று
இருவரும் ஒருவரை ஒருவர் சந்தித்ததும் இந்த அண்ணா கலங்கினார் அந்த அம்மாவின் உதடுகள் துடித்தது அழுகையை அடக்கினால் உதடு துடிக்கும் எனக்கு இந்த அனுபவம் உண்டு. பிறகு அந்த சின்னப் பாப்பாவை காண்பித்து இவதான் என்னோட பேத்தி துர்கா என்றார் அந்த பொண்ணு எங்க இருவரையும் யாரு இவங்க என்ற யோசனையில் பார்த்தது என்னைப் பார்த்து அந்த அம்மா யாரு இந்த பையன் என்றார் அந்த அண்ணா சொன்னார் "இது என்னோட மகன் ராஜா" என்றவுடன் அந்த அம்மா முகத்தில் அப்படி ஒரு சந்தோசம் நல்லா இருப்பா என்றார் வேற ஒன்னும் பேசல எதையோ யோசித்தப்படி நின்றார் அந்த அண்ணாவும்தான்
நான்தான் மௌனத்தை கலைத்தேன் "அம்மா நீங்க இங்கதான் இருக்கீங்களா" என்றேன்
"இல்லப்பா நான் பாண்டிச்சேரியில் இருக்கேன் வருசத்து ஒரு தடவ இங்கே கொடியேற்றத்திற்கு வருவேன் நாளைக்கு பொறப்படுவேன்"
உங்க ஹஸ்பெண்டு எப்படி இருக்காங்க என்றேன் ஒ...அவருக்கென்ன நல்லா இருக்காருன்னு அந்த அம்மா சொன்னதும் அந்த பாப்பா நிமிர்ந்து பாட்டியை சந்தேகமா பார்த்தது. அந்த அம்மா என்னிடம் "உங்க அம்மா எப்படி இருக்காங்க " என்று கேட்டாங்க "நல்லா இருக்காங்க" என்றப்படி நான் அந்த அண்ணா முகத்தைப் பார்த்தேன் சரி வாங்க ஏதாவது கேண்டினில் சாப்பிடலாம் என்றேன் அவர்கள் பரவாயில்ல உங்களை பார்த்ததே போதும் என்று சொன்னார்கள் பொறப்படுங்க பொழச்சிக்கிடந்தா அடுத்த வருசம் சந்திப்போம் என்று இருவரும் கோரசாக சொன்னார்கள் பிறகு அவங்க கோவிலை நோக்கியும் நாங்கள் பஸ் ஸ்டாண்டை நோக்கியும் வேறுவேறு பக்கத்தில் போனோம் அந்த அம்மாவிடம் செல்போன் நம்பர் வாங்கச்சொன்னார் அந்த அண்ணன் அதனால் அவங்க பின்னாடி வேகமா நடந்துப்போனேன் "பாட்டி நீ பெரிய ஆள்தான் எதுக்கு தாத்தா நல்லா இருக்கருன்னு பொய் சொன்னே" " நான் தாத்தா இல்லாம தனியே இருக்குறேன் அவங்களுக்கு தெரியக்கூடாது"
"எதுக்கு பாட்டி" "தாத்தா செத்துப்போய்ட்டாருன்னு தெரிஞ்சா அவங்க மனசு கஷ்டப்படும் ஏற்கனவே அவங்கள ரொம்ப கஷ்டப்படுத்திட்டேன்"
அவங்க ரெண்டுப்பேரும் பேசியதைக்கேட்டு போன் நம்பர் வாங்காமலே வந்துட்டேன் இவரு கல்யாணமாச்சுன்னு பொய் சொல்றாரு,,, அவங்க இறந்துப்போன புருசன் நல்லா இருக்காருன்னு பொய் சொல்றாங்க,,, ஒவ்வொருத்தரும் நம்ம கஷ்டம் நம்மோடவ இருக்கட்டுமென்று உள்ளுக்குள்ளவே புதைத்து வங்கிறாங்க,,,, ஏதோ சூழ்நிலைகளால் காதலர்கள் இணைய முடியாவிட்டாலும் உண்மையான காதல் எப்போதும் உயிர்ப்போடுதான் இருக்கும்போல,,, மேற்கே சூரியன் மறைந்தாலும் கீழ்வானம் சிவக்கதானே செய்யும்.

**-நாகை ஆசைத்தம்பி**
கோவை



# ஊர்மிளையின் உளமைமனம் 10



**.கே.பானுமதி நாச்சியார்**
சிவகிரி

## கரதூஷணன் வதம்

அப்பப்பா! எப்பேர்பட்ட சூர்பநகை! எனக்கும் நீங்கள் அவளைக் கொல்லாமல் விட்டுவிட்டு வந்தது சரியாகப் படவில்லை!" என்ற தன் கருத்தையும் சொல்லி ஓவியத்தை அகற்றி பட்டாபிஷேக ஓவியத்தை வைத்தாள்.

தொண்டை வறண்டது போல் இருக்கவே ஊர்மிளாவிடம் தாகசாந்திக்குத் தண்ணீர் கேட்டான் லக்குவனன். ஊர்மிளாவும் வெட்டிவேர் போட்ட குடிநீரைக் கொடுக்க மடமடவென்று குடித்தான். தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டவன் இந்நினைவுகளை வளர விடாமல் சுருக்கமாகச் சொல்லி முடித்து விட வேண்டும். வனத்தில் பத்து வருடங்கள் ஆனந்தமான வாழ்க்கைக்குப் பின் நடந்த முதல் கெட்ட சம்பவம். ஆனால் தொடர்கதை ஆகிப்போகி, இராவணன் வதத்தில் முடியும்போது நான்கு ஆண்டுகளை விழுங்கியது. எப்போதுமே இரவும் பகலும் சமமாக தான் இருந்தாலும் இரவின் உறக்கம் வரவில்லை என்றாலோ, இதோ சூர்ப்பநகை போன்று காமத்தில் உழன்றவரோ, சிந்தையில் சில ஆமைகள் நுழைந்தாலும் இரவு முழுதும் நீண்டு தான் போகும். ஒரு நாழிகை ஒரு யுகமாக மாறுவது போல் தோன்றுவதைப் போல அந்த நான்கு ஆண்டுகள் அப்பப்பா வேதனை வேதனை தான்! என்றான் இலக்குவனன். இதில் தன் சிந்தை தன்னிடமே இல்லாத ராமண்ணா தன்னுடன் பயணப்பட்ட சூழ்நிலைகளைச் சமாளித்து, ஆலோசித்துச் சீதாப்பிராட்டியை மீட்டது மிகப்பெரிய செயல் ஊர்மிளா!" என்றான்.

"ஆனால் தவறுகள் உங்கள் இருவர் பேரிலும் இருக்கின்றன தானே!" என்றாள்.

"எப்படிச் சொல்கிறாய்?"

அதற்குள் "நீங்கள் சொல்ல வந்த விஷயத்தை முடிக்கவில்லையே! ராமண்ணா எப்படித் தனியாகப் போரிட்டார்? நீங்கள் ஏன் கூட வர வேண்டாம் என்றார்? என்பதை விளக்கிச் சொன்னவுடன், நானும் என் பதிலைச் சொல்கிறேன்!" என்றாள்.

"சரி! ராமண்ணா என்னை வேண்டாம் என்பதற்குக் காரணங்கள் பல இருந்தாலும் அந்தச் சூர்ப்பனகை சீதாபிராட்டிக்கு ஏதாவது கேடு செய்வாள் என நினைத்தார். அதற்காக என்னைக் காவலுக்கு, அவர்களைப் பத்திரமாகப் பார்த்துக் கொள் நீ வர வேண்டாம்!" என்றார்.

"ஆம் நேரில் பார்த்தவன் அல்லவா? எனக்கும் அது சரியாகப்பட்டது. தாடகை வதம் போது நாங்கள் இருவர் மட்டுமே. அதனால் இணைந்தே போரிட்டோம். ஆனால் இங்கு சீதாப்பிராட்டியும் இருந்தார்களே! போரைப் பார்த்து பயந்து விடக்கூடாது அல்லவா? அந்தச் சூர்ப்பநகையைப் பார்த்துப் பயந்து அண்ணாவின் தோளைத் தழுவியவர். அதனால் நானும் சரி எனப் போகவில்லை!"

ஆனால் வில் முறிந்த போது பயந்துவிட்டேன். "ராமண்ணா என்ன செய்யப் போகிறார்? கரன் தூஷணன் கொடுந்திறம் என்ன செய்யப் போகிறதோ என்று!"

"திரும்பவும் என் தோள்கள் திணவெடுகின்றன. அதனால் போரிட வருகிறேன்!" என்ற போது ராமண்ணா "வேண்டாம்!" என்று மறுத்துவிட்டார்.

சீதையின் வருத்தத்தை அறிந்த லக்குவனன் சொல்லியும் ராமன் இசையாததால் வருந்துகின்ற சீதையின் அருகே காவலாய் அண்ணன் ஆணையை மறுத்துப் பழக்கம் இல்லாதவன் கண்ணீர் நிலன் உற நின்றான்.



சூர்ப்பநகை கரனிடம் "போர்க்கோலம் பூண்டு வந்து எதிர்த்த வீரன் இவன்!" என்று ராமனைச் சுட்டிக் காட்டினாள்.

வில்லேற்றத் துணிந்த ராமனின் வில் சினத்தினால் முறியவே என் செய்வது என இலக்குவன் நினைக்க ராமன் "வருணனிடம் தான் கொடுத்த பரசுராமனின் வில்லினைப் பெற்று கரதூஷணர்களை அழித்தான். அவள் நினைவினை ஒழித்தோம்".

ஆனால் அவள் இந்நிகழ்வினை மறக்கவே இல்லை போலும். ராமனிடத்தில் அன்பு காதல் என்றவள் என்னை உன் தம்பிக்குத் திருமணம் செய்து வை என ராமண்ணாவிடம் சொன்னவள் நல்லளும் அல்லர் என்றாரே அண்ணன் அவள் செய்த துன்பம் தான் என்பதை அறியக்கூடிய சந்தர்ப்பம் விபீடணனைக் கண்ட பின் தான் எங்களுக்கே புரிந்தது.

"எத்தனை கொடுமை ராமண்ணா வாழ்வில் தான்! எத்தனை பெண்கள்! தாய் வடிவில் கைகேயி அன்னை வனம் அனுப்பினாள். அதற்கு ஊக்குவிக்க என்றோ செய்த ஒரு குறும்பு விளையாட்டு, மந்தரை மனதில் கருக் கொண்டது".

"இதோ வனத்திலும் சூர்ப்பனகை என்று அரக்கி. காதல் கணவனை இழந்தவள். ஆனாலும் நல்லவள். ராமனைக் காணும் வரை. காதல் காமமாகி அதிலிருந்து விடுபடத் தெரியாமல் அதற்கு ஊக்குவிப்பாக ராமண்ணாவின் வாதங்களும் அசைக்க, சீதையை வெறுத்து ராமனை அடைய விரும்பி செய்த காரியம் தான் மிகப்பெரிய துன்பமாகப்பட்டது இல்லையா?"

"உண்மைதான்! ஆனால் நீ எதோ சொல்ல வந்தாயே! அது என்ன?" என்றான் லக்குவனன்.

"ஆமாம்! தாடகை வதம் தன்னில் தாடகை, சுபாகுவை வதம் செய்த நீங்கள் மாரீசனை வதம் செய்யாது விட்டது தவறு என்று உணர்ந்த மாதிரி தெரியவில்லையே என்று எனக்குப் பட்டது. மேலும் தாடகை பெண் என்று மறுத்தபோது முனிவர் அவளைப் பற்றிச் சொன்ன விஷயங்களை இன்னும் கவனமாக நீங்கள் கவனித்து இருக்க வேண்டும் என்றும் என் மனதில் பட்டது.

"கரனுடன் போர் புரிய சென்றபோது சீதை வருத்தம் கொண்டபோது, பொன்மானைப் பிடிக்க இராமன் சென்றபோது நீங்கள் பிடித்து தந்திருக்கலாம் அல்லவா?"

"இதுபோன்ற கேள்விகளுக்கு எத்தனை பதில்கள் வந்தாலும் உங்கள் சூழ்நிலையில் நான் வாழவில்லை என்பதால் இக் கேள்விகளுக்கு நானே ஒரு பதிலைச் சொல்லிச் சமாதானப்படுத்திக் கொள்வது தவறு தானே என்று தோன்றியது!" என்றாள்.

ஆமாம் காலம் ஒரு விசித்திரம். நாம் வாழும் பொழுதில் அதன் பயனை எதிர்பார்க்காமல் அதனை எதிர்கொள்வதில் வேறுபாடு இருக்கச் செய்து பின் நாம் செய்தது தவறா சரியா என உணர வைத்து கடந்து போகிறது. அதனால் நமக்கு ஏற்படும் அனுபவமே கடவுள் எனின் எதனை எப்படி வாழ வேண்டும் என்பது நமது விதியாக தானே நினைக்கத் தோன்றுகிறது.

சீதையின் வாழ்வில் அந்த நான்கு ஆண்டுகள் மிகவும் கொடுமை தான். ஆனாலும் பொறுமையாக எதுவுமே நடக்காதது போல் பட்டத்து ராணியாக முடி சூட்டிக்கொண்டு அயோத்தி பிரதிஜைகளின் மாதாவாக திகழ்கிறாள். ஆனால் பிரஜைகள் எல்லார் மனதிலும் சீதையின் வரலாறு பரவலாகப் பேசப்பட ஆரம்பித்தது. வனத்திற்குச் சென்றது ஆர்வமாகவும் ஆசையுடனும் கேட்டனர். ஆனாலும் பெண்கள் வனம் செல்லுதல் என்பது பாதுகாப்பற்றது எனச் சிலர் அபிப்ராயங்களும் சொல்ல ஆரம்பித்தனர்.

இதன் விளைவைச் சீதை எவ்வாறு எதிர்கொள்வாள் என்ற நினைப்புடன் ஊர்மிளா லக்குவனனுடன் அத்தாணி மண்டபம் நோக்கி நகர்ந்தாள்..

- தொடரும்

# திகில் அல்ல தியாகமே !!

"எங்கள் ஊர் திருவிழா" ஸ்ரீ பூமி நீளா, ஸ்ரீ மாதவப் பிரியா சமேத ஸ்ரீ மாதவப் பெருமாள்- மதூர். செங்கல்பட்டு மாவட்டம், அச்சரப்பாக்கம் ஒன்றியம், எலப்பாக்கத்திற்கு அருகில் மூன்று கிலோ மீட்டர் தூரத்தில் மதூர் கிராமம் உள்ளது. இது மிகவும் அழகான மற்றும் அமைதியான கிராமம் ஆகும். மதூர் கிராமத்தில் பேருந்து நிறுத்துமிடத்தில் செல்லியம்மன் கோவில் உள்ளது இது காவல் தெய்வம். அந்தக் கோவிலில் பக்கத்தில் ஒரு பாதை செல்கிறது .அதன் வழியாக ஊரின் உள்ளே செல்லலாம். ஊரின் மத்தியில் பம்ரீ மாதவப் பெருமாள் திருக்கோயில் உள்ளது. கோவிலின் முன்பு கல்லாலான கருட கம்பம் ஒன்று உள்ளது .கோவில் மிகவும் பழமை வாய்ந்தது. மேற்கு திசையை நோக்கி மாதவப் பெருமாள் சன்னதி உள்ளது. பெருமாள் மேற்கு திசை நோக்கி பக்தர்களுக்கு சேவை சாதிக்கிறார். பெருமாள் சன்னதிக்கு எதிரில் கிழக்கு நோக்கி ஆஞ்சநேயர் சன்னதி உள்ளது. ஆஞ்சநேயர் சன்னதிக்கு முன்பாக 100 கோடி ராம நாமாக்கள் எழுதிய ஸ்ரீ ராம ஸ்துபி கட்டப்பட்டுள்ளது. அதற்கு முன்பாக கருட ஆழ்வார் சன்னதி உள்ளது .கோவிலை சுற்றி பூ செடிகளும், துளசிச் செடிகளும், மரங்களும் உள்ளன. இந்த கோவிலில் வரு டா வருடம் ஆவணி மாதம் ஹஸ்தம் நட்சத்திரத்தில் ஸ்ரீ மாதவப் பெருமாள் அவதார உற்சவம் நடைபெற்று வருகிறது. நாளடைவில் பிரசித்தி பெற்று வெளியூரில் இருந்து பக்தர்கள் தரிசனம் செய்ய வர ஆரம்பித்தார்கள். அவர்கள் மனதால் நினைத்த காரியம் நிறைவேறுகிறது. மிகவும் சக்தி வாய்ந்த பெருமாள். நாம் எதை கேட்கிறோமோ அதை பகவான் கொடுப்பான் என்ற நம்பிக்கை மக்களுக்கு உள்ளது . அதனால் மேலும் பெருமாளை தரிசனம் செய்ய தொலை தூரங்களில் இருந்தும் பக்தர்கள் வருகை புரிந்தார்கள். மேலும் பக்தர்களின் வேண்டுகோளுக்கு இணங்க கோடை உற்சவம் மே மாதம் கடைசி ஞாயிற்றுக்கிழமை அன்று சிறப்பான திருவிழாவாக நடத்த ஆரம்பிக்கப்பட்டது. அன்றைய தினம் மூலவர் மாதவப் பெருமாளுக்கு காலையில் பலவிதமான பூக்களால் அலங்காரம் செய்யப்பட்டு பார்ப்பதற்கு கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும். பிறகு 11 மணி அளவில் உற்சவமூர்த்தியான பெருமாள், தாயார், ஆண்டாள், ஆஞ்சநேயர், சக்கரத்தாழ்வார் மற்றும் தேசிகன் ஆகியோருக்கு சிறப்பு திருமஞ்சனம் நடைபெறும். பெருமாளுக்கு ஏலக்காய் மாலை, பாதாம் மாலை, திராட்சை மாலை, வெட்டிவேர் மாலை,துளசி மாலை போன்ற மாலைகள் சாத்தி பட்டாடை அணிவித்து பலவித ஆபரணங்களை சாத்தி பெருமாளுக்கு அலங்காரம் செய்வார்கள்.



பக்தர்களுக்கு தெய்வீக காட்சியாக இருக்கும்.காண கண்கோடி வேண்டும். திருமஞ்சனத்தின் முடிவில் பெருமாளுக்கு கற்பூர ஆரத்தி, தீப ஆரத்தி நடைபெறும். பக்தர்கள் அனைவரும் 'மாதவா.. மாதவா'என பக்தியுடன் பெருமாளை மனம் உருக வேண்டிக் கொள்வார்கள். பக்தர்கள் அனைவருக்கும் தீர்த்தம், சடாரி, குங்குமம் ,மஞ்சள் காப்பு, பிரசாதமாக வழங்கப்படும் .பிறகு எல்லோருக்கும் அன்னதானம் வழங்கப்படும்.மாலை 4 மணிக்கு கோவில் பிரகாரத்தில் பெருமாள்' பத்தி உலாத்தல்' நடைபெறும். அதன் பிறகு "ஸ்ரீ மாதவ பிரியா" தாயாருக்கு ஊஞ்சல் நடைபெறும். அப்பொழுது நாதஸ்வர கச்சேரி நடைபெறும். இரவு 7:00 மணிக்கு வான வேடிக்கை மேள தாளங்களுடன் பெருமாள் 'திருவீதி உலா'பவனி வருவார். ஊரில் உள்ள மக்கள் தங்கள் வீதியில் வரும் போது பெருமாளுக்கு கற்பூர ஆரத்தி எடுப்பது வழக்கம். அந்த ஊரில் இருந்து வெளியே சென்றவர்கள் அனைவரும் அன்றைய தினம் தங்கள் குடும்பத்துடன் வந்து பெருமாளிடம் பிரார்த்தனை செய்து கொள்வார்கள். அது நிறைவேறியதும் பெருமாளுக்கு காணிக்கையும் செலுத்துவார்கள். பெருமாளுக்கு (அங்க பிரதட்சணம் செய்தல், தலை முடியை காணிக்கையாக தருதல், போன்றவை) அவர்கள் எதை நினைத்து வேண்டிக் கொண்டர்களோ!! அதனை நிறைவேற்றுவார்கள். இவ்வாறாக மாதவப் பெருமாள் உற்சவம் ஒவ்வொரு ஆண்டும் சிறப்பாக நடைபெற்று வருகிறது .இந்த ஆண்டும் வழக்கம் போல் மே மாதம் கடைசி ஞாயிறு அன்று கோடை உற்சவம் நடைபெற உள்ளது. ஆன்மீக பக்தர்கள் அனைவரும் திரளாக வந்து பெருமாளை சேவித்து பகவானின் திருவருளை அனைவரும் பெற வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.



**எம் .எல். பிரபா**
ஆதம்பாக்கம்.
சென்னை

# தினம் ஒரு தலைவர்கள் நசீம் மிர்சா சாங்கேசி வரலாறு

நசீம் மிர்சா சாங்கேசி
பிறந்தது 1910
இறந்தார் ஏப்ரல் 12, 2018 (வயது 108; சர்ச்சைக்குரியது)
பஹாரி இம்லி, பழைய டெல்லி , இந்தியா
அல்மா மேட்டர் ஜாகிர் ஹுசைன் டெல்லி கல்லூரி
தொழில் சுதந்திர ஆர்வலர்

நசீம் மிர்சா சாங்கேசி (1910 - ஏப்ரல் 12, 2018) ஒரு இந்திய சுதந்திர ஆர்வலர் ஆவார். அவர் இறக்கும் போது இந்தியாவில் வாழ்ந்த மிக வயதான நபர்களில் ஒருவராகவும் நம்பப்பட்டார்.

ஆரம்பகால வாழ்க்கை மற்றும் கல்வி
முகலாயப் பேரரசர் ஷாஜஹானின் காலத்திலிருந்தே பழைய டெல்லியில் தனது குடும்ப வேர்களை நசீம் மிர்சா சாஞ்சேசி கண்டுபிடித்துள்ளார் . அவர் இப்போது ஜாகிர் ஹுசைன் டெல்லி கல்லூரி என்று அழைக்கப்படும் ஆங்கிலோ அரபுக் கல்லூரியில் கல்வி பயின்றார் . பல ஆண்டுகளாக, அவர் உருது மற்றும் பாரசீக மொழிகளில் ஏராளமான புத்தகங்களைச் சேகரித்தார்.

1929 ஆம் ஆண்டு புரட்சிகர சுதந்திரப் போராட்ட வீரர் பகத் சிங்கை அவர் சந்தித்தார். மத்திய சட்டமன்றத்தில் குண்டு வீசும் நோக்கத்தை பகத் சிங் அவரிடம் தெரிவித்தார் , மேலும் ஒளிந்து கொள்ள ஒரு பாதுகாப்பான வீட்டைக் கண்டுபிடிக்க அவரது உதவியை நாடினார் . பகத் சிக் தனது பணியை நிறைவேற்றிய பிறகு நசீம் பின்னர் குவாலியரில் தலைமறைவானார்.

தனிப்பட்ட வாழ்க்கை
2016 ஆம் ஆண்டு வரை, அவர் தனது 90 வயது மனைவி அம்னா கண்ணும், 60 வயது மகன் மிர்சா சிக்கந்தர் பேக் சேஞ்சேசி ஆகியோருடன் பழைய டெல்லி பகுதியில் வசித்து வந்தார். அவரது இளைய மகன் மிர்சா தாரிக் பேக் பாகிஸ்தானின் கராச்சியில் வசிக்கிறார் . சேஞ்சேசிக்கு ஏழு மகள்கள் மற்றும் இரண்டு மகன்கள் இருந்தனர். அவர்களில் பலர் இன்னும் பழைய டெல்லி பகுதியில் வசிக்கின்றனர். அவருக்கு 20 பேரக்குழந்தைகள் இருந்தனர்.

2016 ஆம் ஆண்டில், நசீம் மிர்சா சாஞ்செசி 106 வயதுடையவர் என்று கூறினார்.

மரபு
நசீம் தனது வாழ்நாளில், இந்திய மற்றும் உலக வரலாற்றில் பல நிகழ்வுகளைக் கண்டதாகக் கூறினார், முதலாம் உலகப் போர் , ஜாலியன் வாலாபாக் படுகொலை , சத்தியாக்கிரகம் ( அகிம்சை எதிர்ப்பு ), கிலாபத் இயக்கம் , புது தில்லி உருவாக்கம் , இரண்டாம் உலகப் போர் , வெள்ளையனே வெளியேறு இயக்கம் மற்றும் இறுதியாக இந்தியாவின் சுதந்திரம் . அவரது வாழ்க்கைக் கதை பல செய்தித்தாள்கள் மற்றும் தொலைக்காட்சி ஆவணப்படங்களால் வெளியிடப்பட்டது.

மார்ச் 2016 இல், டெல்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால் , இந்திய சுதந்திர இயக்கத்திற்காக தங்கள் உயிரைத் தியாகம் செய்த புகழ்பெற்ற தியாகிகளான பகத் சிங் , சிவராம் ஹரி ராஜ்குரு மற்றும் சுக்தேவ் தாப்பர் ஆகியோரின் மூன்று மார்பளவு சிலைகளை டெல்லி சட்டமன்றத்தில் திறந்து வைத்தார் . அதிகாரப்பூர்வ விழாவில் உரையாற்ற நசீம் மிர்சா சாஞ்சேசி தேர்ந்தெடுக்கப்பட்டார். தியாகி பகத் சிங் இந்தியாவில் உள்ள அனைத்து மதங்களும் பிரிவுகளும் ஒற்றுமையாக வாழ விரும்புவதாக அவர் குறிப்பிட்டார். "பிரிட்டிஷாரின் அதிகாரத்திற்கு எதிராக பகத் சிங்கிடம் நான் எச்சரிக்கை செய்திருந்தேன். அவர் தூக்கிலிடப்படுவார் என்று கூறி அவரைத் தடுக்க முயன்றேன், ஆனால் அவர் கேட்கவில்லை. இவ்வளவு பலப்படுத்தப்பட்ட பாதுகாப்பு இருந்தபோதிலும், அவர் பாராளுமன்றத்திற்குள் வந்ததை ஆங்கிலேயர்களுக்குக் காட்ட விரும்பினார். தினமும், அவர் சட்டமன்றக் கட்டிடத்திற்குள் நுழைவதற்கான வழியைக் கண்டுபிடிக்கச் செல்வார். அவர் வழக்கமாக காலை உணவை சாப்பிட்டுவிட்டு வெளியேறுவார். போலீசார் தன்னை அடையாளம் காணாதபடி முகத்தில் ஒரு துணியைச் சுற்றிக் கொள்வார். நான் உறுப்பினராக இருந்த இந்திய தேசிய இராணுவத்தால், சிங்கிற்கு தொடர்ந்து உணவு வழங்குவதைத் தொடர்ந்து செய்யும் பணி எனக்கு வழங்கப்பட்டது," என்று அவர் கூறினார். "வெடிபொருட்கள் தயாரிப்பதில் நிபுணரான ஹன்ஸ்ராஜ் 'வயர்லெஸ்' தலைமையில் நாங்கள் சென்றோம். வெடிகுண்டு இப்போது ஐடிஓ என அழைக்கப்படும் இடத்திற்கு அருகில் வைக்கப்பட்டு, அதை வெடிக்கச் செய்வதற்காக நாங்கள் இப்போது பிரகதி மைதானம் என்று அழைக்கப்படும் இடத்திற்கு அருகிலுள்ள அடர்ந்த புதர்களில் ஒளிந்து கொண்டோம். எர்வின் பயணித்த சிறப்பு ரயில் அந்தப் பகுதியைக் கடந்து சென்றபோது குண்டு வெடித்தது. நாங்கள் அவரைக் கொன்றதைக் கொண்டாடினோம். ஆனால் அவர் குறிவைக்கப்பட்ட சலூனில் இல்லாததால் அவர் காயமின்றி தப்பினார். அந்த நேரத்தில், அவர் டைனிங் கோச்சில் மதிய உணவு சாப்பிட்டுக் கொண்டிருந்தார்," என்று அவர் மேலும் கூறினார். இந்த சம்பவத்தைத் தொடர்ந்து பீலி கோதியில் பாஸ்பரஸைப் பயன்படுத்தி ரயில்வே பதிவுகளை அழித்த குழு. கௌரியா புல் அருகே மின்சார கம்பிகளைத் துண்டிக்கவும் சேஞ்சேஜியிடம் கேட்கப்பட்டது. அவர் கம்பிகளை வெட்டுவதை தூரத்திலிருந்து கவனித்த போலீசார் துப்பாக்கிச் சூடு நடத்தத் தொடங்கினர். "நான் தெரு கம்பங்களுக்குப் பின்னால் ஒளிந்து கொண்டேன், பின்னர் அவர்கள் என்னைத் துரத்தியிருக்க முடியாத ஒரு பாதையை நோக்கி ஓடினேன். நான் ஒரு ஹாக்கி வீரர், மிக வேகமாக ஓட முடியும்," என்று அவர் கூறுகிறார்.



# தீயோர் கூடம்
## விமர்சனம்

ஒரே ஒரு நாள், ஒரு குறிப்பிட்ட சூழ்நிலை என்பதைக் கொண்டு நகரும் கதைகளில், கதாபாத்திரங்கள் பற்றி அதிக தகவல் தெரியாது. யாராக இருந்தாலும் எதையும் செய்யக்கூடிய வாய்ப்பு இருக்கும். அதுபோன்ற ஒரு கதைக்களத்தில் உருவான படம் தான் தியோர் கூடம்.

உணவு டெலிவரி வேலை செய்யும் டேனி, ஒரு வீட்டிற்குள் சிக்கிக்கொள்கிறார். அங்கே சில மர்மமான நபர்களுடன் சேர்ந்து, "ராபின் ஹூட்" போல பணத்தை திருடி, அதை தனது அனாதை இல்லத்திற்காக பயன்படுத்த நினைக்கும் நாயகி சாக்ஷி அகர்வால் இருக்கிறார். சில சூழ்நிலைகளால் டேனி மற்றும் சாக்ஷி இணைந்து பணத்தை பகிர்ந்து கொள்ள முடிவு செய்கிறார்கள். ஆனால் அதன் பின்னர் நிகழும் திருப்பங்களே கதையை முன்னேடுக்கிறது.

டேனி மற்றும் சாக்ஷி அகர்வால் தங்களுக்கான கதாபாத்திரங்களை சரியாக செய்துள்ளனர். சாக்ஷி கதாபாத்திரம் ஆரம்பத்தில் ஒரு நல்ல நோக்கத்துடன் இருப்பது போல இருந்தாலும், சில இடங்களில் அந்த நிலைத்தன்மை குறைவாக தெரிகிறது. வையாபுரி மற்றும் ஜாவா சுந்தரேசன் காட்சிகள், சீரியஸாக இருந்தாலும், சில இடங்களில் தவறுதலாக நகைச்சுவையாக மாறுகிறது.இயக்குனர் சக்திவேல், ஒரு சாதாரண மனிதன் ஆபத்தான சூழ்நிலையில் சிக்கிக்கொள்வதை மையமாக கொண்டு கதை சொல்ல முயற்சி செய்துள்ளார். முதல் பாதியில் திருப்பங்கள் நன்றாக இருந்தாலும், இரண்டாம் பாதியில் அவை குறைந்து, முன்னரே எதிர்பார்க்கக்கூடிய நிலைக்கு கதை செல்கிறது. பல திருப்பங்கள் தற்செயலாக நடப்பது போல உணர்வு வருகிறது. படம் ஆரம்பத்திலேயே கதைக்குள் இழுத்துச் செல்கிறது. முதல் பாதியில் வரும் சில திருப்பங்கள் சுவாரஸ்யமாக வேலை செய்கிறது. கதாபாத்திரங்களின் உண்மை முகம் மற்றும் அவர்களின் நோக்கம் மெதுவாக வெளிப்படுகிறது. ஆனால் அவர்களின் தனிப்பட்ட ஆழம் குறைவாக இருப்பது தெரிகிறது.


படத்தின் நேரம் குறைவாகவும், காட்சிகள் வேகமாக நகர்வதும் ஒரு பிளஸ். சில நல்ல டுவிஸ்ட் மற்றும் சில இடங்களில் வரக்கூடிய லேசான நகைச்சுவை படத்தை சலிப்பில்லாமல் நகர்த்துகிறது. பிரசாத் ஒளிப்பதிவு படத்திற்கு பலம் சேர்த்து இருக்கிறது. அதுபோல், இசை பேட்டை வசந்தின் பின்னணி இசையும் திரைக்கதை ஓட்டத்திற்கு பெரிதும் உதவி இருக்கிறது.




சமூக வலைத்தளத்தில் வைரல் இன்ஸ்டாகிராமில் புகைப்படங்களை பதிவு செய்து ரசிகர்களின் கவனத்தை ஈர்த்து வருபவர்களில் ஒருவர் நடிகை வாமிகா கேபி. இவர், தன்னுடைய சமீபத்திய போட்டோஷூட் புகைப்படங்களை தொடர்ந்து இன்ஸ்டாவில் பதிவு செய்வதை வழக்கமாக வைத்துள்ளார். இவர் வெளியிடும் கிளாமர் போட்டோஷூட் உடனடியாக சமூக வலைத்தளத்தில் வைரலாகும். இந்நிலையில், தற்போது ஸ்டன்னிங் கிளாமர் லுக்கில் நடிகை வாமிகா கேபி வெளியிட்டுள்ள போட்டோஷூட் படுவைரலாகி வருகிறது.



# பிரபல பாலிவுட் நடிகர் பரத் கபூர் காலமானார்



மூத்த நடிகர் பரத் கபூர், மாரடைப்பு காரணமாக தனது 80வது வயதில் காலமானார். மும்பையில் உள்ள சியோன் மருத்துவமனையில் பிற்பகல் சுமார் 3:30 மணியளவில் அவர் தனது இறுதி மூச்சை விட்டார். இதே நாள் மாலையில், மருத்துவமனைக்கு அருகிலுள்ள சுடுகாட்டில் அவரது இறுதி சடங்குகள் நடைபெற்றன.

கடந்த மூன்று நாட்களாக உடல்நலக்குறைவால் பாதிக்கப்பட்டிருந்த பரத் குமார் முன்னதாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்ததும் உறுதி செய்யப்பட்டுள்ளது.

அவருக்கு அஞ்சலி செலுத்துவதற்காக, குடும்பத்தினர், நண்பர்கள் மற்றும் திரையுலகை சேர்ந்தவர்கள் கலந்து கொள்ளும் பிரார்த்தனை கூட்டம், ஏப்ரல் 30 ஆம் தேதி மாலை 5 மணி முதல் 7 மணி வரை வடக்கு பம்பாய் சங்கத்தில் (பஞ்சாப் சங்கம்) ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.





# 'லெனின் பாண்டியன்' முதல் பாடல் வெளியீடு!

டி.டி. பாலச்சந்திரன் இயக்கத்தில் நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் பேரன் தர்ஷன் கணேசன் கதாநாயகனாக அறிமுகமாகும் படம் லெனின் பாண்டியன். இப்படத்தில் வளர்ந்து வரும் நடிகை ஸ்ரிதா ராவ் கதாநாயகியாக நடித்துள்ளார்.

பிரபல இசையமைப்பாளரும், இயக்குநருமான கங்கை அமரன் 'துரை ராசு' என்ற முதன்மை கதாபாத்திரத்தில் இப்படத்தில் நடித்துள்ளார். நீண்ட இடைவேளைக்குப் பிறகு நடிகை ரோஜா இப்படத்தின் மூலம் மீண்டும் திரையில் தோன்றுகிறார்.

இப்படத்திற்கு இசைஞானி இளையராஜா இசையமைத்துள்ளார். சத்யஜோதி பிலிம்ஸ் நிறுவனம் இப்படத்தைத் தயாரித்துள்ளது. இப்படத்தின் டிரெய்லர் வெளியாகி கவனம் ஈர்த்தது. இந்நிலையில் இப்படத்தின் முதல் பாடலான 'உன்னை நம்பி' வெளியாகி உள்ளது.

# 10 கோடி பார்வையாளர்களை கடந்த 'கூலி' பவர்ஹவுஸ்!



லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில், நடிகர் ரஜினிகாந்த் நடிப்பில் வெளியானப் படம் கூலி. இப்படத்தில் நாகார்ஜுனா, உபேந்திரா, சத்யராஜ், சௌபின் ஷாஹிர், ஸ்ருதி ஹாசன் மற்றும் ராஷிதா ராம் ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்திருந்தனர்.

ஆமீர் கான் கௌரவத் தோற்றத்தில் நடித்திருந்தார். அனிருத் ரவிச்சந்தர் இப்படத்திற்கு இசையமைத்திருந்தார். இப்படம் வணிக ரீதியாக வெற்றி பெற்றது. உலக அளவில் முதல் நாளில் ரூ.151 கோடியையும், முதல் வாரத்தில் ரூ.229.65 கோடியையும் வசூலித்து சாதனை படைத்தது.

இந்நிலையில் இப்படத்தின் பவர்ஹவுஸ் பாடல் இணையத்தில் 10 கோடி பார்வையாளர்களை கடந்து சாதனை படைத்துள்ளது. முன்னதாக மோனிகா பெலூசி பாடலும் 10 கோடி பார்வையாளர்களை கடந்து நல்ல வரவேற்பை பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது.

# 'பில்லா' ரீ-ரிலீஸ் டிரெய்லர் வெளியீடு!



நடிகர் அஜித்குமார் நடிப்பில் வெளியாகி பிளாக்பஸ்டர் ஹிட் அடித்த பில்லா படத்தின் ரீ-ரிலீஸ் டிரெய்லர் வெளியாகி உள்ளது.

நடிகர் அஜித்தின் பிறந்தநாளை முன்னிட்டு, பில்லாப் படம் நவீன 4K தொழில்நுட்பத்தில் மெருகேற்றப்பட்டு மே.1ஆம் தேதி திரையரங்குகளில் மீண்டும் வெளியாக உள்ளது.

தமிழ்நாடு முழுவதும் சுமார் 150-க்கும் மேற்பட்ட திரையரங்குகளில் இப்படத்தை வெளியிட திட்டமிடப்பட்டுள்ளது.

விஷ்ணுவர்தன் இயக்கத்தில் வெளியான இப்படம் பிளாக்பஸ்டர் ஹிட் ஆனது. யுவன் சங்கர் ராஜாவின் இசையில் பாடல்கள் மிகப்பெரிய வரவேற்பை பெற்றன. இப்படத்தில் அஜித்திற்கு ஜோடியாக நயன்தாரா, நமீதா ஆகியோர் நடித்திருந்தனர்.

இது ரஜினி படத்தின் ரீமேக்காக இருந்தாலும், அஜித்தின் நடிப்பும், படத்தை ஸ்டைலிஷாக எடுத்திருந்த விதமும் ரசிகர்களை வெகுவாக கவர்ந்தது. இப்படம் கடந்த 2021ஆம் ஆண்டும் ரீ-ரலீஸ் செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.



குழந்தை நட்சத்திரமாக ஏராளமான படங்களில் நடித்து பிரபலம் ஆனவர் அனிகா சுரேந்திரன். அவருக்கு அதிக அளவில் ரசிகர்களும் இருக்கிறார்கள்.

தற்போது 21 வயதாகும் அனிகா படங்களில் மெயின் ரோல்களில் நடிக்க தொடங்கி இருக்கிறார். மேலும் அவர் கிளாமர் ஆக வெளியிடும் போட்டோக்களும் ரசிகர்களின் கவனத்தை ஈர்த்து வருகிறது.

இந்நிலையில் அனிகா தற்போது அழகிய உடையில் போஸ் கொடுத்து இருக்கும் லேட்டஸ்ட் ஸ்டில்களை பாருங்க.

# சினிமாவில் நடிக்க வாய்ப்பு தருவதாக ஏமாற்றுகின்றனர்..!




அனுகிரகா வெளியிட்டுள்ள வீடியோவில், தற்போது நான் ஆஸ்பத்திரியில் இருந்து டிஸ்சார்ஜ் ஆகி வந்து உள்ளேன். ஓராண்டாக படம் நடிப்பதற்கு ஒப்பந்தம் செய்யப்பட்டு படப்பிடிப்பே நடத்தவில்லை. வேறு படங்களில் நடிக்கவும் வேண்டாம் என கூறினார்கள். 4 மாதங்களாக நான் நடிக்கவில்லை. எனக்கு பொருளாதார ரீதியாக பிரச்சினைகள் ஏற்பட்டு உள்ளன.

படத்தயாரிப்பு நிறுவனத்திடம் கேட்டால் விஜய் குமாரை கேளுங்கள் என்கிறார்கள். நான் கேரளாவில் சிறிய கிராமத்தில் இருந்து வந்தவள். எனக்கு கனவுகள் இருக்கிறது. இந்த விவகாரம் குறித்து எனது நண்பர் விஜய்குமாரிடம் பேசினார். என்னை நடிக்க வர வேண்டாம் என்று விஜய்குமார் அவரிடம் கூறியுள்ளார்.

விஜய்குமாரின் மனைவி என் நண்பரிடம் நீ வேண்டுமானால் அவளை திருமணம் செய்து உடன் வைத்துக் கொள். கொடுத்த கதாபாத்திரத்தில் வந்து நடிக்க சொல்லுடா' எனக் கூறினார். தயாரிப்பு நிறுவனமும் சரியில்லை. இளம் கலைஞர்களை மதிப்பதில்லை.

என் மனநலம், உடல் நலம் என அனைத்தும் பாதிக்கப்பட்டு உள்ளது. எனக்கு சரியான தீர்வு கிடைக்கவில்லை என்றால் தற்கொலை செய்து கொள்வேன். இனி யாருக்கும் இதுபோல் நடக்கக்கூடாது.

இவ்வாறு அவர் கூறினார்.


Happy Birthday
C.CHANDRA


ADVERTISE WITH US
CONTACT US
9438610756


WANTED:
FEMALE ANCHORS
• Age 18 to 35
• Good Looking
• Work from Home
(Full-time/Part-time)
Salary: Rs. 20,000 to 50,000
Call / Whatsapp:
7789941009
9337501889


Vilambaram
We provide Targeted Leads to grow your buisness
Boost your business
Call:: 91 7789941009, 9337501889
www.vilambaram.com



டீலர்கள் தேவை
மைலேஜ் பூஸ்டர்
20% ~ 30%
2
மிக அதிகமான மைலேஜ் குறைந்த புகை
சுலபமான வாகன ஓட்டம் குறையும் மாசு
நேரடி விற்பனையாளர்களும் டீலராகலாம்
Manufactured By: Dlag Technologies, Chennai 33
போன் 63746 73041


Seek Strive Succeed
Annai Violet Arts & Science College
(Affiliated to the University of Madras, Co-Ed | NAAC Accredited)
Free Transportation for Girl Students from Pattaravakkam Railway Station & Kallikuppam to College
Key Features
Modern Infrastructure | Extensive Library
Expert Faculty | Result-Oriented Curriculum
Well-Equipped Labs | Competitive Exam Preparation
Sports & Skill Development | English Training
Prime Location | Strong Security
Seminar Hall | Personalized Student Support
Inter-College Competitions | Scholarships
Counseling & Mentoring | Industrial Visits
Interactive Learning | Strong Placement Support
Community Radio Station
Regional centre for ICMAI (Institute of Cost Accountants of India) Foundation / Intermediate
EDUCATIONAL BANK LOAN AVAILABLE
Media & Broadcasting Courses Available. RJ / VJ Training given to Students
FM 88.8 VIOLET WAVES
UG & PG COURSES
SHIFT I
B.C.A
B.B.A
B.Sc COMPUTER SCIENCE
B.Sc BIOCHEMISTRY
B.Sc MICROBIOLOGY
B.A TAMIL
B.A ENGLISH
B.A ECONOMICS
B.COM (GENERAL)
B.COM (ACCOUNTING & FINANCE)
B.COM (CORP. SECRETARYSHIP)
M.A ENGLISH
M.COM
M.Sc BIOCHEMISTRY
SHIFT II
B.Com (GENERAL)
B.Com (ISM)
B.Sc PHYSICS
B.Sc CHEMISTRY
B.Sc COMPUTER SCIENCE
B.Sc VISUAL COMMUNICATION
M.Sc COMPUTER SCIENCE
M.Sc MICROBIOLOGY
CERTIFICATE COURSE
DIP. IN MEDICAL LAB TECHNOLOGY (DMLT)
CERTIFICATE COURSE IN MEDICAL CODING
PHOTOSHOP ✤ COREL DRAW ✤ TALLY PRIME
The Other Clubs Present in the College are:
Eco Club | Expo Club | Prayer Cell | Innovation & ED Cell
Comedy Club | Reporter's Club | Counseling Cell
Fine Arts Club | Citizen Consumer Club | Anti Ragging Cell
Grievance Cell | Women's Cell
Service Club (NCC/NSS/RRC/YRC/Rovers & Rangers)
Placement & Career Guidance Cell
UNIVERSITY OF MADRAS - INSTITUTE OF DISTANCE EDUCATION LEARNING SUPPORT CENTRE
Get great education with us!
ADMISSIONS OPEN
Ph : 044-26861611 | 26864684 | 9344900911 | 6383425388
No.53, Violet College Road, Menambedu, Ambattur, Chennai - 53.
info@violetcollege.in www.violetcollege.in


keerthi foundation
De Addiction Cum Rehabilitation Centre
INTERNSHIP & JOB OPPORTUNITIES
MSW & M.Sc Psychology - Freshers
Internship:
Clinical Training
Counseling Practice
Case Work
Jobs:
Social Worker
Jr Psychologist
Rehab Counselor
Build Your Career in De-Addiction & Mental Health Care
Call: 9841945060 | 7845027710
www.keerthifoundation.com


நிலம் தேவை
தெற்கு சென்னை
திருப்போரூர்
to
செங்கல்பட்டு ரோடு
1 to 2
ஏக்கர்
தொடர்புக்கு:
Ph. 6384617773


துபாயை தலைமையிடமாகக் கொண்டு
தமிழகத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள
உட்-பி குளோபல் பிரைவேட் லிமிடெட்
(Would Be Global Pvt Ltd)
ஆன்-லைன் வர்த்தக E-Commerce
நிறுவனத்திற்கு தாலுக்கா வாரியாக
பிரான்ச்சீஸ்கள் (Franchise) தேவை.
பொது மேலாளர்:
7092069555 / 7092047555


WANTED
FEMALE TELECALLER
EXP : FRESH / EXPERIENCED
SKILL : GOOD COMMUNICATION SKILL
LANGUAGES: KANNADA, TAMIL, TELUGU, ENGLISH, HINDI...
AGE : 18 YRS -60 YRS
SALARY – 10,000 & ABOVE
LOCATION : TIRUVATIYUR, CHENNAI
FOR PADMA MEDIA HOUSE
PadmaMedia House
Call/Whatsapp
94386 10756



WANTED:
செக்யூரிட்டி வேலைக்கு ஆண்கள் தேவை
• வானகரம் பைபாஸ் ரோடு
• முகப்பேர்
• அம்பத்தூர்
• பட்ரவாக்கம்
• பெரம்பூர்
• மாதவரம்
• திருமுல்லைவாயல்
Ph. 9344183870
Ph. 8807470107
Call now for more details and interview.
APPLY NOW


SEVEN STARS LOGISTICS PVT.LTD.
we simplify shipping for your business
Our Services are ...
Freight Forwarding, International Courier, Customs Clearance, Cargo Movement by Air, Sea and Road, Door to Door Service.
# 2, 2nd floor, Krishnan Koil Street, George Town, Chennai - 600 001. INDIA.
+91 44 43570909 +91 96770 88843
info@sevenstarslogistics.com www.sevenstarslogistics.com


just499®
MLM SOFTWARE
All Types of MLM Software Solutions Available
Binary Unilevel Matrix Board Generation ROI / Investment
ONLY Rs. 499
Website: just499.com
Phone/WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com


Sri Manjal Mart
தரமான ஆன்மீக பூஜை பொருட்களை குறைந்த விலையில் நிறைவாக வாங்க
20% OFF
www.manjalmart.com
7789951009
order@manjalmart.com


THE BEST CENTRE OF
CAR WASH
SADHANA DEVI.K
SUPREME
Car Wash & Detailing
Car Foam Pressure Wash
Teflon Coating
Ceramic Wax Treatment
Under Chassis Painting
Interior Foam Wash / Stain Remover
Paint Correction / Protection
We Done Here
9840882711
7200043675
Supremecarwashchennai@gmail.com
No.17/4, Senniamman Koil Street, Tondiarpet, Chennai – 600 081.


அருள்மிகு ஸ்ரீ மாலையம்மன் சமேத அருள்மிகு சுப்பிரமணியர் துணை
அருள்மிகு திருச்செந்தூர் முருகர் துணை
ஸ்ரீ ஹரி
ஜோதிட மையம்
ராசி
ஜாதகம், திருமணப் பொருத்தம், ஜாமக்கோள் , ஆருடம் பார்க்கப்படும்.
தாம்பூல பிரசன்னம் , சோழி பிரசன்னம், அஷ்ட மங்கல பிரசன்னம்
மேலும் திருமணம், புத்திர பாக்கியம், கல்வி, தொழில் ஆகியவற்றில்
ஏற்பட்ட தடைகளுக்கு ஜோதிடரீதியான தீர்வு செய்யப்படும்.
ஜோதிட நிபுணர் இராஜபாளையம் இராமமூர்த்தி MA Astro
81899 08040 / 93425 03572
harisudhan1968@gmail.com


WANTED
• LAB HELPER
• OFFICE BOY
• GARDENER
CHEMBARAMBAKKAM
CALL US
7550093245 / 7358696451


WANTED
OFFICE BOY
GUINDY
CALL US
7550093245 / 7358696451


WANTED
ELECTRICIAN SUPERVISOR
/
ELECTRICIAN
EGMORE, MOUNT ROAD
CALL US
7550093245 / 7358696451


WANTED
Retd, VRS, Home Makers, NRIs, Business Person
Contact
8248951872






நற்றுணையாவது
நல்லொதொரு வாசிப்பு
எப்போதும் ஏதோ படித்துக்
கொண்டேதான் இருக்கிறேன்!

பாடப்புத்தகங்கள் தான்;
எப்போதும் அப்போதெல்லாம்!
என் வாழ்க்கையில்!
வேறு எதைபடிப்பதற்கும்
நேரமும் இல்லை;
அதற்கான சூழலும் இல்லை.
வசதியும் இல்லை!

"ஒழுங்கா படித்து
உருப்படும் வழியைப் பார்"
தாய் முன் மொழிய
தந்தையின் சொல்!
தந்தை சொல் மிக்க
மந்திரமில்லை!
படித்து உருப்பட்டேன்!
ஒரு அரசு பணியில்!

என் மக்களை
படிக்கச் சொன்னேன்;
உருப்படுவதற்காக மட்டுமல்ல!
தன்னை சீராக்கிக்
கொள்ளவும்; தன்னைத்தானே
முன்னேற்றவும்;
பொதுவெளியில்
தலை நிமிர்ந்து நிற்கவும்;
துணையின்றி தவிக்காமல்
தனிமை கொல்லவும்;
புத்தகம் அல்லாது வேறு ஒரு
நற்றுணை உண்டோ?

நினைவு அறிய; நான்
முதலில்
படித்தஒரு
வாக்கியம்.
இன்னமும் என்
நினைவில்
"அறம் செய்ய
விரும்பு"
அதன் நினைவாக
என் மகன் "அறம்" ஆனான்



**சசிகலா விஸ்வநாதன்**




## பந்தம்

பந்தங்கள் வளர்வதுண்டு
பாசத்தின் பிணைப்பினால்!
சொந்தங்கள் சேர்வதுண்டு
சொத்துக்கள் உள்ளவர்க்கு!
நண்பர்கள் கூடுவதுண்டு
நட்பின் மகிமையினால்!
காதலர்கள் இணைவதுண்டு,
காதலின் ஆர்வத்தால்!
பாலர்கள் கூடுவதுண்டு, பாடி,
ஆடி மகிழ்வதற்கு! பாவையர்
கூடுவதுண்டு, புடவை கதை
பேசுவதற்கு! பாட்டிகள்
கூடுவதுண்டு, பக்கத்து வம்பு
பேசுவதற்கு! படித்தவர்கள்
மகிழ்வதுண்டு,
பட்டங்களைப்
பெறுவதனால்!



**எஸ். சந்திரசேகரன்**
**அமுதா**
கெஞ்சிகோட்டை




# நூல் விமர்சனம்

நூலின் பெயர்: பெருவெளி கடக்கும் சிறுதுளி!
ஆசிரியர்: தனலெட்சுமி
வெளியீடு: வாலி பதிப்பகம்
விலை : ₹100
தொடர்புக்கு: 99405 08595

*சிறுதுளி பெருவெள்ளம் ஆனால் அது சேமிப்பு. ( வாசகப்)பெருவெளி கடக்கும் சிறு துளி! எனில் துளிப்பாக்கள் துளிப்பாவால் துளிர்ப்பார் இவர்.... ரசித்த சில துளிப்பாக்கள் இங்கே: தானழும்போது, சிரிக்கும் பொம்மையை எரிகிறது.*

*குழந்தை குறுக்கே வந்தவனைச் சந்திக்கிறது எலி கிட்டாப் பூனை! தாய்மொழியில் அஞ்சலி கல்லறையுள் புரளும் சவம் ஒவ்வொரு வீட்டிலும் ஓய்வுக்காக ஏங்கும் அலைபேசி.*


**ஸ்ரீகாந்த் திருச்சி**

## சத்தியம் காக்கும்

சிரிப்பைக் கண்டு மயங்காதீர்
சிக்கலான வலை அது!
அன்புக்கு அடிபணியாதே,
ஆழம் தெரியாத கடலது!
பாசம் பார்த்து நெகிழாதீர்,
பாசி படர்ந்த வழி அது!
நேசக்கரமென நெருங்காதீர்,
நீரிலாடும் குமிழி அது!
கருணை கண்டு
களிக்காதீர், காட்டாற்று
வெள்ளமது! புன்னகை
கண்டு பூரிக்காதீர்,
புதைகுழிக்குள் தள்ளும்
வழியது! உண்மைகளை
உணர்ந்தீரானால்
நன்மைகளை
பெற்றிடலாம்!
சத்தியத்தை
தொடர்ந்தால்,
நித்தியம்
அது நமை
காக்கும்!



**மீனாட்சி பாண்டியன்**
திருவண்ணாமலை.



## "முல்லைக்கொடிக்குக் கிடைத்த முதல் மரியாதை."

கற்றோருக்குச் சென்ற
இடமெல்லாம் சிறப்பு எனும்
முதுமொழியைப் போன்று;


இம் மண்ணில் நித்த நித்தம்
கணக்கிலடங்காப் பூக்கள்
மலர்ந்தாலும் "வள்ளல்பாரி
முல்லைக்கொடிக்குத்
தேர்கொடுத்த
நினைவுநாளை" இன்றும்
சிவகங்கையிலுள்ளப்
பிரான்மலை சிவாலயத்தில்
நாம் பக்திப் பரவசத்துடன்
கொண்டாடி வருகிறோம்
எனும் நற்செய்தி ஒன்றுதான்
முல்லைக்கொடிக்குக்
கிடைத்த தனிச்சிறப்பு..!

---


## "மாறுமா? இந்த இழிநிலை."

கவிதை எழுதுபவரென்றாலும்
கதை மற்றும்
ஆராய்ச்சிக் கட்டுரை
எழுதுபவரென்றாலும்
அத்தகையோருக்குப்
பொதுவெளியில் கிட்டும்
நல்வரவேற்பும் மரியாதையும்
அப் பிரம்மாக்கள் பிறந்த
வீடுகளில் அவை ஏனோ
கிடைப்பதே இல்லை..!

ஒரு படைப்பாளன் என்ற
முறையில் எமைப் படைத்த
காலதேவனிடம் யான் கேட்க
விரும்பும் இது குறித்த
கேள்வி என்னவென்றால்
இந்த
இழிநிலையை
உன்னால்
மாற்ற
முடியுமா?
முடியாதா?
என்பதுதான்
அது..!



**கவிச்சாரல் கொள்ளிடம் காமராஜ்,** திருச்சி



## இறைவன் கொடுத்த அதிசயம்

தாகம் தீர்த்த தண்ணீர்
காதலை வென்ற கண்ணீர்...
புண்ணிய நதி கங்கை
புனித பிறவி மங்கை...

கடவுளை வேண்டு
புண்ணியம் கிடைக்கும்
கள்ளமில்லாமல் உதவி பார்
கர்மம் கிடைக்கும்...

தானா வராத கடவுள்
கஸ்ட்டத்தை போக்கும்
அவனை
தொழு உனக்கு
நல்ல வாழ்வு
கிடைக்கும்....!!



**பொன். கருணா**
நவி மும்பை

சிறிது என்றும் பெரிதே
சிறு சிறு ஆசைகள்
காலம் கடந்தும் நிற்கும்
நினைத்துப் பார்க்கையிலே
நடந்ததை நினைக்கையிலே
மனதினிலே சலனங்கள்
மறைந்துபோகும்
நிறைவேறிய சிறு ஆசைகள்
நெஞ்சினிலே
நிறைந்திருக்கும்

எல்லோர்க்கும் நடப்பதுதான்
நினைத்துப் பார்ப்பதில்லை
கடந்து போகின்றோம்
நான் நினைக்கிறேன்
நிம்மதி பெருமூச்சு
சிறுவயதின் ஆசையொன்றை
கனவினில் கண்டு மகிழ்ந்து
நினைவினில் சுமந்து
வயதான பின்னே
கிடைத்ததொரு வாய்ப்பில்
நிறைவேறும் தருணத்திலே
மனநிலையை சொல்லிட
வார்த்தைகள் காணவில்லை
இருக்கும் வார்த்தைகளால்
ஆழத்தை அளக்க
முடியவில்லை

தனியாய் நானும் திரைப்படம்
பார்க்க நானே சமைக்க ,
நானே உண்ண கவிதை
ஒன்றை எழுதிப் பழக
கதையும் ஒன்றும் சொல்லிப்
பழக வெயிலில் தூங்க
மரத்தடி தேட மழையில்
ஒதுங்க மறைவிடம் தேட
பள்ளியில் படித்த தோழனை
காண பல மைல் தூரம்
தனியே நடக்க சற்றே
இளைப்பாறி மீண்டும் பேச
பழைய கதைகள் பேசிய
படியே நடந்து சென்று
தேநீர் அருந்தி பேசிப் பழகிய
நண்பர்களை நினைத்து
அன்றைய பொழுதும்
அப்படியே நிற்க, பின்னர்
அனுதினமும்
நினைத்துப்
பார்க்க
ஆசைப்படுவது
அற்புதமன்றோ



**ஓம் குமார்**
**P N**



## எரிமலை

இயற்கைப் பேரிடரின்
இன்னொரு வடிவம்

அடங்கிக் கிடந்த அழுத்தம்
அனலாகி வெளியாகும்

தூங்கிய உணர்வுகள்
பொங்கும் உணர்ச்சிகளால்
வெடித்துச் சிதறி உருமாறும்

புனலோடிய இடமெல்லாம்
கனலாகக் காட்சி தரும்

வடிவங்கள் பலவாகும்
வண்ணங்கள் பலவாகும்
குணத்தில் மாற்றம்
கொள்ளாது குவலயத்தை
அழித்து விடும்

இன்னல் தரும்
இயற்கைச் சீற்றம்
மானுடம் பெற்ற பேரழிவு

மனித குணத்தின்
செய்கையால் மரணம்
வரைக்கும் போராட்டம்


மண்ணில் உள்ள
எரிமலை போல் மனதில்
உண்டு எரிமலைகள்

குணம் கெட்ட மாந்தர்
உதிர்க்கும் சொற்கள்
மனதைக் கொல்லும்
நெருப்பாகும்

நாவின் வழி வரும்
சுடு சொல்லும் நானிலத்தில்
எரிமலைக்கு ஈடாகும்

எரிமலை கூட அடங்கிவிடும்
எரியும் தனலோ அடங்காது
சொல்லின் வலியும் வடுவாகி
சொல்லொனாத் துயராகும்

மாறும் மனிதன் குணத்தாலே
சேரும் இயற்கையில்
நற்குணங்கள்
மாறா மனிதன்
சொல்லாலே
எரிமலை
தானே
எந்நாளும்.



**தமிழ்நிலா**



என்னை ஏன் பிடிச்சிருக்கு..
நீ வித்தியாசமா இருக்கே..

எல்லோரையும்
போலத்தானே நானும்.

எல்லாப்
பூக்களும்
பூவினம்தான்..
ஆனாலும் நீ
வித்தியாசமாய்
பூத்திருக்கிறாய்.



**ரிஷபன்**



## நதி

அதைப் பார்க்கும்
பொழுதெல்லாம்..
ஓர் புத்துணர்வு கிடைப்பது
ஆத்மார்த்தமான எழுச்சி...
நதி ஓடிக் கொண்டே
இருக்கிறது.. எதற்க்காவும்
சோர்வதில்லை.
கற்களைப் பார்த்து பின்
வாங்கியதில்லை..
தடைகளைத் தாண்டி
பாதை மாறி பயணம்
தொடர்கிறது ...
வாழ்க்கையென்பதும் நதி
போலத்தான்.. எதிர்த்து
நின்றவற்றை தாண்டிச்
செல்லும் வழியை தேடு...
சத்தமாக ஓடும் நீர்
தூரம் செல்லாது....
அமைதியாக ஓடும் நதிதான்
கடலை அடையும்..
அமைதியாக இருந்து
வெற்றியை நிலைநாட்டு...
இந்த உலகம் உன் கையில்...

---

இந்த மனிதர்களின்
மனமென்னும்
மாயக்கிடங்கில் குவிந்து
கிடக்கும் ரகசியமென்னும்
புத்தகங்களில்
வாசிக்கப்படாத
பக்கங்கள் ஆயிரமாயிரம்....

---

இரக்கமாக இருங்கள்
வேண்டாமென்று
சொல்லவில்லை..
இரக்கங்கள் உங்களை
ஏமாளியாக்குவதை
அனுமதிக்காதீர்கள்..
இங்கே தேவைக்கு
தேடுவதும்தேவை
முடிந்ததும் தூக்கியெறியும்
மனிதர்களுக்கு..
உங்கள் இரக்கங்கள் தான்
பலமாகிப் போகிறது...

**NISHAA**

"பெயர் குறிப்பிட விரும்பாத
ஒரு சமூக சேவகன்."

நானுங்கூட ஒரு ராஜாதான்:
எங்க ஊருக்குள்ளே;
பூமாலைகளும்
பாமாலைகளும் என்றும்
எமக்குத் தேவையில்லை;


பாதையில் தடுமாறும்
பார்வையிழந்தவரின்
ஊன்றுகோலும் நானே;

ஏழைக் கர்ப்பிணிப்
பெண்ணுக்குரிய பிரசவச்
செலவுக்கு முதல் ஆளாய்
நின்று உதவுபவனும் நானே;

நெடுஞ்சாலையில்
ஆதரவற்றுக்குக் கிடக்கும்
ஆதரவற்ற மனித
சடலத்திற்குரிய இறுதி
மரியாதைச் சடங்குகள்
செய்பவனும் நானே;
என்னை நீங்கள்
பாராட்ட நினைத்தால்
யான் செய்துவரும்
இந் நற்செயல்களில்
ஏதேனும் ஒன்றினை
முழுமனதுடன் நீங்களும்
உங்க ஊரில் உடனே
செயல்படுத்துங்கள்..! அது
ஒன்றே எனக்குபோதும்..!

இப்படிக்கு,
பெயர் குறிப்பிட விரும்பாத
ஒரு சமூக சேவகன்..!

**கவிச்சாரல் கொள்ளிடம் காமராஜ்,** திருச்சி



1. நம் பலவீனங்களை
நமக்கே அரிய தருவது
துரோகங்கள் தான்

2.தண்ணீரை தாத்தா ஆற்றில்
பார்த்தார் அப்பா கிணற்றில்
பார்த்தார் நாம் குழாயில்
பார்க்கிறோம் மகன் பாட்டிலில்
பார்க்கிறான் பேரன் எங்கு
பார்ப்பானோ தெரியவில்லை

3. பெண் ஆதிக்கத்திற்கும்
ஆண் ஆதிக்கத்திற்கும்
இடையில் உள்ள கோடுதான்
திருமணம்.

4. தேர்ந்தெடுக்கப்பட்டவன்
அயோக்கியன் என்றால்
தேர்ந்தெடுத்தவன்
முட்டாள் என்று
அர்த்தம்

5. வாய்ப்புகளை தேடு
இல்லை என்றால்
உருவாக்கு

கொக்கை தேடி குளம் வராது
பறவையைத் தேடி பழம் வராது

---

1. எப்படிப்பட்ட முட்டாளும்
பணத்தை சம்பாதித்து
விடலாம் ஆனால்
புத்திசாலியால் மட்டுமே அதை
காப்பாற்ற முடியும்
2. கடனும் அறிவுரையும்
கேளாமல் கொடுத்தால்
சங்கடம் தரும்

3. ஆபீஸ் கோபத்தை வீட்டில்
காண்பித்தால் அது
தொழிலாளி வர்க்கம்
வீட்டுக் கோபத்தை ஆபீஸில்
காண்பித்தாள் அது முதலாளி
வர்க்கம்

4. சிரித்துப் பாருங்கள்
உங்கள் முகம் உங்களுக்கு
பிடிக்கும்சிரிக்க வைத்துப்
பாருங்கள் உங்கள் முகம்
எல்லோருக்கும் பிடிக்கும்

5. உன்னால் ஒருவர்
கண்ணீர் சிந்தினால் அது
பாவம் உனக்காக ஒருவர்
கண்ணீர் சிந்தினால் அது
பாசம்



**நடேஷ் கன்னா**
கல்லிடைக்குறிச்சி



## சமுதாயத்தைப் படியுங்கள் !!


ஏடுகளைப் படிக்கவில்லை என்ற போதும்
ஏறெடுத்துப் பாருங்கள் சமுதாயத்தை
மாடுகளைப் போலிங்கே உழைத்தபோதும்
மானத்தைக் காக்கவொரு ஆடையில்லை !
வீடுமில்லை ஒருவேளை உணவுமில்லை
வீற்றுள்ளார் சாலையோரம் பசியினோடே
கேடுதனை விரட்டுதற்குப் படிப்புவேண்டா
கேளிரென அணைப்பதற்கு மனம்தான் வேண்டும் !

அரசியலார் செய்கின்ற அக்ர மங்கள்
ஆட்சியாளர் புரிகின்ற சுரண்டல் ஊழல்
அரசுதனை நிர்வகிக்கும் அலுவலர்கள்
அடிக்கின்ற கொள்ளையினைப் பார்த்த வாறு
விரல்மீது கறுப்புமையை வைத்துக் கொண்டு
வீணரினை விடுவதுவோ கயமை செய்ய
திறந்திதற்கு நூல்களினைப் படிக்க வேண்டா
திண்மையுடன் எதிர்க்கின்ற துணிவே போதும் !

அறநூல்கள் படிக்கநேரம் இல்லாப் போதும்
அடுத்தவரைக் கவிழ்ப்போரின் முகத்தைக் கற்பாய்
புறமினிக்கப் பேசிமனம் கரவு கொண்டோர்
புன்மையினை அறிகின்ற உத்தி கற்பாய் !
உறவாடிக் கெடுப்போரின் உள்ளம் கற்பாய்
உண்மைவேடப் போலிகளை அறியக் கற்பாய்
நறவினைப்போல் நஞ்சூட்டும் பகையைக் கற்பாய்
நமக்குதவும் சமுதாய நூல்கள் கற்பாய் !



**பாவலர் கருமலைத்தமிழாழன்**



## தமிழ்த்தாத்தா உவேசா!

அறுசீர் மண்டிலம்.

தமிழ்த்தாத்தா
தமிழ்த்தாத்தா உவேசா
தக்கநல்ல
தமிழ்த்தாத்தா உவேசா!
கமழ்த்தாத்தா
கமழ்த்தாத்தா உவேசா
காண்தாத்தா
கமழ்த்தாத்தா உவேசா!
அமைந்திட்ட
ஓலையிலே சுவடிகள்
அழகாகப்பதிப்பித்தார்
உவேசா!
இமைக்கின்ற நேரமும்
ஓய் வின்றி ஈடின்றி
உழைத்தாரே உவேசா!

தமிழ்த்தாத்தா தானே
தமிழறிஞர் ஆனாரே உவேசா!
அமிழ்தான
தமிழோலைச்சுவடிகள்
ஆங்காங்கே அலைந்தேதான்
கண்டார்!
சமைத்தாரே நூலாகத்தானே
சந்ததமும் பயன்படுத்தத்
தேனாய்! எமைக்காக்கும்
இலக்கியங்கள் தம்மை
இனித்திடவே செய்திட்டார்
உவேசா!

தமிழாசான்

---

## சோம்பலில்லா வாழ்வையே சொல்!

நேரிசை வெண்பா!

பணிகளைச்செய்திடப்
பாங்காய் மனமே
கனிவின்றிக் காணும்
நிலையே!--
உணர்ந்திடும் சோம்பலே!
சோர்வின்றி நற்செயலைச்
செய்திட சோம்பலில்லா
வாழ்வையே சொல்!

விரும்பி விரும்பாமல்
பல்லாற்றும் நாமே அரும்பும்
செயல்களை ஆங்கே...
கரும்பாக ஆம்பலாய்ப்
புன்னகைத்தே
அன்றன்றே
செய்திடுக!
சோம்பலில்லா
வாழ்வையே சொல்!



**முனைவர் இராம.வேதநாயகம்.**




## குழந்தைப் பாடல்

எங்கள் தமிழ்மொழி!

இனிமை மொழியே
தமிழ்மொழி
எங்கள் மொழியே
தமிழ்மொழி
தனிமை மொழியே
தமிழ்மொழி
தக்க மொழியே
தமிழ்மொழி!

உயர்ந்த மொழியே
தமிழ்மொழி
ஓங்கும் மொழியே
தமிழ்மொழி
நயன்மை மொழியே
தமிழ்மொழி
நாடே போற்றும்
தமிழ்மொழி!

பொங்கும் மொழியே
தமிழ்மொழி
பொலிவு மொழியே
தமிழ்மொழி
எங்கும் எங்கள் தமிழ்மொழி
ஏற்ற மான தமிழ்மொழி!




## குழந்தைப் பாடல்

சிந்தனைசெய் பாப்பா!
சிந்தனை செய்வாய் பாப்பா
சீருடன் படிப்பாய் பாப்பா
வந்தனை செய்வாய் பாப்பா
வண்ணமாய்ப்
படிப்பாய்பாப்பா!

இலக்கியம் படிப்பாய் பாப்பா
இலக்கணம் படிப்பாய் பாப்பா
கலைகளே உண்டு பாப்பா
கனிவுடன் படிப்பாய் பாப்பா!

நீதிநூல் உண்டு பாப்பா
நிறைவுடன் படிப்பாய் பாப்பா
ஓதிடும் குறளும் பாப்பா
ஒண்மையாய்ப் படிப்பாய்
பாப்பா!

முனைவர்
இராம.வேதநாயகம்.



## மீட்டர் வட்டி

இந்து சிந்து பிந்து என
எந்த அழகான பெயரும்
உனக்கு மிகப் பொருத்தமாக
இருந்தாலும்(கூடக்)
கந்து வட்டிக்காரி என்றே
உன்னை அனைவரும்
அழைப்பது எனக்குத்
தீராத வருத்தம்!
என் முதல் ஆசை
உன்னிடமிருந்து மு த் த ம்
பெறுவது கூட அல்ல!
உன் மீட்டர் வட்டித்
தொழிலை நீ மிக
முழுவதுமாய்க் கை விட
வேண்டும்!
எத்தனை எத்தனையோ
அழகான அற்புதமான
பட்டங்கள் இருக்க.
நீயோ கொழுப்புத்
திலகம் என்ற பட்டம்
பெற்றிருக்கிறாய்!
காளைக்குத் திமில் போல
அந்தத் திமிர் உனக்கு
எத்தனை அழகென்று
எனக்கு (மட்டும்)தானே
தெரியும்!
மனம் மாறி உன்
வட்டித் தொழில்
என்று அஸ்தமனமடைகிறதோ
அன்றிலிருந்தே
என்னைப்போல்
அனைவரும்
உன்னை
இந்து
மகாதேவி
என்றே
அழைப்பார்கள்!



முத்து
ஆனந்த் வேலூர்



முகம் தேவையில்லை
உன் திறமையை
வெளிக்காட்ட ஒரு போதும்
கை விட்டு விடாதே
உன் முயற்சியை!

துரோகங்களை
கடந்து போனால்
நீயும் கடவுளே!

தோற்றுப் போனாலும்
பரவாயில்லை
போராடி தோற்றுப் போ
வேடிக்கை பார்ப்பதை விட
களம் கண்டு
காயப்படுவது மேலானது!


நின் நினைவுகள்
நீங்காத வரை–எனக்குள்
நிம்மதியேது?!

இழந்து விட்ட பிறகும்
இன்னமும் இனிக்கிறது
முதல் காதல்!

இழந்து விட்ட பிறகும்
இன்னும் வேண்டுமென
வேண்டுகிறது மனது
திகட்டாத அந்த முதல்
காதலை!

நீ பரிசாய் தந்த
கண்ணீரையெல்லாம்
விற்பனைக்கு வைத்தால்
இவ்வுலகின் முதல்
கோடீஸ்வரன் நான் தானடி!
ஏனோ என்னை போலவே
என் கண்ணீரும்
மதிப்பிழந்து போனது!

பக்குவமாய் எடுத்து தந்த
பனிக்கூழ்
உருகி தான்
போனது
உன் காதல்
பார்வையில்!



லி.நௌஷாத்
கான்

1. எந்த உறவாக
இருந்தாலும்
ஒன்று கண்ணாடி போல்
இருக்க வேண்டும் அல்லது
நிழல் போல இருக்க
வேண்டும் ஏனென்றால்
கண்ணாடி பொய்
சொல்லாதே நிழல் நம்மை
விட்டு பிரியாது

2. எது வந்தாலும்
தனியாக சமாளிக்க
பழகிக்கொண்டால்
கடல் அலை மட்டும் அல்ல
புயலே வந்தாலும் கவலை
இருக்காது


3. அறிவு பணத்தை தான்
சம்பாதிக்கும்
அன்பு தன் மனிதர்களை
சம்பாதிக்கும்



4. உழைப்பு
சம்பாதித்துக்
கொடுக்கும்
ஒழுக்கம்
சேமித்துக்
கொடுக்கும்

5.தேவை என்றுசேர்த்து
வைத்தால்
தேவைப்படும்போது
சில்லறைக்கு கூட மதிப்பு
உண்டு

நடேஷ் கன்னா
கல்லிடைக்குறிச்சி



யாருமின்றி இருப்பதெல்லாம்
தனிமை என்பதில்லை..
தனிமை என்பது,
நீ இல்லாத இடத்தில்
நான் இருப்பதுதான்
கண்மணி....

nishaa

## கொடி !

ஒரே இடத்தில், ஒரே
கம்பத்தில் பறந்து
கொண்டிருந்த தேசிய
கொடியை பார்த்து
கட்சிக்கொடிகள்
சொல்லின...

"என்னதான் நீ தேசியக்
கொடியாக இருந்தாலும்
உன்னால் ஊர் சுற்ற
முடியாது, நாங்கள்
ஐந்தாண்டுகளுக்கு ஒரு
முறை சந்து பொந்துகள்
முதற் கொண்டு
பெரிய மைதானங்கள்
வரை,சிறிய பெரிய
வாகனங்களிலும்,தொண்டர்கள்
கைகளிலும் பறக்கின்றோம் !"

தேசியக்கொடி அமைதியாய்
சொன்னது...

"உங்களை
ஐந்தாண்டுகளுக்கு
ஒரு முறை தகுதி
உள்ளவர்களாலும் தகுதி
அற்றவர்களாலும் தூக்கிக்
கொண்டாடப்படுகிறீர்கள்,ஆனால்
என் நிலை அப்படியில்லை
வருடம்தோறும்
இரண்டு முறை... தகுதி
உள்ளவர்களால் மட்டுமே
நான் ஏற்றப்படுகின்றேன், !"
வாயடைத்து போயின கட்சி
கொடிகள்.

--------------------

## தேர்தல் !

ஆட்டோகாரர்கள் முதல்...
மேடையாட்ட கலைஞர்கள்
வரை... இளைஞர் முதல்
மூதாட்டிகள் வரை...
போஸ்டர் அடித்தவர் முதல்
போஸ்டர் ஒட்டுபவர் வரை...
சோறு போடுகிறது ஒரு
இடை தேர்தல் !

--------------------



## மது !


மதுவை முற்றிலும் துறந்த
நான்... இப்போதெல்லாம்
மதுவை அடிக்கடி
விரும்பிப் பருகுகிறேன்...
அப்படியாவது...
உன்னை இரண்டாக
பார்கலாமென்ற ஆசையில் !

--------------------




## வெயில் !

"அப்பா தப்பிச்சேன், போகிற
வரைக்கும் குளிர்சாதன
பெட்டியில் குளு குளுன்னு
இருக்கலாம் !" என.
இறந்தவர் கூட
நினைத்துக்
கொள்ளும்
வகையில்
வாட்டி
வதைக்கிறது
வெயில்!



எம்.பி. தினேஷ்.
கோவை



## இச்சகம் பேசாதே!

விடியும் பொழுது
விந்தையாகட்டும்!

உன் வியர்வை துளிகள்
முத்தாகட்டும்!

தடைகள் யாவும் தூளா
ஆகட்டும்!

தன்னம்பிக்கை உனக்குத்
துணையாகட்டும்!

சோம்பல் கலைந்து
துள்ளி எழு!

தோல்வி என்பதை தள்ளிஎழு!

மாயை உலகமிது – மனதை
மயக்கும் நிழல் ஆட்டம்!

உண்மை வேடம்
பூண்டு உள்ளத்தை
ஆட் கொள்ளும்!

இந்த வஞ்சகப் பூமி
நிலை இல்லாத கானல்
நீர்!

பொய்கள் மலர்ந்த இவ்வுலகில்
ஆசை வலைப் பின்னலில்
சிக்கித் தவிக்கும் மானுடம்!

பாச உணர்வுகளால்
இவ்வுலகை சூழக் காக்கிறது!
பொய்யான கோலங்கள்
பூண்டது இச்சகம்!

இச்சகக் என்பது இந்த
உலகத்தையும் உலக
இன்பங்களையும் குறிக்கும்!

பணமும் புகழும் நிலை என
நம்பி பண்பை இழக்கும்
வேடம்!

மண்ணின் மடியில் முடியும்
போது கையினில் மிஞ்சுவது
சூனியம்!

உறவுகள் பூட்டும் விலங்கு
உணர்ச்சிகள் ஆட்டும்
ஊஞ்சல்!

இச்சகக் கோலத்தைக் கடந்து
உன்னை உணர்த்துவதே
முக்தி!

ஒரு சிலந்தி தன்
வலையிலேயே சிக்கிக்
கொள்வதைப் போல
மனிதன் தன் உருவாக்கிய
ஆசைகளிலேயே கட்டுண்டு
கிடக்கிறான்!



இச்சகம் காட்டும் மாயை
–
எமனை கூட்டி வரும்
சாயை!

பெ.திருமுகம்.
மணமேல்குடி



## நூல் பல கற்று வாழ்.!

நூல் என்று வருவதெல்லாம் நூலாகுமா?
நூல்களையேப் படித்தால் மட்டும்.. உயிர் வாழுமா?

நாளொன்று போனதென்று வாழ முடியுமா.. நூலின்றி
அறிவுலகம் தூங்க முடியுமா?

நூலொன்று எழுதுகின்ற ஆசை வந்தது.. நூல் போட்டு
நொந்தவர்கள் முகமும் தெரிந்தது.! கஷ்டப்பட்டு கடனும்
பட்டு நூலும் வந்தது.. ஆமாம் நூலும் வந்தது.. அதைக் காசு
கொடுத்து வாங்குவோர்கள் யார் என்றது.!
ஐயா.. யார் என்றது.!

கதை..கவிதை.. கட்டுரைகள் மறையலாகுமா
அச்சாகி வாராமலே அமைதி தோன்றுமா?
இச்சகத்தில் எழுத்து ஒன்றே எங்கள் ஜீவனே.! ஆமாம்
எங்கள் ஜீவனே. ! அதை ஏடுதனில் பதித்துத் தரும் நூல்கள்
வாழ்கவே.! ஐயா.. நூல்கள் வாழ்கவே!



## மீனாட்சி கல்யாணம்!

கல்யாணம்மாம் கல்யாணம்.. மீனாட்சிக் கல்யாணம்..!
சொக்கநாதர் கரம் பிடிக்க.. சித்திரையில் கல்யாணம்.!
சிறப்பு மிகு கல்யாணம்.!

வைகையாற்றில் அழகர் இறங்கும் மதுரையிலே கல்யாணம்..
திருமாலே கரம் பிடித்து தந்ததிந்த கல்யாணம்.! கூடல் நகரில்
...கோடிக் கணக்கில்..பக்தர் சூழ கல்யாணம்.! .ஆடிப்பாடி
வீதியெங்கும் ஆனந்தமாய் கல்யாணம்.!

முத்துநகர் மதுரையிலே மூவுலகை அரசாளும்...
அங்கையற் கன்னிக்கின்று அழகான கல்யாணம்.!
எத்திசையும் புகழ் மணக்கும் இனிய தமிழ்ச் சோலையிலே..
இளவேனிற் காலத்திலே சித்திரையில் கல்யாணம்.!



நான்கு மாட வீதியிலே நாதஸ்வர ஊர்வலம்..
மேலமாசி வீதியிலே சொக்கநாதர் கிரிவலம்!
மீனாட்சி ஆட்சி செய்யும்மதுரையிலே
கல்யாணம்..! மெய்மறந்து சங்கத்தமிழ்
வாழ்த்த வந்த கல்யாணம்.!

வே.கல்யாண்குமார்.



## ஹைக்கூகள்

சமாதி கட்டுகிறேன்/
அம்மாவின் கல்லறை இடித்து/
புதுப்பிக்கும் திட்டத்திற்கு/

பெயர் சூட்டு விழா/
மழையால் பாதிக்கப்படுகிறது/
பெயரற்ற புயல்/

காற்றைக் கிழிக்கிறது/
வெட்டுகையில் கை கிழித்து/
குழலான மூங்கில்/

அமைதியான அலைகள்/
சீறிடப் பயிற்சி பெறுகின்றன/
வலுவடைந்த புயலிடம்/

அந்தகாரத்தை/
ஓரளவு ஒளிரச் செய்யும்/
சித்தார்த்தனின் மௌனம்/

மேற்குத் தொடர்ச்சி
மலைகள்/ அதிகம் நனையப்
போவதில்லை/ மந்தமான
தென்மேற்கு பருவமழை/

இலையுதிர்வு களை/
காட்சியாக்க விழைகையில்/
வீழ்ந்திடும் முதல் மழை/

வேகாமல் தப்பித்தது/
உக்கிர வெயிலைத் தடுத்த/

சிறு மழை/
மீண்டும் நிர்வாணம்/
மூடுபனியைக் கதிரவன்
திறந்திட/ இயற்கை எழில்கள்/

வீசப்பட்ட காற்று/
விழுந்தெழுந்து விடைபெற/
இலைகளுடன் ரசிக்கும் மரம்/

சுறுசுறுப்பை
கற்பிக்கின்றன/
மழைநாளில்
மாயமான எறும்புகள்/
கண்டுகொள்ளாத
மனிதன்./

அகவி ஓடிய மயிலொன்று/
ஹைக்கூவின் மூன்றாம்
அடியான/ பூங்கா இதுதான்/

அடுத்த தீபாவளிக்கும்
நினைவு வரும்/
சிவகாசி சிறுவர்களின்/
அவல நிலை/

மீண்டும் தொடங்கியது/
வில்லின் வண்ணத்தை
எண்ணிட/
இடைவெளி விட்ட மழை/

தேய்பிறையில் நடைப் பயிற்சி/
தினம் எடை குறைகிறது/
முழு நிலவுக்கு/

உச்சிகால
வெயிலை...
தாக்குப் பிடிக்க
முடியாமல்... வேப்ப
மர நிழலில் சற்றே
இளைப்பாறுகிறது...
சூரியன்..

தே.சௌந்தரராஜன்
கல்யாணம் பூண்டி





## பாரதிதாசனின் "அழகின் சிரிப்பு"(பதினாறு அழகு)

கடல்பரப்பில் குழந்தைச் சிரிப்பில் "அழகைக்" கண்டவர்
மகிழும் மனதால் பார்த்தால் அனைத்துமே "அழகு" என்றவர்
பள்ளிக்கூடம் சென்று திரும்பும் பிள்ளைப்போல்... "கடல்" அலை
காண கோடிக்கண் வேண்டுமென்றவர்.
மென்காற்றில் அனிச்சம் பூவும் நோகாது என்றவர்..
வன்"காற்றில்" திண்குன்றைத் தூளாக்கும் என்று
சூளுரைத்தவர் "காட்டிற்கு" மரங்களே கூரை என்று ரசித்தவர்
அங்கு நம்மை வரவேற்பது மயிலே என்று மகிழ்ந்தவர்
செங்குத்தாய்"குன்றமாய்"மரகத திருமேனியாய் நிற்கும்
"குன்றை" ரசித்தவர் கருந்தமிழ்ச் சொல்லுக்குள்ளே
கருத்துகள் இருப்பதைப் போல என்று குன்றின் பயனைப்
பேசியவர் நீரற்ற "ஆறு" கோடை ஆட்சி... மாற்றிற்று புரட்சி
வெள்ளமென "ஆற்றுத்தாயை "வாழ்த்திய கவி
"தாமரைமலரில் "அழகை ரசித்து ஆயிரம் பெண்களின்
ஆர்ப்பாட்டமென வெகுண்டெழச் செய்த புதுவைப் புயல்..
"பரிதி"யின்றேல் நிலவிற்கு ஒளியும் இல்லை
புவியில் மனிதரும் இல்லை என்று ஞாயிறின் சிறப்பை அழகிய
வரியில் வடித்தவர்.. எத்தனை பெரிய "வானம்"... அதில்
நாமோ... சிற்றெறும்பு... இதில் ஏன் மேல் கீழ் சாதியென வம்பு...
என்று உண்மையை உரைத்தவர். தன் வாலை பாம்பென்று
எண்ணி குரங்கு உச்சி போய்த் தன் வால் பார்த்த... "ஆலமர"
அழகில் நகையாடியவர். "புறாக்கள்" வாழ்வில் வெட்டுமில்லை
குத்துமில்லை..இரையைத் தருவதில் காட்டும் தாய்த்தந்தை...
அன்பிற்கோர் எடுத்தக்காட்டு என்று புறாக்களின் வாழ்வைப்
படம்பிடித்தவர் காட்டில் திரியும் போது கிரீச் என்று
கதறுகிறாய்.. கூட்டில் குருவியைக் கொஞ்சுகிறாய்... என்று
"கிளி"யின் போக்கைப் பேசியவர். பகலில் தங்கச் சேலையாய்
இருக்கும் நீதான் இரவில் வெண்பட்டுச் சேலையானாயென
"இருளை"யும் இரசித்தவர்.. நாட்டார்க்கெல்லாம் உயிர்தரும்
உணவின் ஊற்றாய் "சிற்றூ(ர்)"ரை உயர்த்தியவர்..
முயற்சியும் முழுதுழைப்பும் சிற்றூரில் கண்டவர் பயிற்சியும்
கலையுணர்வையும் "பட்டணத்தில்" பார்த்து ரசித்தவர்...
இயற்ற("தமிழே)" என் அன்பே... அடற்றமிழே நீ என்றன் ஆவி
"அடக்கடா" என்றுரைத்த அறங்காக்கும் தமிழே... இங்குத்
தடைக்கற்கள் உண்டு என்றால்.. " தடந்தோளும்" உண்டு..
தமிழே... நீயோ படைமறவன் வீடு என்றால்
நான் அங்கோர் மறவன் என்று முத்தாய்ப்பாய் "அழகின்
சிரிப்பில்" நம்மைத் தட்டி எழுப்பிய கவியே...
எம் பாரதிதானே... எமக்கு நீர்தான்
புரட்சியை விதைத்த ஆசான்... நான் வீழ்ந்த
பொழுதெல்லாம் எழவைத்துச் சிரித்து
மகிழ்ந்தவர்..இவ்வுலகம் இருக்கும் வரை...
புரட்சிக்கவிஞர் பாரதிதாசனும் இருப்பார்...அவர்
அடி தொடர்வோம் வாழ்க பாரதிதாசன் புகழ்..



ம. முத்துலெட்சுமி , ஒசூர்
























**ATTENTION**

**ரயில்வே மின்சார ஒப்பந்த பணிக்கு**

10th., ITI Electrical B- Licence, Dip EEE தகுதியுடையோர் விண்ணப்பிக்கலாம்.

தொடர்புக்கு:- 9094176404/ 7904974247.













































திருமுடிவாக்கம்
அருகாமையில் அமைந்துள்ள
சாரதா கம்பெனிக்கு

## ஆட்கள் தேவை

**ஆண்கள் மட்டும்**

வயது: 18 முதல் 35 வரை

**கல்வி தகுதி**
**10 முதல் any Degree**

தங்கும் இடம் உணவு வசதி உண்டு
ESI , PF , Attendance Allowance போன்ற
அனைத்து வசதிகளும் உண்டு

சம்பளம் :
**18,000 முதல் 22,000 /-**
தொடர்புக்கு :
9962400330 , 9962400319 , 9962400336
மெயில் : hrsarathagroup@gmail.com




























# ATTENTION

## ரயில்வே மின்சார ஒப்பந்த பணிக்கு

10th., ITI Electrical B- Licence, Dip EEE


தகுதியுடையோர் விண்ணப்பிக்கலாம்.

தொடர்புக்கு:- 9094176404/ 7904974247.



# பல்சுவை களஞ்சியம்





# மீம்ஸ்







# தமிழில் மனைவி என்பதற்கு 62 வகையான பெயர்கள் உள்ளன

01.துணைவி
02.கடகி
03,கண்ணாட்டி
04.கற்பாள்
05 காந்தை
06.வீட்டுக்காரி
07.கிருகம்
08.கிழத்தி
09.குடும்பினி
10.பெருமாட்டி
11.பாரியாள்
12.பொருளாள்
13.இல்லத்தரசி,
14.மனையுறுமகள்
15.வதுகை
16வாழ்க்கை
17.வேட்டாள்
18.விருந்தனை
19.உல்லி
20.சானி
21.சீமாட்டி




22.சூரியை
23.சையோகை
24.தம்பிராட்டி
25.தம்மேய்
26.தலைமகள்
27.தாட்டி
28.தாரம்
29.மனைவி
30.நாச்சி
31.பரவை
32.பெண்டு
33.இல்லாள்
34.மணவாளி
35.மணவாட்டி
36.பத்தினி
37.கோமகள்
38.தலைவி
39.அன்பி
40.இயமானி
41.தலைமகள்
42.ஆட்டி
43.அகமுடையாள்
44.ஆம்படையாள்
45.நாயகி
46.பெண்டாட்டி
47.மணவாட்டி
48.ஊழ்த்துணை
49.மனைத்தக்காள்
50.வதூ
51.விருத்தனை
52.இல்
53.காந்தை
54.பாரியை
55.மகடூஉ
56.மனைக்கிழத்தி
57.குலி
58.வல்லபி
59.வனிதை
60.வீட்டாள்
61.ஆயந்தி
62.ஊடை

**ராஜகோபாலன்.ப**
சென்னை 18

# சித்தர்கள் கூறும் தான பலன்கள்

1. அரிசியை தானம் தர பாவங்கள் தொலையும்
2. வெள்ளியை தானம் தர மனக்கவலை மறையும்
3. தங்கம் தானம் தர தோஷம் விலகும்
4. பழங்களைத் தானம் தர புத்தி, சித்தி கிட்டும்
5. தயிர் தானம் தர இந்திரிய விருத்தியாகும்
6. நெய் தானம் தர நோயைப் போக்கும்
7. பால் தானம் தர துக்கநிலை மாறும்
8. தேன் தானம் தர பிள்ளைப்பேறு கிட்டும்
9. நெல்லிக்கனி தானம் தர ஞானம் உண்டாகும்




10. தேங்காய் தானம் தர நினைத்த காரியம் வெற்றி அடையும்
11. தீபங்களை தானம் தர கண்பார்வை தெளிவாகும்
12. கோ (மாடு) தானம் தர ரிஷி, வேத, பிதிர்கடன் விலகும்
13. பூமியை தானம் தர பிரம்மலோக தரிசனமும் ஈஸ்வரலோக தரிசனமும் கிட்டும்
14. ஆடையை தானம் தர ஆயுள் விருத்தியாகும்
15. அன்னத்தை தானம் தர தரித்திரமும் கடனும் தீரும்.



# விடுகதை

| | |
|---|---|
| இது ஒரு பூ. முதற்பகுதி ஆதவனின் மறுபெயர்; பிற்பகுதி தேசத் தந்தையை குறிக்கும். அது என்ன? | சூரிய காந்தி |
| பச்சை நிற அழகிக்கு உதட்டுச் சாயம் பூசாமலே சிவந்தவாய் அவள் யார்? | கிளி |
| இரவு வீட்டிற்கு வருவான், இரவு முழுவதும் இருப்பான் காலையில் சொல்லாமல் கொள்ளாமல் போய்விட்டிருப்பான்? | நிலா |
| அம்மா படுத்திருக்க மகள் ஓடித்திரிவாள் அது என்ன? | அம்மி குளவி |
| ஒரு வீட்டுக்கு இரண்டு வாசல்படி. அது என்ன? | மூக்கு |
| ஊரெல்லாமல் ஒரே விளக்கு. அதற்கு ஒரு நாள் ஓய்வு அது? | சந்திரன் |



# ஜோக்ஸ்

காதல் One Side -ஆ பண்ணினாலும் Two Side-ஆ பண்ணினாலும் கடைசியா Suicide- தான் பண்ணக்கூடாது

இப்படிக்கு
காதல் பற்றி Four Side-ம் யோசிப்போர் சங்கம்

————————————————

உன் பெயரைக்கூட நான் எழுதுவதில்லை..
ஏன் தெரியுமா?
"பேனா" முனை உன்னை குத்திவிடுமோ என்று..

இப்படிக்கு
Spelling தெரியாமல் சமாளிப்போர் சங்கம்

————————————————

"டி.வி.பார்க்கறது பெண்களுக்கு சகஜம்தானே...

இதையேன் பெரிசா சொல்றீங்க...?"

"அட! நீங்க ஒன்னு கரண்ட் இல்லைன்னாலும் டி.வியைப் பார்த்துக்கிட்டு உக்கார்ந்திருக்காங்க.!"


————————————————

ஒருவர்: டாக்டர் செலவு மட்டும் எனக்கு மாசம் ஐந்நூறு ரூபாய் ஆகுது.

மற்றொருவர்: டாக்டரோட செலவைப் போய் நீங்க ஏன் பண்றீங்க?

————————————————

"சென்னையிலே தண்ணிக்



கஷ்டமாமே?"

ஆமா! குடிகாரங்க பெருத்துப் போயிட்டாங்க!"

————————————————

Bank லோன் கிண்டல்..!

"ஹலோ! நாங்க பேங்க்லேர்ந்து பேசறோம், உங்க அக்கவுண்டை பேஸ் பண்ணி உங்களுக்கு 10 லட்ச ரூபாய் வரைக்கும் லோன் சாங்ஷன் ஆகியிருக்கு சார்...

அப்படியா! உடனே அந்தப் பணத்தை என்னோட சேவிங்ஸ் அக்கவுண்ட்லயே போட்டுருங்க!

?!?!?!

————————————————

இஞ்ஜினியரிங் Class Room-ல்..

ஆசிரியர்: என்னடா போயும் போயும் மெக்கானிக்கல் இஞ்ஜினியரிங் கிடைச்சுருக்கே அப்படீன்னு யாரும் வருத்தப்படவேண்டாம், என்னோட ஃபிரெண்ட் ஒருத்தன் திருச்சில 5000 ரூபாய் வாங்கிண்டு இருந்தான், இன்னிக்கு மும்பைல 1 லட்சம் வாங்கிட்டுருக்கான்"

மாணவர்: என்ன கடனா?

————————————————

"தேள் கொட்டினால் பயங்கரமா வலி இருக்கும்னு சொல்வாங்க...

நீங்க இப்படி சிரிக்கிறீங்களே...?"

"தேள் கொட்டினது என்னோட மனைவிக்கு...!"

————————————————

திருடன் 1: டேய் நேத்து நாம திருடுன பணத்த எண்ணாமகூட ஒளிச்சி வச்சிட்டோமே.....

திருடன் 2: அதுனால என்ன நாளைக்கு பேப்பர்ல வரும்ல... அப்ப பார்த்துக்கலாம்.

————————————————

"என் உயிரைக் காப்பற்றிய நர்சையே நான் கல்யாணம் பண்ணிக்கிட்டேன்."

"எப்படிக் காப்பாத்தினா?"

"ஆபரேசன் ரூமிலேயிருந்து பின்வழியா என்னைத் தப்பிச்சிப் போக வச்சது அவதான்!"



# குழந்தைகளின் கை வண்ணம்

சிறுவர் உலகம்



## நாங்களும் நல்லவர்களே..!



ஒரு காட்டில் நரிகளும் மற்ற விலங்குகளும் வாழ்ந்து கொண்டிருந்தன. அந்த காட்டில் நரிகள் என்றாலே ஏமாற்றுப் பேர்வழிகள் என்று பெயர் பெற்றிருந்தன. அதனால் அந்தக் காட்டுக்குள் இருக்கும் நரிகளை எல்லா விலங்குகளும் அடித்து விரட்டின. அதனால் நரிகள் அந்தக் காட்டை விட்டு வெளியேறி அடுத்த காட்டிற்குச் சென்றுவிட்டன.

இரண்டு தலைமுறைகள் கடந்துவிட்டது. மூன்றாவது தலைமுறையில் பரதன் என்ற இளம் நரி இருந்தது. அந்த நரி அவமானத்தை துடைத்து திரும்பவும் சொந்த காட்டில் நாம் வாழ வேண்டும். நம் இனத்தையும் சொந்த காட்டிற்கு அழைத்துச் செல்ல வேண்டும் என்று எண்ணியது.

அதற்காக பழைய காட்டிற்கு சென்றது. பரதனைக் கண்ட வயதான விலங்குகள் நரியை அடையாளம் கண்டு கொண்டு, இவன் இங்கு எதற்கு வந்தான் என்று முறைத்து பார்த்தனர். அவனிடம் யாரும் பேச வேண்டாம்! என்று இளைய தலைமுறைக்கு உத்தரவிட்டன.

எங்கள் இனத்தை சகுனி குணம் படைத்தவர்கள், கூட இருந்தே குழி பறிப்பவர்கள். தந்திரசாலிகள் என்று யாரோ கட்டிவிட்ட கதையை நம்பாதீர்கள். நாங்கள் மட்டும்தான் கெட்டவர்களா? மலர்களில் எல்லாமே மணமிக்கதா? மணமற்றவையும் கலந்துதான் உள்ளன. எங்களிலும் நல்லவர் இருக்கிறோம் என்று வாதம் செய்து விலங்குகளிடம் நியாயம் கேட்டது.

ஆனால் எல்லா விலங்குகளும் அதை ஏற்பதாக இல்லை. நீ இங்கிருந்து ஓடிப் போய்விடு! என்று மற்ற விலங்குகள் பரதன் நரியை விரட்டின. மனம் உடைந்த நரி, மலை மீதேறி கீழே விழுந்து உயிரை விட்டுவிட முடிவெடுத்தது.

அப்போது அங்கிருந்த குயில், நரி அண்ணே உங்கள் இனத்தின் அவப்பெயரை துடைக்க தானே புறப்பட்டு வந்தீர்கள்? ஒரு லட்சியத்தை சுலபமாக அடைய முடியாது. விலங்குகள் போற்றும்படி செய்து அவைகளின் நம்பிக்கையைப் பெற்றால் உங்கள் குறிக்கோள் வெற்றி பெறும். முதலில் முயற்சி செய்யுங்கள்! என்று கூறியது.

இதைக் கேட்ட நரி, நீ கூறுவதும் சரிதான் என்று கூறி தன் தற்கொலை முடிவை கைவிட்டு, புத்திசாலித்தனமாக செயல்பட முடிவெடுத்தது. இதற்காக வேடர்கள் வலை விரித்திருப்பதை முன்பே அறிந்து, அதை பறவைகளிடம் கூறி நன்மதிப்பைப் பெற்றது நரி. அதேபோல காலுடைந்த முயலை பத்திரமாக அதன் இருப்பிடத்திற்கு அழைத்து வந்து விட்டது. ஒரு மரத்தில் இருந்து தவறி விழுந்த குருவி குஞ்சை, அதன் கூட்டில் எடுத்து வைத்தது. இதைக் கண்ட தாய்ப்பறவை நரியை வாழ்த்தியது.

இதுபோல சின்னச் சின்ன உதவிகளை செய்து நரி கொஞ்சம் கொஞ்சமாக நற்பெயர் பெற்று வந்தது. ஒரு நாள் வேட்டைக்காரர்கள், பெரிய பள்ளம் வெட்டி இலை தழைகளால் மூடி வைப்பதை நரி பார்த்தது. அந்தப் பக்கமாக வந்த யானைக் கூட்டத்தை எச்சரிக்கை செய்து யானைகளை காப்பாற்றியது.

யானைக்கூட்டம் காட்டுக்கு ராஜாவான சிங்கத்திடம் நரி செய்த உதவியை சொல்லின. அதேபோல முயல், புறாக்கள் என அனைத்து பறவைகளும் தங்களுக்கு நரி செய்த நன்மையைக் கூறினர். இதைக்கேட்ட சிங்கராஜா, நரிகளை தங்கள் காட்டில் சேர்த்துக் கொள்வதாக முடிவெடுத்தது. இதைக் கேட்டதும் பரதன் சந்தோஷமாக தங்கள் வசிப்பிடத்திற்குச் சென்று, மற்ற நரிக்கூட்டங்களை அழைத்து வந்து தனது சொந்தகாட்டில் மகிழ்ச்சியாக வாழத் தொடங்கியது.

தத்துவம் :
உலகில் நல்லவர்களும் இருக்கிறார்கள், கெட்டவர்களும் இருக்கிறார்கள். ஒட்டுமொத்தமாக அனைவரையும் தீயவர்கள் என்று நினைக்கக்கூடாது. அது நாம் செய்யும் பெரும் தவறாகும்.

## விடுகதைகள்

1. சின்னத் தம்பிக்கு தொப்பியே வினை? அது என்ன?

2. தலை மட்டும் கொண்ட சிறகில்லாத பறவை தேசமெல்லாம் சுத்தும்?


3. உலகமெங்கும் படுக்கை விரித்தும் உறங்காமல் அலைகிறான். அவன் யார்?

4. காற்று வீசும் அழகான மரம் அது என்ன?
5. கட்டிய சேலையை அவிழ்க்க நினைத்தால் கண்ணீரும் கம்பலையும்தான்.

6. எப்போதும் காதருகில் ரகசியம் பேசிக் கொண்டிருப்பவள்?

நீங்கள் யோசித்திருந்த விடைகள் சரிதானா என்பதை சோதித்துக் கொள்ளுங்கள்.

1. தீக்குச்சி
2. தபால் தலை
3. கடல் அலை
4. சாமரம்
5. வெங்காயம்
6. செல்பேசி



## தெரிந்து கொள்வோம்

1. சர்வதேச ஒலிம்பிக் குழு தலைமையகம் எங்கு உள்ளது? லொசேன் (சுட்சர்லாந்து)

2. ஜப்பான் டோக்கியோவில் இதற்கு முன் எந்த ஆண்டு கோடை ஒலிம்பிக் நடைபெற்றது? 1964 ஆண்டு

3.ஜப்பான் டோக்கியோ ஒலிம்பிக் போட்டிகளில் வாள் சண்டை பிரிவில் தகுதி பெற்ற இந்திய வீரர்கனை யார்? C.A.பவானி தேவி

4. சர்வதேச ஒலிம்பிக் கமிட்டியின் தற்போதைய தலைவர் யார்? தாமஸ் பேச் (2020 ஆண்டு)

5. 2008 ஆண்டு ஒலிம்பிக்கில் துப்பாக்கி சுடும் போட்டியில் தங்கம் வென்ற இந்திய வீரர் யார்? அபினவ் பிந்திரா.

6. 2008 ஆண்டு ஒலிம்பிக்கில் குத்துச்சண்டை போட்டியில் வெண்கலப் பதக்கம் வென்ற இந்திய வீரர் யார்? விஜேந்தர் குமார்

7. இந்திய ஹாக்கி அணி இதுவரை எத்தனை தங்க பதக்கம் பெற்றுள்ளது? எட்டு (2020 ஆண்டு வரை)

8. 2000 ஆண்டில் கர்னம் மல்லெஸ்வரி எந்த பிரிவில் வெண்கலப் பதக்கம் வென்றார்? பழுதூக்குதல்

9. தென் அமெரிக்கா கண்டத்தில் ஒலிம்பிக் எந்த ஆண்டு நடைபெற்றது? 2016 - ரியோ ஒலிம்பிக்

10. 2022 ஆண்டு குளிர்கால ஒலிம்பிக் எங்கு நடைபெற்றது? சீனா - பெய்ஜிங்

சுதந்திர போராட்டம்:

11. ஆங்கிலேயருக்கு எதிராக வேலூரில் எந்த ஆண்டு புரட்சி ஏற்பட்டது? 10.07.1806

12. மருது சகோதரர்கள் எங்கு தூக்கில் போடப்பட்டனர்? திருப்பத்தூர் கோட்டை


13. "தமிழ்நாட்டின் பகத்சிங்" என்று அழைக்கபடுபவர் யார்? வாஞ்சிநாதன்

14. தன்னாட்சி இயக்கத்தை தொடங்கியது யார்? அன்னி பெசண்ட் (சுப்பிரமணிய அய்யர், சத்தியேந்திர நாத் போசு, அன்னி பெசண்ட், முகமது அலி ஜின்னா ஆகியோரால் இவ்வியக்கம் நிறுவப்பட்டது.)

15. உப்பு சத்தியாக்கிரகம் எந்த ஆண்டு நடைப்பெற்றது? 12-03-1930

16. "தமிழ்நாட்டின் திலகர்" என்று அழைக்கபடுபவர் யார்? வ.உ.சிதம்பரம்

17.கத்தியின்றி ரத்தமின்றி யுத்தமொன்று வருகுது என்ற பாடலை பாடியவர் யார்?



வெ.இராமலிங்கம்

18. லாலா லஜபதி ராய் பிறந்த மாநில எது? ஃபெரோசுப்பூர் - பஞ்சாப் மாநிலம்

19 .வ.உ.சி அவர்கள் சுதேசி நாவாய் சங்கம் எந்த ஆண்டு தொடங்கினார்? 16-10-1906

20. இந்திரா காந்தி பிறந்த இல்லத்தின் பெயர் என்ன? ஆனந்த பவன்.

21.திப்பு சுல்தானின் கோடை கால அரண்மனை எங்கு உள்ளது? ஸ்ரீரங்கப்பட்டினம்

பொது அறிவு:

22. தூக்கம் உன் கண்களை தழுவட்டுமே பாடல் இடம் பெற்ற திரைப்படம் எது? ஆலயமணி.

23. மங்கலம்பள்ளி பாலமுரளி கிருஷ்ணா பிறந்த ஊர் எது? சங்கரகுப்தம், கிழக்கு கோதாவரி மாவட்டம்.(இன்றைய ஆந்திரப் பிரதேசம்)

24. குருதிப்புனல் நூலுக்கு சாகித்திய அகாடமி விருது பெற்ற எழுத்தாளர் யார்? இந்திரா பார்த்தசாரதி

25. இந்தியாவின் பசுமைப் புரட்சியின் சிற்பி யார்? M.S.சுவாமிநாதன்

26. நீர்க்குமிழி திரைப்படத்தின் இயக்குனர் யார்? K.பாலச்சந்தர்

27. பட்டாம்பூச்சி விற்பவர் என்ற நூலை எழுதியவர் யார்? நா. முத்துக்குமார்.

28. புதியதோர் உலகம் செய்வோம் என பாடி முழங்கிவர் யார்? பாரதிதாசன்.

29. மறைமலை அடிகளின் இயற்பெயர் என்ன? வேதாசலம்.

30. சர் C.V.ராமன் எந்த ஆண்டு ராமன் விளைவு வெளியிட்டார்? 1930 ஆண்டு



**T.P.குமரன்,**
மகர்நோம்புச்சாவடி, தஞ்சாவூர்

## ஒற்றுமை.!!

ஒரு வயல் வரப்பில் மூன்று கொக்குகள் ஒற்றுமையாக வாழ்ந்து கொண்டிருந்தன. எங்கு சென்றாலும், ஒன்றாக சென்றன. இரை தேடச் சென்றாலும் கிடைத்த இரையை மூன்று கொக்குகளும் பகிர்ந்து உணவு உண்டு வாழ்ந்து வந்தன. இவர்கள் ஒற்றுமையுடன் இருப்பது மற்ற விலங்குகளுக்கும், பறவைகளுக்கும் பொறாமையாக இருந்தது.

அங்கிருந்த நரி ஒன்று, அந்த மூன்று கொக்குகளையும் பிரித்தே தீருவேன் என்று சபதமிட்டபடி களம் இறங்கி சூழ்ச்சி செய்ய ஆரம்பித்தது. ஒரு நாள் மூன்று கொக்குகளும் வயல் வரப்பில் இரை தேடிக்கொண்டிருந்தன. நரி தன் சூழ்ச்சியை பயன்படுத்த திட்டமிட்டது.

அதன்படி முதலில் மூன்று கொக்குகளிடமும் நட்பை ஏற்படுத்திக் கொண்டது. சிறிது நாட்களுக்கு பிறகு, தனிமையில் இருந்த ஒரு கொக்கிடம் சென்று, கொக்கு நண்பரே! இவ்வளவு அழகாக இருக்கும் நீங்கள், அவலட்சணத்தின் ஒட்டு மொத்த உருவமாக திகழும் உங்கள் நண்பர் கொக்குகளுடன் எப்படி நட்புடன் இருக்கிறீர்கள்! உங்கள் அழகுக்கும் அந்தஸ்துக்கும் அவர்கள் நட்பு சரியானதா? என்று கேட்டது.



இதனை கேட்ட கொக்குவிற்கு நரி சொன்னது உண்மையாக இருக்குமோ என்ற சந்தேகம் ஏற்பட்டது. என்ன செய்வது! எல்லாம் என் நேரம் என்றபடி புலம்பியது. வந்த காரியம் முடிந்த திருப்தியில் உடனே நரி அந்த இடத்தை விட்டு சென்றது. இப்போது நரி இரண்டாவது கொக்குவிடம் சென்றது. கொக்கு நண்பரே எப்படி உள்ளீர்கள் என்று நலம் விசாரித்தது.

நலம் நரி நண்பரே, என்று பதிலுக்கு இரண்டாவது கொக்கு கூறியது. இப்போது தன் சூழ்ச்சியை தொடங்கியது நரி. கொக்கு நண்பரே! நீர் எவ்வளவு அறிவு உடையவர். எந்த குளத்தில் எவ்வளவு மீன்கள் உள்ளது என்பதை உங்களுடைய அறிவால் கண்டுபிடித்து விடுவீர்கள். இவ்வளவு அறிவுடைய நீங்கள் ஒன்றும் தெரியாத உங்கள் நண்பர் கொக்குகளுடன் நட்பு கொள்வதா? என்று சூழ்ச்சியை கிளப்பிவிட்டது. நரி கூறிய வார்த்தைகளால், இரண்டாவது கொக்குவும் யோசனை செய்ய ஆரம்பித்தது. நரி தான் வந்த வேலை முடிந்த திருப்தியில் கிளம்பிப் போனது.

இப்போது மூன்றாவது கொக்குவிடம் நரி சென்றது. அந்த கொக்குவிடம், கொக்கு நண்பரே! நீங்கள் எவ்வளவு வீரம் படைத்தவர். இரை பிடிப்பதிலும்! பறப்பதிலும், எவ்வளவு வீரமானவர். இவ்வளவு வீரம் உடைய நீங்கள் ஒன்றுக்கும் உதவாத மற்ற இரண்டு நண்பர் கொக்குகளுடன் சுற்றித் திரிந்தால் உங்களின் வீரமே உமக்கு மறந்துவிடும்! என்று கொக்குவிடம் கூறியது.

நரியின் சூழ்ச்சியால் அந்த மூன்று கொக்குகளுக்குள் நாளடைவில் பகைமையும், யார் பெரியவன் என்ற சண்டையும் ஏற்பட்டது. ஒன்றுடன் ஒன்று சண்டை போட்டுக் கொண்டன. இதனால் ஒற்றுமையுடன் இருந்த மூன்று கொக்குகளும் தனித்தனியே பிரிந்தன.

இவற்றையெல்லாம், பார்த்துக் கொண்டிருந்த கிளி ஒன்று, மூன்று கொக்குகளையும் சந்தித்து நரியின் சதித் திட்டத்தை சொல்லி முடித்தது. இதனைக் கேட்ட மூன்று கொக்குகளும்! நரியின் சூழ்ச்சியை புரிந்து கொண்டன. நல்ல நட்பை இழந்தோமே! என்று வருந்தின. இதுபோல் இனிமேல் புகழ்ச்சிக்கு மயங்காதீர்கள்! என்று கிளி அறிவுரை கூறிய பின்பு மூன்று கொக்குகளும் மறுபடியும் நட்புடன் இருந்தன.

தத்துவம் :
முன்பின் தெரியாதவர்கள் தேவையில்லாமல் நம்மைப் புகழ்ந்தால் அதற்கு மயங்கி விடக்கூடாது. அப்படி மயங்கும் பலவீனம் ஒருவருக்குள் இருந்தால் அவரை மற்றவர்கள் விரைவில் தங்கள் வசப்படுத்திவிட முடியும்.



குட்டி மான் ஓடுது
குட்டி முயலும் ஓடுது
எட்டி எட்டிப் பறந்தே
பட்டாம்பூச்சி சிரிக்குது...

குட்டிக் குரங்கு தாவுது
குட்டி அணிலும் தாவுது
எட்டி எட்டிப் பார்த்தே
பச்சைக்கிளி சிரிக்குது...

குட்டிப் பூனை கத்துது
குட்டி நாயும் கத்துது
எட்டி எட்டிக் குதித்தே
எலிக்குட்டி சிரிக்குது...

குட்டித் தவளை நீந்துது
குட்டி மீனும் நீந்துது
எட்டி எட்டிப் பார்த்தே
குட்டி வாத்தும் சிரிக்குது..

குட்டிக் குட்டி அன்பிலே
எல்லாம் இங்கே நடக்குது
எட்டி எட்டிப் பார்த்தே
குட்டி நிலா சிரிக்குது..

## புதிய பாப்பா பாட்டு

பாடி வரவேணும் பாப்பா! பாசம் மிகுந்தவளே பாப்பா! தேடி வந்த தெய்வம் பாப்பா! தேசத்தின் எதிர்காலம் பாப்பா!

வீதியிலே விளையாடும் பாப்பா! வேடிக்கை உலகம் இது பாப்பா! கீழே விழுந்தாலும் பாப்பா! கிளர்ந்தெழ மறவாதேப் பாப்பா!
உண்மை உனக்குத்துணைப் பாப்பா.. உன்படிப்பு அறிவின் ஒளி பாப்பா! பெண்மை உயர்ந்ததடிப் பாப்பா! நீ பேசுகின்ற தெய்வமடிப் பாப்பா.!

பாலியல் சீண்டல்களைக் கண்டால்.. நீ பயம் கொள்ளலாகாது பாப்பா! தோலை உரித்துவிடப் பாப்பா.. நீ துப்பாக்கி ஏந்திடடிப் பாப்பா.!
காலையெழுந்தவுடன் சிலம்பம்! பின்பு கனிவு கொடுக்கும் கலை பரதம்! மாலைமுழுதும் ஈட்டி எறிவாய்.. நீ மாவீரம் கொண்டவள்தான் பாப்பா!
வீதியில் தலை நிமிர்ந்து நடப்பாய்! வீணர்களின் பார்வைகளை தூசாக மதிப்பாய்! ஆணுக்கு நிகராக இருப்பாய்.! நீ ஆதிசக்தி வடிவமடிப் பாப்பா!

வே.கல்யாண்குமார்.



## வாழை மரம்



இலை தருவேன் இலை
தருவேன்
உட்கார்ந்து
ருசித்து சாப்பிட
தண்டெல்லாம் தான் தருவேன்
சமையல் செய்து மருந்தாய்
சாப்பிட
கனி தருவேன் கனி தருவேன்
இனிப்பாகச் சுவைத்துச்
சாப்பிட
நார் தருவேன் நார் தருவேன்
பூ கோர்த்திட, புடவையும்
நெய்திட
என்னை முழுமையாக
நான் தருவேன் மனிதன்
உனக்குத்தான்
என்னை நீரூற்றி வளர்த்துப்
பார்
எத்துனை நன்மை என்று
தெரிந்திட

## ஆயிரம் ஹைக்கூ நூலின் ஆங்கில மொழிபெயர்ப்பு



உலகத் தமிழ்ச் சங்கம் மதுரை இயக்குநர் முனைவர் இ.சா.பர்வீன் சுல்தானா அவர்களிடம் " LET THOUSAND. FLOWERS BLOOM " நூலை தமிழ்ச்செம்மல் கவிஞர் இரா .இரவி வழங்கினார். ஆயிரம் ஹைக்கூ நூலின் ஆங்கில மொழிபெயர்ப்பு பேராசிரியர் பெர்னாட்ஷா

## போளூர் பெண்கள் மேல்நிலைப் பள்ளி ஆசிரியர் பணி ஓய்வு



போளூர் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி உதவி தலைமை ஆசிரியரும், பட்டதாரி ஆசிரியர் ஜி.ரவிச்சந்திரன் மற்றும் பட்டதாரி ஆசிரியை சாந்தி முருகன் பணி நிறைவு பாராட்டு விழா பள்ளி தலைமை ஆசிரியை குமுதா தலைமையில் நடைபெற்றது.அனைத்து வியாபாரிகள் சங்க தலைவர் சண்முகம், உதவி தலைமை ஆசிரியர் ஜெகன், ஆசிரியர் ஜெயமூர்த்தி பலரும் கலந்து கொண்டு வாழ்த்தினார்.

## போளூர் தரணி சர்க்கரை ஆலை சம்பளம் வழங்க கோரி மனு



போளூர் வட்டம் கரைப்பூண்டி கிராமத்தில் தரணி சர்க்கரை ஆலை இயங்கி வந்தது.தற்சமயம் மூடப்பட்டது. இதில் பணி புரியும் தொழிலாளர்கள் இரண்டு மாதங்களாக சம்பளம் வழங்க வில்லை.காத்திருப்பு போராட்டம் நடத்தி பயான் இல்லை.போளூர் வட்டாட்சியர் பாலாஜியிடம் உடனடியாக சம்பளம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ள மனுவினை வழங்கினார்கள்

## சிறப்பு அலங்காரத்தில் கெங்கையம்மன்

**ஆந்திரா ஏப். 29:** திருப்பதி( தாத்தைய்ய குண்டா) பகுதியில் எழுந்தருளியுள்ள கெங்கையம்மன் திருக்கோயிலில் சித்திரை மாதம் கெங்கையம்மன் திருவிழாவை முன்னிட்டு சிறப்பு அலங்காரத்தில் வண்ணமலர் மாலைகளால், மஞ்சள் தாலிக்கயிறுகளால் அலங்காரங்கத்துடன் அருள் பாலிக்கும் காட்சி.

தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை



## சித்ரா பவுர்ணமி: திருவண்ணாமலைக்கு சிறப்புப் பேருந்துகள் இயக்கம்

**சென்னை, ஏப்.29:** தமிழ் மாதங்களில் வரும் பவுர்ணமி நாளில் திருவண்ணாமலையில் பல ஆயிரக்கணக்கான பக்தர்கள் கிரிவலம் செல்கின்றனர். அவ்வாறு அங்கு செல்லும் பக்தர்களின் வசதிக்காக தமிழக அரசு போக்குவரத்து கழகம் சார்பில் சிறப்பு பஸ்கள் இயக்கப்பட்டு வருகின்றன.

இந்தசிறப்பு பஸ்கள் சென்னை, வேலூர், திருத்தணி, காஞ்சிபுரம், சேலம், தர்மபுரி, கிருஷ்ணகிரி, சிதம்பரம், விழுப்புரம், ஓசூர் மற்றும் பெங்களூருவில் இருந்து திருவண்ணாமலைக்கு இயக்கப்படுகின்றன. சித்ரா பவுர்ணமி வரும் 1-ம் தேதி வருகிறது.

இந்நிலையில், சித்ரா பவுர்ணமியை முன்னிட்டு



திருவண்ணாமலைக்கு சிறப்புப் பேருந்துகள் இயக்கப்படும் என போக்குவரத்துக் கழகம் அறிவித்துள்ளது.

வரும் 30-ம் தேதி இரவு 9 மணி முதல் மே 1-ம் தேதி இரவு 11.07 மணி வரை திருவண்ணாமலைக்கு பேருந்துகள் இயக்கம். கிளாம்பாக்கத்தில் இருந்து 30-ம் தேதி 548 பேருந்துகளும், மே 1-ம் தேதி 565 பேருந்துகளும் இயக்கம். மாதவரத்தில் இருந்து 30-ம் தேதி 186 பேருந்துகளும், மே 1-ம் தேதி 174 சிறப்புப் பேருந்துகளும் இயக்கப்படும் என தெரிவித்துள்ளது.

## பட்டாசு ஆலைகளில் குழந்தைகளை வேலைக்கு அமர்த்தினால் கடும் நடவடிக்கை தொழிற்சாலை பாதுகாப்பு துறை எச்சரிக்கை

**மதுரை,ஏப்.29:** தொழிற்சாலை பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துறையின் மதுரை மண்டல அலுவலகத்தின் நிர்வாக எல்லைக்குள் மதுரை, விருதுநகர், சிவகங்கை, ராமநாதபுரம், தூத்துக்குடி, தென்காசி, நெல்லை மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் உள்ள தொழிற்சாலைகள் உள்ளன. இதற்கிடையே, தற்போது கோடை விடுமுறை என்பதால் பள்ளி குழந்தைகள் தொழிற்சாலை பணிகளில் ஈடுபடுத்தப்படும் அபாயம் இருப்பதாக கருதப்படுகிறது. இதுகுறித்து சம்பந்தப்பட்ட துறை சார்பாக பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இதுகுறித்து மதுரை மண்டல தொழிற்சாலை பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துறை கூடுதல் இயக்குனர் சித்தார்த்தன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்திருப்பதாவது:-

மதுரை மண்டல தொழிற்சாலை பாதுகாப்பு துறையின் எல்லைக்குள் உள்ள தொழிற்சாலைகள் மற்றும் உற்பத்தி நிறுவனங்களில் 14 வயது பூர்த்தியடையாத



குழந்தைகளை வேலைக்கு வைக்க கூடாது. அத்துடன் தொழிற்சாலைகளில் வேலை செய்ய அனுமதிக்கவும் கூடாது. 18 வயதுக்கு குறைவான வளரிளம் குழந்தைகளை பட்டாசு, தீப்பெட்டி உள்ளிட்ட அபாயம் நிறைந்த உற்பத்தி தொழிற்சாலைகளில் வேலை செய்ய அனுமதிக்க கூடாது.


அவ்வாறு ஈடுபடுத்துவது, குழந்தை மற்றும் வளரிளம் பருவ தொழிலாளர் (தடை மற்றும் முறைபடுத்துதல் சட்டம்) 1986 (திருத்திய சட்டம்-2016)-ன் படி தடை செய்யப்பட்டுள்ளது. தற்போது, பள்ளிகளுக்கு கோடை விடுமுறை விடப்பட்டுள்ளதால், பள்ளிக்குழந்தைகளை, வளரிளம் பருவத்தினரை பட்டாசு மற்றும் தீப்பெட்டி தொழிற்சாலைகளில் பணியில் ஈடுபடுத்த வேண்டாம். மேலும், துறை அதிகாரிகள் ஆய்வின்போது, குழந்தைகள் மற்றும் வளரிளம் பருவத்தினர் பணியில் இருப்பது தெரியவந்தால், தொழிற்சாலை உரிமையாளர் மற்றும் மேலாளர் மீது பல்வேறு பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்யப்படும். அத்துடன் கோர்ட்டு நடவடிக்கை மூலம் 2 வருட சிறை தண்டனை மற்றும் ரூ.50 ஆயிரம் அபராதம் விதிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.



**உதகை, ஏப்.29:** உதகை அருகே சோலாடா கிராமத்தில் தாயுப் புலியை பிரிந்த 2 புலிக்குட்டிகளில் ஒன்று நேற்று பிடிபட்ட நிலையில், மற்றொன்று பத்திரமாக பிடிக்கப்பட்டது. இரு குட்டிகளையும் முதுமலை முகாமில் வைத்து கால்நடை மருத்துவர்கள் கண்காணித்து வருகின்றனர். மேலும், தாய்ப்புலி வேறு பகுதிகளில் சுற்றி வருகிறதா? அல்லது இறந்துவிட்டதா? என்றும் வனத்துறையினர் தீவிரமாக வனப்பகுதியில் தேடி வருகின்றனர்



ஆறாம் நாள் காலை திருப்புல்லாணி



யானை வாகனம் மாலை மாற்றுதல்

## ஸ்ரீரங்கம் அரங்கநாத சுவாமி கோவிலில் உண்டியல் காணிக்கை மூலம் ரூ. 69 லட்சம் வருவாய்



**திருச்சி, ஏப்.29:** திருச்சி மாவட்டம் ஸ்ரீரங்கத்தில் அரங்கநாத சுவாமி கோவில் உள்ளது. 108 வைணவ திருத்தலங்களுள் முதல் திருத்தலமாக இந்த கோவில் திகழ்கிறது.

இந்நிலையில், அரங்கநாத சுவாமி கோவிலுக்கு வரும் பக்தர்கள் சாமி தரிசனம் செய்துவிட்டு கோவில் உண்டியலில் பணம், தங்கம், வெள்ளி பொருகளை காணிக்கையாக செலுத்துகின்றனர். இந்த உண்டியல்கள் மாதம் தோறும் திறக்கப்பட்டு காணிக்கைகள் எண்ணப்படுகின்றன.

இந்நிலையில், அரங்கநாத சுவாமி கோவிலில் இன்று (28.04.2026) மாதாந்திர உண்டியல்கள் திறக்கப்பட்டு பக்தர்களின் காணிக்கைகள் கணக்கிடப்பட்டத்தில் ரூபாய் 69,93,601, தங்கம் 78.900 கிராம், வெள்ளி 840.200 கிராம், மற்றும் 283 வெளிநாட்டு ரூபாய் தாள்கள் எண்ணிக்கைகள் உண்டியல் காணிக்கை வருவாய் ஆக கிடைத்துள்ளதாக கோவில் நிர்வாகம் தெரிவித்துள்ளது.




## கோடை விழாவை முன்னிட்டு மே 1 முதல் உதகையில் போக்குவரத்து மாற்றம் செய்தது காவல்துறை -

**நீலகிரி, ஏப்.29:** கோடை விழாவை முன்னிட்டு மே 1 முதல் உதகையில் போக்குவரத்து மாற்றம் செய்தது காவல்துறை . மே 1 முதல் அத்தியாவசிய பொருட்கள் ஏற்றிவரும் வாகனங்கள் தவிர அனைத்து கனரக வாகனங்களும் காலை 8 முதல் இரவு 9 மணிவரை நகருக்குள் வர அனுமதி இல்லை. உதகையிலிருந்து மேட்டுப்பாளையம் செல்லும் அனைத்து சுற்றுலா வாகனங்களும் கோத்தகிரி வழியாக மட்டுமே செல்லவேண்டும்

நீலகிரி மாவட்டத்தில் வரவிருக்கும் கோடை விழாவினை முன்னிட்டு சுற்றுலா பயணிகள் மற்றும் பொதுமக்களின் நலன் கருதியும். போக்குவரத்து நெரிசலை தவிர்க்கவும் வரும்



01.05.2026 முதல் போக்குவரத்தில் கீழ்க்கண்ட மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

இதற்கு பொதுமக்கள் மற்றும் சுற்றுலா பயணிகள் காவல் துறைக்கு முழு ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேட்டுப்பாளையத்திலிருந்து உதகைக்கு வரும் சுற்றுலா கார்கள் அனைத்தும் காட்டேரி சந்திப்பிலிருந்து இடதுபுறமாக திரும்பி சேலாஸ், கெந்தளா, காட்டேரிடேம்.கேத்தி பாலாடா. கொல்லிமலை, லவ்டேல் வந்து மஞ்சனக்கொரை, பர்ன்ஹில் வழியாக உதகை நகருக்குள் வந்தடையலாம்.

மேட்டுப்பாளையத்திலிருந்து கூடலூர் மற்றும் தொப்பக்காடு செல்லும் சுற்றுலா பேருந்துகள், வேன், கார்கள் மற்றும் மேக்சிகேப் வாகனங்கள் அனைத்தும் லவ்டேல் ஜங்ஷனிலிருந்து இடதுபுறமாக திரும்பி லவ்டேல் ரயில்வே ஸ்டேசன், லவ்டேல் காவல் நிலைய சந்திப்பு. காந்திநகர், மஞ்சனக்கொரை, பர்ன்ஹில், காந்தள் முக்கோணம். பிங்கர்போஸ்ட் வழியாக கூடலூர் அனுப்பிவைக்கப்படும்.

குன்னூரிலிருந்து உதகைக்கு வரும் அனைத்து சுற்றுலா பேருந்து மற்றும் மேக்சிகேப் வாகனங்களும் ஆவின் வாகன நிறுத்துமிடத்தில் நிறுத்தப்படும். சுற்றுலா பயணிகள் அங்கிருந்து சுற்றுலா தலங்களுக்கு செல்ல அரசு சுற்றுப் பேருந்தை பயன் படுத்திக்கொள்ளலாம்.

கோத்தகிரியிலிருந்து உதகைக்கு வரும் அனைத்து சுற்றுலா பேருந்து மற்றும் மேக்சிகேப் வாகனங்களும் அரசு கலைக்கல்லூரி தற்காலிக வாகன நிறுத்துமிடத்தில் நிறுத்தப்படும். சுற்றுலா பயணிகள் அங்கிருந்து சுற்றுலா தலங்களுக்கு செல்ல அரசு சுற்றுபேருந்தை பயன் படுத்திக் கொள்ளலாம்.

உதகையிலிருந்து மேட்டுப் பாளையம் செல்லும் அனைத்து சுற்றுலா வாகனங்களும் கோத்தகிரி வழியாக மட்டுமே செல்லவேண்டும் விடுப்பட்ட ஒரு சில வாகனங்கள் வெலிங்டன் பிளாக்பிரிட்ஜ். கட்டபெட்டு மற்றும் கோத்தகிரி வழியாக மேட்டுப்பாளையத்திற்கு திருப்பிவிடப்படும். எக்காரணத்தைக் கொண்டும் சுற்றுலா வாகனங்கள் குன்னூர் பர்லியார் வழியாக மேட்டுப்பாளையம் செல்ல அனுமதிக்கப்படமாட்டாது.

கூடலூரிலிருந்து உதகைக்கு வரும் அனைத்து சுற்றுலா பேருந்துகள் மற்றும் மேக்சிகேப் வாகனங்களும் எச்.பி.எப். கோல்ப் சாலைப் பகுதியில் நிறுத்தப்படும். சுற்றுலா பயணிகள் அங்கிருந்து சுற்றுலா தலங்களுக்கு செல்ல அரசு சுற்றுப் பேருந்தை பயன் படுத்திக்கொள்ளலாம்.

கூடலூரிலிருந்து தலைக்குந்தா வந்தடையும் இலகுரக சுற்றுலா வாகனங்கள் தலைகுந்தா மட்டம் கோழிப்பண்ணை புதுமந்து வழியாக ஸ்டிபன்சர்ச் வந்தடையும்.

01.05.2026 முதல் அத்தியாவசிய பொருட்கள் (பால், பெட்ரோலியம், சமையல் எரிவாயு) ஏற்றிவரும் வாகனங்கள் தவிர அனைத்து கனரக வாகனங்களும் காலை 0800 மணி முதல் இரவு 900 மணிவரை உதகை நகருக்குள் வர அனுமதி இல்லை.

# சுற்றுலா: இந்திய கடற்கரைப் பாதைகளின் பயணம்!

கடலும் நிலமும் சந்திக்கும் எல்லையில் ஓடும் சாலைகள் நம் மனதை இயற்கையுடன் இணைக்கும் ஒரு விசேஷ அனுபவத்தை அளிக்கின்றன. அலைகள் அடிக்கும் ஒலி, உப்பு மணம் கலந்த காற்று, தூரத்தில் மிதக்கும் படகுகள், இவை அனைத்தும் சேர்ந்து ஒரு கவிதை போன்ற பயணத்தை உருவாக்குகின்றன. கடற்கரைச் சாலைகள் என்பது வெறும் போக்குவரத்து வழிகள் அல்ல; அவை காலத்தையும் கலாச்சாரத்தையும் கடந்து செல்லும் நினைவுப் பாதைகள். ஒவ்வொரு மடிப்பிலும் புதிய காட்சி, ஒவ்வொரு நிறுத்தத்திலும் புதிய அனுபவம் காத்திருக்கிறது. அது கடலும் சாலையும் இணையும் மந்திர அனுபவம்

இயற்கையின் மாறுபட்ட முகங்களையும், மனித வாழ்வின் எளிமையையும் ஒரே நேரத்தில் உணர்த்தும் இந்தப் பாதைகள், பயணிகளுக்கு ஒரு ஆழமான அமைதியையும் புதுமையான உற்சாகத்தையும் அளிக்கின்றன.

அப்படிப்பட்ட 6 கடற்கரை சாலைகள் பற்றி இந்தப் பதிவில் பார்ப்போம்.

இந்தியாவின் கடற்கரைப் பாதைகள் இயற்கையின் அழகையும் மனித வாழ்வின் பல்வகை பரிமாணங்களையும் ஒரே நேரத்தில் காட்டும் அரிய அனுபவமாகும். சுமார் 7,500 கிலோமீட்டர் நீளமான இந்தியக் கடற்கரை, ஒவ்வொரு மைலிலும் புதுமையான காட்சிகளை விரித்து வைக்கிறது. கடற்கரைச் சாலைப் பயணம்என்பதுவெறும்இடமாற்றம் அல்ல; அது மனதை மெதுவாக இயற்கையோடு இணைக்கும் ஒரு பயணம்.



மும்பை கோவா: கொங்கண் சாலையின் கவர்ச்சி

மகாராஷ்டிராவின் MUMBAI நகரிலிருந்து GOA வரை செல்லும் கொங்கண் பாதை, மலைகள், ஆறுகள், கடல்—ALL-IN-ONE அனுபவத்தை தருகிறது. வழியெங்கும் பழமையான கோட்டைகள், மீனவ கிராமங்கள், கடற்கரை உணவுகள் பயணத்தை இனிமையாக்குகின்றன.

சென்னை புதுச்சேரி: அமைதியான கடற்கரை ஓட்டம்

CHENNAI முதல் PUDUCHERRY வரை உள்ள கிழக்கு கடற்கரைச் சாலை (ECR), அமைதியான ஓட்டப்பயணத்திற்கு சிறந்த தேர்வாகும். கடல் அருகே நீளும் சாலை, மனதை தெளிவாக்கும் அமைதியை அளிக்கிறது.

கொச்சி திருவனந்தபுரம்: பசுமை சூழ்ந்த பாதை

KOCHI முதல் THIRUVANANTHAPURAM வரை பயணம் செய்தால், தேங்காய் தோப்புகள், பின்நீர்பாதைகள், மெதுவான கிராம வாழ்க்கை ஆகியவை கண்முன் விரிகின்றன.

மரவந்தே: ஆறும் கடலும் சந்திக்கும் இடம்

கர்நாடகாவில் உள்ள MARAVANTHE BEACH அருகிலான சாலை, ஒரு பக்கம் கடலும் மறுபக்கம் ஆறும் ஓடும் அபூர்வ காட்சியை வழங்குகிறது. இது குறுகியதானாலும் மறக்க முடியாத அனுபவமாகும்.

பூரி கொணார்க்: ஆன்மீகமும் இயற்கையும்

PURI முதல் KONARK SUN TEMPLE வரை செல்லும் பாதை, கடற்கரை மற்றும் காடுகள் இணையும் அழகையும், ஆன்மீக உணர்வையும் தருகிறது.

ராமேஸ்வரம் தனுஷ்கோடி: கடலின் எல்லை: தமிழ்நாட்டின் RAMESWARAM முதல் DHANUSHKODI வரை செல்லும் சாலை, இரு பக்கமும் கடல் சூழ்ந்த அதிசய அனுபவத்தை தருகிறது. இது இயற்கையும் வரலாறும் இணையும் இடமாகும்.

இந்தப் பயணங்களுக்கு சிறந்த காலம் அக்டோபர் முதல் மார்ச் வரை ஆகும். மழைக்காலத்தைத் தவிர்ப்பது பாதுகாப்பானது. அவசரப்படாமல், இடைவெளிகளில் நின்று, உள்ளூர் உணவுகளை சுவைத்து, சிறிய சாலைகளையும் ஆராய்ந்தால் தான் இந்தப் பயணத்தின் உண்மையான சுவை கிடைக்கும். கடற்கரைப் பாதைகள் நமக்கு காட்டுவது கடலை மட்டும் அல்ல; அதனைச் சுற்றியுள்ள வாழ்க்கையின் அழகையும் ஆகும்.

பயணத்தின் உண்மையான அர்த்தம்: இந்தியாவின் கடற்கரைச் சாலைப்பயணங்கள் நமக்கு காட்டுவது அழகான காட்சிகள் மட்டுமல்ல; அவை வாழ்க்கையின் மெதுவான ஓட்டத்தையும் உணர்த்துகின்றன. MUMBAI முதல் GOA வரை விரியும் உற்சாகப் பாதையோ, RAMESWARAM முதல் DHANUSHKODI வரை நீளும் அமைதியான எல்லையோ—ஒவ்வொரு பயணமும் தனித்துவமான அனுபவமாக மாறுகிறது.

அந்த அமைதியான நினைவுகளே, இந்த அனுபவத்தின் உண்மையான செல்வமாகும்.

## வேலைவாய்ப்பு கார்னர்

### வேலை வாய்ப்புக்கான தொழிலாளர் மேலாண்மை பட்ட படிப்புகளில் சேர விண்ணப்பிக்கலாம்

வேலை வாய்ப்புக்கான தொழிலாளர் மேலாண்மையில் பட்ட, பட்ட மேற்படிப்பு மற்றும் முதுநிலை பட்டய படிப்புகளில் சேர விண்ணப்பிக்கலாம் என்று தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலைய இயக்குநர் அறிவித்துள்ளார். இதுதொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையத்தில் பி.ஏ. (தொழிலாளர் மேலாண்மை) பட்ட படிப்பு, எம்.ஏ. (தொழிலாளர் மேலாண்மை) பட்ட மேற்படிப்பு மற்றும் பிஜி.டி.எல்.ஏ (தொழிலாளர் நிர்வாகத்தில் முதுநிலை மாலை நேர பட்டயப்படிப்பு), தொழிலாளர் சட்டங்களும் நிர்வாகவியல் சட்டமும் (வார இறுதி) பட்டய படிப்புகளும் நடத்தப்பட்டு வருகின்றன. பி.ஏ. (தொழிலாளர் மேலாண்மை), எம்.ஏ. (தொழிலாளர் மேலாண்மை) படிப்புகள் சென்னை பல்கலைக் கழகத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. பிஜி.டி.எல்.ஏ. மற்றும் டி.எல்.எல் (ஏ.எல்.) படிப்புகள் தமிழக அரசின் அங்கீகாரத்துடன் நடைபெற்று வருகின்றது.

பி.ஏ. (தொழிலாளர் மேலாண்மை), எம்.ஏ (தொழிலாளர் மேலாண்மை), பிஜி.டி.எல்.ஏ. மற்றும் டி.எல்.எல் (ஏ.எல்.) ஆகிய பட்ட / பட்டமேற்படிப்பு / பட்டய படிப்புகளுக்கு 2026 2027-ம் ஆண்டிற்கான மாணவர் சேர்க்கைக்கு விண்ணப்பங்கள் வழங்கப்பட்டு வருகிறது. +2 முடித்த விருப்பமுள்ள மாணவர்கள் பி.ஏ. (தொழிலாளர் மேலாண்மை) , இளநிலை பட்டம் பெற்ற மாணவர்கள் எம்.ஏ. (தொழிலாளர் மேலாண்மை) முதுநிலை பட்ட மற்றும் பட்டய படிப்புகளுக்கும் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பிப்பவர்கள் மதிப்பெண் அடிப்படையில் அரசு விதிகளின்படி தேர்ந்தெடுக்கப்படுவார்கள். தங்கும் விடுதி வசதி இளநிலை மற்றும் முதுநிலை பயிலும் ஆண் மாணவர்களுக்கு மட்டும். விண்ணப்பங்கள் 20.04.2026 அன்று முதல் வழங்கப்பட்டு வருகிறது. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 18.05.2026 விண்ணப்ப கட்டணம் – ரூ.200/–

For SC/ST – ரூ.100/– (சாதிச் சான்றிதழ் நகல் தாக்கல் செய்ய வேண்டும்) விண்ணப்பங்களை தபாலில் பெற, விண்ணப்ப கட்டணத்திற்கான ரூ.200/– (SC/ST ரூ. 100/–) மற்றும் தபால் கட்டணம் ரூ.50/–க்கான வங்கி வரைவோலையினை “The Director, Tamilnadu Institute of Labour Studies, Chennai” என்ற பெயரில் எடுத்து பதிவுத்தபால் / விரைவு அஞ்சல் / கொரியர் மூலம் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

Email: tilschennai@tn.gov.in

## அரசு பள்ளிகளில் மாணவர் சேர்க்கை 1 லட்சத்தை கடந்தது

**சென்னை, ஏப். 29:**

தமிழக பள்ளிக்கல்வித் துறையின்கீழ் 37,554 அரசுப்பள்ளிகள் இயங்கி வருகின்றன. இவற்றில் சுமார் 52 லட்சத்துக்கும் மேற்பட்ட மாணவ-மாணவிகள் படிக்கின்றனர். தற்போது மாணவர்கள் நலன் கருதி கற்றல், கற்பித்தல் சார்ந்து எண்ணும்-எழுத்தும், காலை உணவு, திறன்மிகு வகுப்பறைகள் உள்பட பல்வேறு நலத்திட்டங்களை பள்ளிக்கல்வித்துறை முன்னெடுத்து இருக்கிறது.

இதுமட்டுமல்லாமல், அரசு பள்ளிகள் தனியார் பள்ளிகளுக்கு நிகராக இருக்கும் வகையில் பல்வேறு உள்கட்டமைப்பு வசதிகளையும் அரசு மேற்கொண்டு வருகிறது. இதனை முன்னிலைப்படுத்தி அரசு பள்ளிகளில் மாணவர் சேர்க்கையை அதிகரிக்க ஒவ்வொரு ஆண்டும் அறிவுறுத்தப்படுகிறது.

தற்போது பள்ளிகளில் 1-ம் வகுப்பு முதல் 8-ம் வகுப்பு வரை மாணவ-மாணவிகளை சேர்ப்பதற்கான பணிகள் தொடங்கி நடைபெற்று வருகின்றன. இந்த நிலையில், தமிழ்நாட்டில் அரசு, அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளில் மாணவர்சேர்க்கைஎண்ணிக்கை ஒரு லட்சத்தை கடந்துள்ளதாக தமிழக அரசு தெரிவித்துள்ளது. தொடக்கப்பள்ளிகள் மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் 2026-27ஆம் கல்வி ஆண்டுக்கு 1ஆம் வகுப்புகளில் 97,737 பேர் சேர்ந்துள்ளனர்.

2 முதல் 8ஆம் வகுப்பு வரை 8,178 மாணவர்கள், மழலையர் வகுப்புகளில் 6,796 மாணவர்கள் என மொத்தம் இதுவரை 1,12,711 பேர் சேர்ந்துள்ளதாக தமிழக அரசு தெரிவித்துள்ளது. கடந்த ஆண்டு 4 லட்சத்து 30 ஆயிரம் மாணவர்கள் புதிதாக சேர்க்கப்பட்டனர். இந்த ஆண்டு 5 லட்சம் மாணவர்களை சேர்ப்பதற்கான இலக்கு நிர்ணயிக்கப்பட்டு பணிகள் தொடங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## அரசுப் பேருந்துகள் இயங்காததால் ஏலகிரியில் சுற்றுலாப் பயணிகள் அவதி

**ஏலகிரி, ஏப்.29:**

சுற்றுலா தலமான ஏலகிரியில் அரசுப் பேருந்துக்கள் இயங்காததால் பயணிகள் அவதிக்குள்ளாகினர்.

ஏழைகளின் ஊட்டி என்று அழைக்கப்படும் ஏலகிரி மலையில் உள்ள பொதுமக்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் வசதிக்காக திருப்பத்தூரில் இருந்து ஏலகிரி மலையில் உள்ள நிலாவூர், தாயலூர், மங்களம் ஆகிய ஊர்களுக்கு தினமும் 2 அரசு பேருந்துகள் இயக்கப்படுவது வழக்கம்.

பொதுமக்கள் மற்றும் சுற்றுலா பயணிகள் இப்பேருந்துகள் மூலம் சென்று வருகின்றனர்.

இந்த நிலையில் விடுமுறை நாளான ஞாயிற்றுக்கிழமை ஆயிரக்கணக்கான சுற்றுலா பயணிகள் ஏலகிரி மலையில் குவிந்ததால் பயணிகள் கூட்டம் அதிகரித்தது.




மேலும், நிலாவூர் தாயலூர் மங்கலம் வரை சென்று வரும் அரசு பேருந்துகள் இயங்காததால், சுற்றுலா பயணிகள் மற்றும் மலை கிராம மக்கள் கடும் அவதிக்குள்ளாக்கினர்..

பேருந்து காலதாமதமாக வந்ததால் சுற்றுலா பயணிகள், பொதுமக்களும் கூட்ட நெரிசலில் சிக்கி பேருந்தில் பயணிக்க முடியாமல் சிக்கித் தவித்தனர்.

போக்குவரத்து துறை அதிகாரிகள் ஏலகிரி மலைக்கு அரசு பேருந்துகளை முறையாக இயக்கவும், விடுமுறை நாள்களில் வாணியம்பாடி, திருப்பத்தூர், நாட்டறம்பள்ளி பகுதியில் இருந்து கூடுதலாக அரசுப் பேருந்துகளை இயக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என சுற்றுலா பயணிகள் மற்றும் மலை கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## வைகை அணையிலிருந்து வெளியேற்றப்படும் தண்ணீரின் அளவு! 300 கன அடியாகக் குறைப்பு!

**மதுரை, ஏப்.29:**

மதுரை வைரையாற்றில் அழகர் எழுந்தருளும் விழாவுக்காக வெள்ளிக்கிழமை வைகை அணையிலிருந்து விநாடிக்கு 500 கன அடி தண்ணீரைத் திறந்து வைத்தனர். இந்த நிலையில், சனிக்கிழமை காலை 8 மணியளவில் விநாடிக்கு 300 கன அடியாகக் குறைத்துள்ளனர். அதன்பின், அணையிலிருந்து வெளியேறும் தண்ணீரின் அளவை படிப்படியாக குறைத்து வரும் 29-ஆம் தேதி தண்ணீர் திறப்பு நிறுத்தப்படும் என பொதுப்பணித்துறையினர் தெரிவித்தனர்.

சனிக்கிழமை அணைகளின் நீர்மட்டம்: முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டம் 110.20 அடியாக உள்ளது. நீர்வரத்தும், வெளியேற்றமும் 152 கன அடியாகவும், கொள்ளளவு 943 மில்லியன் கன அடியாகவும் உள்ளது. வைகை அணையின் நீர்மட்டம் 32.87 அடியாக உள்ளது. நீர்வரத்து ஏதும் இல்லை. அணை நீர் வெளியேற்றம் 372 கன அடியாகவும், கொள்ளளவு 495 மில்லியன் கன அடியாகவும் உள்ளது.

## சென்னை ஏரிகளில் 67 சதவீத குடிநீர் இருப்பு

**சென்னை, ஏப்.29:**

சென்னைக்கு குடிநீர் ஆதாரமாக உள்ள 5 முக்கிய ஏரிகளில் மொத்தம் 67.36 சதவீதம் தண்ணீர் இருப்பு உள்ளது.

சென்னைக்கு குடிநீர் வழங்கும் முக்கிய நீர் ஆதாரங்களான பூண்டி, சோழவரம், புழல், செம்பரம்பாக்கம், கண்ணன்கோட்டை ஆகிய 5 ஏரிகளின் மொத்த கொள்ளளவு 11,757 மில்லியன் கன அடியாகும்.

ஏரிகள் நீர் நிலவரம்: இதில், திங்கள்கிழமை நிலவரப்படி 3,300 மில்லியன் கன அடி கொள்ளளவு கொண்ட புழல் ஏரியில் 2,030 மில்லியன் கன அடி (61.52 சதவீதம்) நீர் இருப்பு உள்ளது. 3,645 மில்லியன் கன அடி கொள்ளளவு கொண்ட செம்பரம்பாக்கம் ஏரியில் 2,952 மில்லியன் கன அடி (80.99 சதவீதம்) நீர் இருப்பு உள்ளது. பூண்டி ஏரியின் முழு கொள்ளளவு 3,231 மில்லியன் கன அடியாகும். ஏரியில் இருந்து குடிநீர் தேவைக்காக விநாடிக்கு 317 கன அடி நீர் வெளியேறும் நிலையில், ஏரியில் 2,038 மில்லியன் (63.08 சதவீதம்) கன அடி நீர் உள்ளது.

அதேபோல், 1,081 மில்லியன் கன அடி கொள்ளளவு கொண்ட சோழவரம் ஏரியில் 491 மில்லியன் கன அடியும், 500 மில்லியன் கன அடி கொள்ளளவு உள்ள கண்ணன்கோட்டை ஏரியில் 408 மில்லியன் கன அடியும் நீர் இருப்பு உள்ளது.

மொத்தம் 5 ஏரிகளில் 7,919 மில்லியன் கன அடி நீர் இருப்பு உள்ளது. இது மொத்த கொள்ளளவில் 67.36 சதவீதம் ஆகும்.

போதுமான குடிநீர்: சென்னை நகரில் ஒரு மாதத்திற்கு 1 டி.எம்.சி. தண்ணீர் தேவைப்படுகிறது. இச்சூழல் தற்போது 7 டி.எம்.சி. குடிநீர் இருப்பு உள்ளது.

மேலும், சென்னையில் செயல்பட்டு வரும் 3 கடல்நீரை குடிநீராக்கும் சுத்திகரிப்பு நிலையங்களின் வாயிலாக தினந்தோறும் 350 மில்லியன் லிட்டர் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் சென்னை மாநகராட்சி பகுதிகளுக்கு விநியோகம் செய்யப்படுகிறது.

## கடும் வெய்யில் எதிரொலி: தமிழகத்தில் தினசரி மின்நுகர்வு 20,000 மெகாவாட்-ஆக உயர்வு

**சென்னை, ஏப்.29:**

தமிழகத்தில் கோடை வெய்யில் காரணமாக தினசரி மின்நுகர்வு கடந்த ஏப்.22-ஆம் தேதி 20,060 மெகாவாட் வரை உயர்ந்து புதிய உச்சத்தை எட்டியுள்ளது. மேலும், வரும் நாள்களில் தினசரி மின்தேவை 22,000 மெகாவாட் வரை உயரக்கூடும் என மின்வாரிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து மின்வாரிய அதிகாரிகள் கூறியதாவது:

தமிழகத்தின் தினசரி மின்சாரத் தேவை சுமார் 16,000 மெகாவாட். கோடைகாலங்களில் மின்விசிறி, குளிர்சாதன, குளிர் பதனப் பெட்டி போன்ற மின்சாதனங்களின் பயன்பாடு அதிகரிப்பதால், அந்தக் காலகட்டத்தில் தினசரி மின்தேவை 20,000 மெகாவாட் வரை உயர்வது வழக்கம். அந்த வகையில், கடந்த ஆண்டு மே 2-ஆம் தேதி உச்சபட்சமாக 20,830 மெகாவாட் மின்நுகர்வு பதிவானது.

நிகழாண்டு, கோடைகாலம் தொடங்குவதற்கு முன்பே வெயிலின் தாக்கம் அதிகரித்துள்ளது. குறிப்பாக இரவு நேரங்களில் வெப்பம் அதிகமாக இருப்பதால், வீடுகளில் குளிர்சாதனப் பெட்டிகளின் பயன்பாடு வழக்கத்தைவிட அதிகரித்துள்ளது. இதற்கிடையே, எரிவாயு உருளை தட்டுப்பாடு காரணமாக மின் அடுப்புகளின் பயன்பாடும் தற்போது அதிகரித்துள்ளது. அந்த வகையில், நிகழாண்டில் இதுவரை அதிகபட்சமாக கடந்த ஏப்.22-ஆம் தேதி 20,060 மெகாவாட் மின்நுகர்வு பதிவானது. இதையடுத்து, வரும் மே 4 ஆம் தேதி முதல் ‘கத்திரி வெயில்’ என அழைக்கப்படும் அக்னி நட்சத்திர காலம் தொடங்கவுள்ளது. இதன் காரணமாக வரும் நாள்களில் தினசரி மின்நுகர்வு 21,000 மெகாவாட் வரை உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## கிழக்குக் கடற்கரைச் சாலை விரிவாக்க பணிகள் இரு மாதங்களில் நிறைவடையும்

**சென்னை, ஏப்.29:**

சென்னை திருவான்மியூர் முதல் அக்கரை வரையிலான கிழக்குக் கடற்கரைச் சாலை விரிவாக்கப் பணிகள் இரு மாதங்களில் முடிவடையும் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

சென்னை திருவான்மியூர் முதல் நீலாங்கரை அருகில் உள்ள அக்கரை வரை 10.5 கிலோ மீட்டர் நீளமுள்ள கிழக்குக் கடற்கரைச் சாலையை 6 வழிச் சாலையை விரிவாக்கம் செய்யும் பணிகள் தொடங்கி நடைபெற்று வருகின்றன. இந்தப் பணிகள் நீண்ட காலமாக தாமதமாகி வருகிறது. தற்போது பணிகள் இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளதாக அதிகாரிகள் தரப்பில் கூறப்படுகிறது.

எனினும், முழுமை பெறாத சில பகுதிகள் போக்குவரத்து நெரிசலை ஏற்படுத்துவதாக வாகன ஓட்டிகள் தெரிவிக்கின்றனர். இது குறித்து பொதுமக்கள் கூறியதாவது:

கிழக்குச் கடற்கரைச் சாலையில் விரிவாக்கப்பட்ட இடங்களில் நெடுஞ்சாலைத்துறை சாலைகளை அமைத்துள்ளது. சில இடங்களில் 6-ஆவது வழித்தடத்தில் வாகனங்கள் நிறுத்தப்படுவதால், அந்தப் பகுதிகள் பயன்பாட்டுக்கு உகந்ததாக இல்லை. வாகனங்கள் நிறுத்தப்படுவதைத் தவிர்க்கும் வகையில், ஆறாவது வழித்தடத்தில் ஒரு பகுதியில் செங்கற்களைக் கொண்டு தடுப்பு அமைக்க நெடுஞ்சாலைத் துறை முயன்றது. ஆனால், இது சாலை விரிவாக்கத்தின் நோக்கத்தையே சிதைப்பதாகக் கூறி எதிர்ப்பு கிளம்பியது. இதையடுத்து அந்த செங்கற்கள் அகற்றப்பட்டன.


பெரும்பாலான சாலை அமைக்கும் பணிகள் நிறைவடைந்துவிட்டதாக அதிகாரிகள் கூறினாலும், முழுமையடையாத சில பகுதிகள் தொடர்ந்து போக்குவரத்து நெரிசலை ஏற்படுத்துகின்றன.

நீலாங்கரை, ஈஞ்சம்பாக்கம், வெட்டுவாங்கேணி ஆகிய பகுதிகளின் சில இடங்களில் வாகன ஓட்டிகள் சிரமத்துடன் பயணிக்க வேண்டியுள்ளது. சில இடங்களில் சாலை விரிவாக்கப் பணிகளுக்காக அகற்றப்பட்ட ஆக்கிரமிப்புகள் மீண்டும் முளைத்துவிட்டன என அவர்கள் தெரிவித்தனர்.

இது குறித்து அதிகாரிகள் கூறியதாவது:

கொட்டிவாக்கம் மற்றும் அக்கரைக்கு இடைப்பட்ட சில பகுதிகளில் நெடுஞ்சாலைத் துறை இன்னும் நிலங்களைக் கையகப்படுத்தவில்லை. இப்பகுதிகளில் இன்னும் 30 வீடுகள் கையகப்படுத்த வேண்டியுள்ளது. இதற்கான அறிவிப்புகளை வெளியிட்டுள்ளோம். உரிய விலையில் நிலங்களைப் பெறுவதற்காக நில உரிமையாளர்களிடம் பேச்சு நடத்தப்பட்டு வருகிறது. நிலங்கள் கையகப்படுத்தப்பட்டதும் அந்தப் பகுதியில் பணிகள் தொடங்கப்பட்டு இரு மாதங்களில் முடிக்கப்படும் எனத் தெரிவித்தனர்.

# விண்வெளியில் இருந்து கிராமங்களை 'மேப்பிங்' செய்த இஸ்ரோ







**புதுடெல்லி, ஏப்.29:**

விண்வெளியில் இருந்து இந்தியாவின் ஒவ்வொரு கிராமத்தையும் மிகத் துல்லியமாக வரைபடமாக்கும் முக்கிய திட்டத்தை இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (இஸ்ரோ) வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளது.

இது தொடர்பான அறிவிப்பை தேசிய ஊராட்சிகள் தினமான கடந்த வெள்ளிக்கிழமை இஸ்ரோ வெளியிட்டது. நாடு முழுவதற்குமான உயர்-தெளிவுத்திறன் கொண்ட நிலப் பயன்பாடு மற்றும் நிலப் பரப்பை 1:10000 என்ற விகிதத்தில் வரைபடம் செய்து முடித்துள்ளதாக இஸ்ரோ அறிவித்தது. அதாவது வரைபடத்தில் உள்ள 1 செ.மீ என்பது தரையில் வெறும் 100 மீட்டரைக் குறிக்கும். இது ஒரு நெல் வயலுக்கும் குளத்துக்கும் இடையிலான வித்தியாசத்தைத் துல்லியமாக வேறுபடுத்திக் காட்டும் அளவுக்குத் தெளிவானது. 2011ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, இந்தியாவில் 6,49,481 கிராமங்கள் இருந்தன. இந்த செயற்கைக்கோள் தரவை அரசு நிறுவனங்களுக்கு இஸ்ரோ வழங்கியுள்ளது. இது தொடர்பாக இஸ்ரோ எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில், "இந்தத் தரவுத்தொகுப்பு கிராமப் பஞ்சாயத்து மேம்பாட்டுத் திட்டங்களுக்குத் துணைபுரிவதுடன், பஞ்சாயத்து ராஜ் அமைச்சகத்தின் 'கிராம மஞ்சித்ரா' (கிராம வரைபடம்) இணையதளத்தில் உள்ள தகவல் பிரிவுகளில் ஒன்றாக ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது. இது கிராமப்புற அளவில் வலுவான, தரவு சார்ந்த நிர்வாகத்தை சாத்தியமாக்குகிறது" என்று தெரிவித்துள்ளது.

கிராம மஞ்சித்ரா இணையதளம், உள்ளாட்சி அமைப்புகள் தரவு சார்ந்த வளர்ச்சி முடிவுகளை எடுக்க உதவும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. கிராமங்களை வரைபடமாக்குவது, கிராமப் பஞ்சாயத்து மேம்பாட்டுத் திட்டங்களைச் சிறப்பாகத் தயாரிப்பதற்கு உதவும். இது தரவு அடிப்படையிலான முடிவெடுக்கும் முறையை சாத்தியமாக்குவதுடன், நில வளங்களையும் அவற்றின் பயன்பாட்டு முறைகளையும் கண்டறிய உதவும். ஒட்டுமொத்தமாக, இந்தியாவின் கிராமப்புறங்களில் அரசுத் திட்டங்களைச் செயல்படுத்துவதில் வெளிப்படைத் தன்மையையும் பொறுப்புடைமையையும் இது மேம்படுத்துகிறது. மேலும் அடிமட்ட அளவில் ஜனநாயகத்தை வலுப்படுத்தும்.

## க்ரைம் கார்னர்

### கன்னியாகுமரியில் பயங்கரம்: வயலில் தண்ணீர் பாய்ச்சுவதில் தகராறு - விவசாயி வெட்டிக்கொலை

**கன்னியாகுமரி, ஏப்.29:**

கன்னியாகுமரி மாவட்டம் ஆரல்வாய்மொழி அருகே நிலத்தில் தண்ணீர் பாய்ச்சுவது தொடர்பான தகராறில், விவசாயி ஒருவர் கொடூரமான முறையில் வெட்டிக்கொலை செய்யப்பட்ட சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஆரல்வாய்மொழி அருகேயுள்ள பகுதியைச் சேர்ந்தவர் பலவேசமுத்து (58). இவருக்கும், செல்வகுமார் (55) என்பவருக்கும் இடையே நீண்ட நாட்களாக வயலில் தண்ணீர் பாய்ச்சுவது தொடர்பாக முன்விரோதம் இருந்து வந்ததாகக் கூறப்படுகிறது. இன்று வழக்கம் போல வயலில் தண்ணீர் பாய்ச்சிக் கொண்டிருந்தபோது, இருவருக்கும் இடையே மீண்டும் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது. வாக்குவாதம் முற்றிய நிலையில், ஆத்திரமடைந்த செல்வகுமார் அரிவாளால் பலவேசமுத்துவை சரமாரியாக வெட்டியுள்ளார். இதில் பலத்த காயமடைந்த பலவேசமுத்து, ரத்த வெள்ளத்தில் சம்பவ இடத்திலேயே துடிதுடித்து உயிரிழந்தார்.

கொலை செய்த பின் அங்கிருந்து தப்பியோட முயன்ற செல்வகுமாரை, அக்கம் பக்கத்தில் இருந்த பொதுமக்கள் விரட்டிச் சென்று மடக்கிப் பிடித்தனர். உடனடியாக ஆரல்வாய்மொழி காவல் நிலையத்திற்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த போலீசார், பலவேசமுத்துவின் உடலைக் கைப்பற்றி பிரேதப் பரிசோதனைக்காக மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். பொதுமக்களால் பிடித்து வைக்கப்பட்டிருந்த செல்வகுமாரை போலீசார் கைது செய்து, அவரிடம் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். தண்ணீர் தகராறில் முதியவர் ஒருவர் வெட்டிக்கொலை செய்யப்பட்ட சம்பவம் ஆரல்வாய்மொழி மற்றும் அதன் சுற்றுவட்டார கிராம மக்களிடையே சோகத்தையும் அச்சத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

### மதுபோதையில் அடிக்கடி தகராறு செய்த மகன்: தலையில் அம்மிக்கல்லை போட்டு கொன்ற தாய்



**மதுரை, ஏப்.29:**

மதுரை பெருங்குடி ஆதிசிவன் நகர் பகுதியை சேர்ந்தவர் சிவபெருமாள் (30 வயது). இவருக்கு திருமணமான நிலையில், மனைவியை பிரிந்து, தனது தாய் பொற்கொடியுடன் அதேபகுதியில் வசித்து வந்தார். சிவபெருமாள் தனது தாயிடம் மதுஅருந்த பணம் கேட்டு அவ்வப்போது தொந்தரவு செய்து வந்ததாகவும், மதுபோதையில் வீட்டிற்கு வந்து அடிக்கடி தகராறில் ஈடுபட்டு வந்ததாகவும் கூறப்படுகிறது.

இந்த நிலையில் நேற்று மதுபோதையில் வீட்டுக்கு வந்த சிவபெருமாள், வழக்கம் போல் பொற்கொடியிடம் தகராறில் ஈடுபட்டார். பின்னர் சிறிது நேரத்தில் வீட்டில் படுத்து தூங்கிவிட்டார். தனது மகன் தினமும் மதுகுடித்து விட்டு தகராறில் ஈடுபட்டு வருவதால் மனவேதனையில் இருந்த பொற்கொடி மனதை கல்லாக்கி கொண்டு வேறு வழியில்லாமல் வீட்டில் இருந்த அம்மிக்கல்லை தூக்கி, தூங்கிக்கொண்டிருந்த சிவபெருமாள் தலையில் போட்டார்.

இதில் அவர் ரத்த வெள்ளத்தில் துடிதுடித்து சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தார். இந்த சம்பவம் குறித்து தகவல் அறிந்த பெருங்குடி போலீசார் விரைந்து வந்து, சிவபெருமாளின் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக மதுரை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இதையடுத்து பொற்கொடியை போலீசார் கைது செய்தனர்.

போலீசாரின் முதல் கட்ட விசாரணையில், மதுபோதையில் தொடர்ந்து தகராறில் ஈடுபட்டு வந்ததால், மனவேதனையில் கொலை செய்ததாக போலீசாரிடம் கண்ணீர் மல்க பொற்கொடி கூறினார். மகனின் தலையில் அம்மிக்கல்லை போட்டு தாய் கொலை செய்த சம்பவம் மதுரையில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

## விளையாட்டு செய்திகள்

### பாட்மிண்டன்: கால் இறுதிக்கு முன்னேறியது இந்தியா

**ஹார்சென்ஸ், ஏப்.29:**

டென்மார்க்கின் ஹார்சென்ஸ் நகரில் தாமஸ் கோப்பைக்கான பாட்மிண்டன் தொடர் நடைபெற்று வருகிறது. இதில் 'ஏ' பிரிவில் இடம் பெற்றிருந்த இந்திய ஆடவர் அணி நேற்று நடைபெற்ற லீக் ஆட்டத்தில் ஆஸ்திரேலியாவை எதிர்த்து விளையாடியது. இதில் இந்தியா 5-0 என்ற கணக்கில் முழுமையாக வெற்றி பெற்று கால் இறுதி சுற்றுக்கு முன்னேறியது. ஒற்றையர் பிரிவு ஆட்டங்களில் இந்தியாவின் லக் ஷயா சென் 21-14, 21-16 என்ற செட் கணக்கில் எஃப்ரைம் ஸ்டீபனையும், ஆயுஷ் ஷெட்டி 21-8, 21-6 என்ற செட் கணக்கில் ஸ்ரே தண்டையும் தோற்கடித்தனர். ஹெச்.எஸ்.பிரனாய் 21-11, 21-17 என்ற செட் கணக்கில் ரிஷி ஹோன்டா பூபதியை வீழ்த்தினார். இரட்டையர் பிரிவில் இந்தியாவின் சாட்விக் சாய்ராஜ் ராங்கி ரெட்டி, ஷிராக் ஷெட்டி ஜோடி 21-14, 21-16 என்ற செட் கணக்கில் ரிஸ்கி ஹிடாயத், ஜாக் யூ ஜோடியை வீழ்த்தியது. அதேவேளையில் ஹரிகரன் அம்சகருணன், எம்.ஆர்.அர்ஜுன் ஜோடி 21-12, 21-10 என்ற செட் கணக்கில் ஆண்டிகா ராமடியன்ஸ்யா, எப்ரைம் ஸ்டீபன் சாம் ஜோடியை வென்றது. இந்திய அணி தனது கடைசி லீக் ஆட்டத்தில் நாளை (29-ம் தேதி) சீனாவுடன் மோதுகிறது.

### ஐபிஎல் - 9,000 ரன்களைக் கடந்த முதல் வீரர்... வரலாற்று சாதனை படைத்த விராட் கோலி

**புதுடெல்லி, ஏப்.29:**

2026 ஐபிஎல் கிரிக்கெட் வரலாற்றில் ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு (RCB) அணியின் நட்சத்திர வீரர் விராட் கோலி இன்று ஒரு மாபெரும் சாதனையைப் படைத்துள்ளார். ஐபிஎல் தொடரில் 9,000 ரன்களைக் கடந்த முதல் பேட்டர் என்ற வரலாற்று சாதனையை அவர் எட்டியுள்ளார்.

டெல்லியில் இன்று (திங்கட்கிழமை) நடைபெற்ற டெல்லி கேப்பிடல்ஸ் அணிக்கு எதிரான லீக் ஆட்டத்தில், தனது 11-வது ரன்னை எடுத்தபோது கோலி இந்த மைல்கல்லைத் தொட்டார். 9,000 ரன்களைக் கடந்து 'ரன் மெஷின்' என்பதை மீண்டும் ஒருமுறை நிரூபித்துள்ள விராட் கோலிக்கு சமூக வலைதளங்களில் பாராட்டுகள் குவிந்து வருகின்றன. 2008-ம் ஆண்டு ஐபிஎல் தொடங்கப்பட்டது முதல் இன்று வரை ஒரே அணிக்காக (RCB) விளையாடி வரும் ஒரே வீரர் விராட் கோலி மட்டுமே. ஐபிஎல் வரலாற்றில் கோலியைத் தவிர வேறு எந்த வீரரும் இதுவரை 8,000 ரன்களைக் கூட நெருங்கவில்லை. இவருக்கு அடுத்தபடியாக ரோகித் சர்மா (7,183 ரன்கள்) 7,000 ரன்களுக்கு மேல் எடுத்த ஒரே வீரராக உள்ளார்.

### விராட் கோலி அதிரடி சாதனை!

இந்தாண்டுக்கான ஐபிஎல் தொடர் கடந்த மாதம் தொடங்கி நடைபெற்று வருகின்றது. இதில், நேற்று டெல்லியில் நடைபெற்ற போட்டியில் டெல்லி கேபிடல்ஸ் மற்றும் ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு அணிகள் விளையாடின. இந்தப் போட்டியில் டெல்லி அணி 75 ரன்களுக்கு ஆட்டமிழந்த நிலையில், பெங்களூரு அணி 6.3 ஓவர்களில் இலக்கை எட்டி 9 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

இதில், நட்சத்திர வீரர் விராட் கோலி 23* ரன்கள் அடித்திருந்த நிலையில், ஐபிஎல் வரலாற்றில் 9,000 ரன்களைக் கடந்த முதல் வீரர் என்ற புதிய சாதனையை அவர் படைத்துள்ளார்.

## ஆந்திரா: மகனின் புதிய பைக்கை தீயிட்டு கொளுத்திய தந்தை

**விசாகப்பட்டினம், ஏப்.29:**

ஆந்திர மாநிலம், விசாகப்பட்டினத்தை சேர்ந்த ஆட்டோ ஓட்டுநர் சந்திரசேகர். இவருக்கு 2 மகன்கள் உள்ளனர். இதில் மூத்த மகன் கல்லூரியில் சேர்ந்து படித்து வருகிறார்.

கடந்த ஆண்டு இவர் கல்லூரியில் சேரும்போது, தனக்கு புதிய பைக் வேண்டும் என தனது தந்தையை நச்சரித்துள்ளார். மகன் ஆசைப்படுகிறானே என சந்திரசேகரும் ரூ.1 லட்சத்துக்கும் அதிக விலையில், மாதத் தவணையில் பைக் ஒன்றை வாங்கிக் கொடுத்துள்ளார்.

ஆனால் அதன் பிறகு மகனின் போக்கே மாறிவிட்டது. அடிக்கடி நண்பர்களுடன் பைக்கில் வெகு தூரம் செல்வது, போக்குவரத்து விதிகளை அடிக்கடி மீறுவது, அதிக வேகமாக செல்வது என மகன் செயல்பட்டுள்ளார்.

போக்குவரத்து விதிமீறல் தொடர்பாக அபராத ரசீது அடிக்கடி தந்தையின் செல்போனுக்கு வந்துள்ளது. இதற்கிடையில் பைக்கில் மகன் வேகமாக சென்றதால் ஒருவிபத்தும் ஏற்பட்டுள்ளது. இதில் படுகாயமடைந்த மகனுக்கு ரூ.1 லட்சம் வரை சந்திரசேகர் மருத்துவ செலவு செய்துள்ளார். அந்த பைக்கை பழுது நீக்க ரூ.20 ஆயிரம் செலவிட்டுள்ளார்.

மகன் குணமடைந்த பிறகும் அவரது போக்கில் எந்த மாற்றமும் ஏற்படாததால் சந்திரசேகர் ஆத்திரமடைந்தார். இதில் நேற்று அவர் தனது மகன் பைக்கை ஒருமைதானத்தில் வைத்து, அதன் மீது பெட்ரோலை ஊற்றி தீயிட்டு கொளுத்தினார். இது குறித்த தகவலின் பேரில் பெந்துர்த்தி போலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

## வெப்ப அலையால் பாம்புக்கடி சம்பவங்கள் அதிகரிப்பு: கேரள அரசு வெளியிட்ட வழிகாட்டுதல்கள்

**திருவனந்தபுரம், ஏப்.29:**

வெப்பநிலை கடுமையாக அதிகரித்து வரும் நிலையில், கடந்த ஒரு வாரமாக கேரளா முழுவதும் பல பாம்புக்கடி சம்பவங்களும் உயிரிழப்புகளும் பதிவாகியுள்ளன. இதனையடுத்து இது தொடர்பான வழிகாட்டுதல்களை கேரள அரசு வெளியிட்டுள்ளது.

ரேளாவில் கடந்த ஒரு வாரத்தில் மட்டும் பல்வேறு பகுதிகளில் பாம்புக்கடி தொடர்பான ஆறு உயிரிழப்புகள் பதிவாகியுள்ளன. ஏப்ரல் 19 அன்று, திருச்சூரில் இரண்டு சிறுவர்கள் வீட்டில் விளையாடியபோது, அவர்களை கட்டுவிரியன் பாம்பு கடித்தது. அதில் தம்பி உயிரிழந்த நிலையில், அண்ணன் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். கோழிக்கோடு மாவட்டத்தின் குட்டியாடி பகுதியில் சிறு குழந்தைகள் தூங்கிக்கொண்டிருந்த ஒரு வீட்டுக்குள் ஐந்து கட்டுவிரியன் பாம்புகள் கண்டுபிடிக்கப்பட்டன.

இதனையடுத்து, இதுபோன்ற சூழலைக் கையாள்வதற்காகச் சுகாதாரத் துறை சில வழிகாட்டுதல்களை வெளியிட்டுள்ளது. அதிகரித்து வரும் வெப்பத்தின் காரணமாகவே, வெப்பத்தைத் தாங்க முடியாமல் பாம்புகள் வீடுகள் உள்ளிட்ட குளிர்ந்த இடங்களைத் தேடி வருவதாகவும் சுகாதாரத் துறை அமைச்சர் வீணா ஜார்ஜ் தெரிவித்தார்.

சரியான நேரத்தில் அளிக்கப்படும் முதலுதவியும், துரிதமான மருத்துவச் சிகிச்சையும் உயிர்களைக் காப்பாற்ற உதவும் என்று அவர் கூறினார்.

மேலும், தாலுகா அளவிலான அனைத்து மருத்துவமனைகளிலும் பாம்புக்கடிக்கு எதிரான விஷமுறிவு மருந்து *(ANTI-SNAKE VENOM)* கையிருப்பில் உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

"நோயாளியின் அறிகுறிகள் மற்றும் ஆய்வகப் பரிசோதனை முடிவுகளின் அடிப்படையில், உரிய மருத்துவ நெறிமுறைகளைப் பின்பற்றியே சிகிச்சை அளிக்கப்படுகிறது" என்று கூறிய அவர், மருத்துவமனைகள் இந்த வழிகாட்டுதல்களைக் கண்டிப்பாகப் பின்பற்ற வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

மேலும், பாம்புகள் வீட்டுக்குள் நுழைவதைத் தடுக்கவும், பாம்புக்கடி ஏற்படும் அபாயத்தைக் குறைக்கவும் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அதிகாரிகளும் பொதுமக்களுக்கு அறிவுறுத்தியுள்ளனர்.

பாம்புக்கடியைத் தவிர்க்க மேற்கொள்ள வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்:

கதவுகளையும் ஜன்னல்களையும் மூடியே வைத்திருக்கவும்.

பாம்புகள் வீட்டுக்குள் நுழைவதைத் தடுக்கக்கூடிய வகையில் இடைவெளிகளை அடைத்துவிடவும்.

வீட்டுக்கு வெளியே அல்லது தரையில் படுப்பதைத் தவிர்க்கவும்.

படுக்கைகள் மற்றும் கொசுவலைகளைப் பயன்படுத்தவும்.

உங்கள் சுற்றுப்புறத்தைச் சுத்தமாக வைத்திருக்கவும்; குப்பைகளை அகற்றுவதுடன், புற்களையும் புதர்களையும் வெட்டிச் சீர்செய்யவும். விறகுகள் அல்லது துணிகளை வீட்டுக்கு மிக அருகில் குவித்து வைக்க வேண்டாம். வீட்டைச் சுற்றியுள்ள பொந்துகளை அடைத்துவிடவும்.

இரவு நேரங்களில் வீட்டின் உள்ளேயும் வெளியேயும் போதிய வெளிச்சம் இருப்பதை உறுதி செய்யவும். இருட்டிய பிறகு வெளியே செல்லும்போது கையில் டார்ச் விளக்கை எடுத்துச் செல்லவும்.

புதர்கள் நிறைந்த பாதைகளின் வழியாக நடப்பதைத் தவிர்க்கவும்.

பாதுகாப்பான காலணிகளை அணிந்து கொள்ளவும்.

படுக்கைகள், போர்வைகள், காலணிகள், துணிகள், பைகள் மற்றும் வாகனங்களைப் பயன்படுத்துவதற்கு முன்பு அவற்றை நன்கு சோதித்துப் பார்க்கவும்.

எங்கேயும் பாம்பு தென்பட்டால், அதை நீங்களே பிடிக்க முயற்சிக்க வேண்டாம். புகாரளியுங்கள் அல்லது 'சர்ப்பா' செயலியைப் பயன்படுத்துங்கள்

பாம்பு கடித்தால் என்ன செய்ய வேண்டும்?

பாதிக்கப்பட்டவரை அமைதியாக வைத்திருங்கள்; பதற்றத்தைத் தவிருங்கள்.

## வணிகச் செய்திகள்


### சென்னை: சில்லறை விற்பனை கடைகளில் தக்காளி விலை ரூ.50 ஆக அதிகரிப்பு

**சென்னை, ஏப்.29**

சென்னை: சென்னை கோயம்பேடு சந்தையில் தக்காளி விலை உயர்ந்து வருகிறது. இன்று கிலோ ரூ.35-க்கும், வெளிச்சந்தைகளில் சில்லறை விற்பனையில் கிலோ ரூ.50-க்கும் விற்கப்பட்டது. கோயம்பேடு சந்தைக்கு ஆந்திரா மற்றும் கர்நாடக மாநில எல்லைப் பகுதிகளிலிருந்து அதிக அளவில் தக்காளி வருகிறது. குறிப்பாக ஆந்திர மாநிலம் பலமனேரி, புங்கனூர், மதனபள்ளி, தமிழகத்தில் கிருஷ்ணகிரி, ஓசூர் ஆகிய இடங்களில் இருந்தும், கர்நாடக மாநிலம் கோலார், சீனிவாசபுரம், சிந்தாமணி, ஒட்டிப்பள்ளி ஆகிய பகுதிகளில் இருந்தும் அதிக அளவில் தக்காளி விற்பனைக்கு வருகிறது. தமிழகம் மற்றும் அதனை ஒட்டிய ஆந்திர, கர்நாடக மாநில பகுதிகளில் கோடைக்காலம் தொடங்கியதிலிருந்து கடும் வெயில் வாட்டி வருகிறது. வட மாவட்டங்களில் 104 டிகிரிக்கு மேல் வெப்பநிலை பதிவாகி வருகிறது. இதனால் தக்காளி விளைச்சல் குறைந்து, கடந்த ஒரு வாரமாக கோயம்பேடு சந்தைக்கு தக்காளி வரத்து குறைந்து வந்தது. இதனால் கடந்த மாதம் மொத்த விலையில் கிலோ ரூ.20 வரை விற்கப்பட்ட தக்காளி இன்று கிலோ ரூ.35 ஆக உயர்ந்திருந்தது. வெளிச் சந்தைகளில் சில்லறை விற்பனையில் கிலோ ரூ.50 வரை உயர்ந்து இருந்தது. கோடைக்காலம் முடியும் வரை தக்காளி விலை உயரும் என வியாபாரிகள் தெரிவித்துள்ளனர். இதேபோன்று பீட்ரூட், பாகற்காய், அவரைக்காய் உள்ளிட்ட காய்கறிகளின் விலையும் கிலோ ரூ.20-லிருந்து ரூ.30 ஆக உயர்ந்துள்ளது.

## கொடைக்கானலில் முதல்வர் ஸ்டாலின் சைக்கிள் பயணம்






**சென்னை, ஏப்.29:**

தமிழக சட்டப்பேரவை தேர்தல் வாக்குப்பதிவு நடந்து முடிந்துள்ள நிலையில் கொடைக்கானலில் 5 நாட்கள் தங்கி ஓய்வெடுப்பதற்காக குடும்பத்துடன் முதல்வர் ஸ்டாலின் வந்துள்ளார். கடந்த 2 நாட்களாக நட்சத்திர ஏரி, மனோரஞ்சிதம் அணைப் பகுதியில் முதல்வர் நடைப்பயிற்சியில் ஈடுபட்டார்.

3-வது நாளான இன்று (ஏப்.28) காலை நட்சத்திர ஏரி பகுதியில் நடைப்பயிற்சியில் ஈடுபட்டார் முதல்வர். அப்போது, ஆரோக்கியத்துடன் இருக்க தினமும் 'வாக்கிங் போங்க...' என்று பொதுமக்களுக்கு 'அட்வைஸ்' செய்தார். அப்போது, பொதுமக்கள், சுற்றுலாப்பயணிகள் அவருடன் செல்போனில் புகைப்படம் எடுத்து கொண்டனர். இடையில் ஒரு ஹோட்டலில் அமர்ந்து, டீ அருந்தியவாறு சிறிது நேரம் ஓய்வெடுத்தார். பின்னர், நட்சத்திர ஏரியைச் சுற்றி சைக்கிள் பயணம் மேற்கொண்டார். முதல்வர் ஸ்டாலின் சைக்கிள் பயணம் மேற்கொள்வதை அறிந்த ஏராளமான பொதுமக்கள் சாலையோரம் நின்று, அவருக்கு கையசைத்து மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர். அவரும் பொதுமக்களைப் பார்த்து கையசைத்தவாறே சைக்கிள் பயணம் மேற்கொண்டார்.

பின்னர், காரில் ஏறி தங்கும் விடுதிக்கு முதல்வர் திரும்பினார். இன்றை தினம் கொடைக்கானல் மேல் மலை கிராமமான மன்னவனூரில் உள்ள மத்திய அரசின் செம்மறி ஆடு ரோம உற்பத்தி ஆராய்ச்சி மையத்தில் உள்ள ஆடு மற்றும் முயல் பண்ணை, வனத்துறை கட்டுப்பாட்டில் உள்ள சூழல் சுற்றுலா மையத்தை முதல்வர் பார்வையிட உள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

# வரலாற்று சிறப்பு மிக்க மைல்கல்: இந்தியா - நியூசிலாந்து ஒப்பந்தம் குறித்து பியூஸ் கோயல் கருத்து

**புதுடெல்லி, ஏப்.29:**

இந்தியா - நியூசிலாந்து இடையே தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது. டெல்லியில் உள்ள பாரத் மண்டபத்தில் வர்த்தக அமைச்சர் பியூஷ் கோயல் மற்றும் நியூசிலாந்து வர்த்தக அமைச்சர் டாட் மெக்லே ஆகியோர் இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.



கடந்த 10 ஆண்டுகளாக முடங்கிக் கிடந்த இரு நாடுகளுக்கும் இடையேயான பேச்சுவார்த்தை, கடந்த ஆண்டு மார்ச் மாதத்தில் மீண்டும் தொடங்கப்பட்டது.

இந்த ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ள நிலையில், இருநாடுகளுக்கும் இடையே புதிய பொருளாதாரப் பாலத்தை அமைக்கும் வகையில் இது இருக்கும் என மத்திய அரசு வட்டாரங்கள் கூறுகின்றன. இந்தியாவிலிருந்து நியூசிலாந்துக்கு ஏற்றுமதி செய்யப்படும் தோல் பொருட்கள், கைத்தறி மற்றும் கைவினைப் பொருட்கள் உள்ளிட்ட சுமார் 8,284 பொருட்களுக்கு 100 சதவீத வரி விலக்கு அளிக்கப்படும்.

நியூசிலாந்திலிருந்து இந்தியாவுக்கு வரும் கம்பளி, மரம், நிலக்கரி மற்றும் பழங்கள் மீதான வரிகள் குறைக்கப்படும் என்றும் கூறப்பட்டுள்ளது.

இந்தியா - நியூசிலாந்து இடையே ஏற்பட்டுள்ள தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் வரலாற்றுச் சிறப்புமிக்கது என்று மத்திய மந்திரி பியூஷ் கோயல் கூறியுள்ளார். இது தொடர்பாக அவர் கூறியிருப்பதாவது:-

"இந்தியா - நியூசிலாந்து இடையே தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் கையெழுத்தானது. இந்தியாவின் பயணத்தில் மேலும் ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க மைல்கல் இது.

சிறந்த வணிகங்களுக்கும், பெரிய முதலீடுகளுக்கான வாய்ப்பு உருவாகிறது.

கடந்த 3½ ஆண்டுகளில் 9 தடையற்ற வர்த்தக ஒப்பந்தங்களை நிறைவு செய்துள்ளோம்" என்றார்.

# திருப்பதி கோவிலில் ஒருநாள் உண்டியல் காணிக்கை ரூ.3.27 கோடி

**திருப்பதி, ஏப்.29:**

திருப்பதி ஏழுமலையான் கோவிலில் தினமும் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் வருகை தந்து சாமி தரிசனம் செய்து வருகின்றனர். விடுமுறை மற்றும் விசேஷ தினங்களில் பக்தர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும். இலவச தரிசனத்தில் பல மணி நேரம் காத்திருந்து பக்தர்கள் சாமி தரிசனம் செய்கின்றனர்.

இந்த நிலையில், திருப்பதி ஏழுமலையான் கோவிலில் நேற்று முன்தினம் 80 ஆயிரத்து 350 பக்தர்கள் சாமி தரிசனம் செய்தனர். 36 ஆயிரத்து 597 பக்தர்கள் தலைமுடி காணிக்கை செலுத்தினர். அன்று தேவஸ்தானம் அறிவித்த ஒருநாள் உண்டியல் காணிக்கை ரூ.3 கோடியே 27 லட்சம் ஆகும்.

# விண்வெளியில் இருந்து கிராமங்களை 'மேப்பிங்' செய்த இஸ்ரோ

**புதுடெல்லி, 29:**

விண்வெளியில் இருந்து இந்தியாவின் ஒவ்வொரு கிராமத்தையும் மிகத் துல்லியமாக வரைபடமாக்கும் முக்கிய திட்டத்தை இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (இஸ்ரோ) வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளது.

இது தொடர்பான அறிவிப்பை தேசிய ஊராட்சிகள் தினமான கடந்த வெள்ளிக் கிழமை இஸ்ரோ வெளியிட்டது. நாடு முழுவதற்குமான உயர்-தெளிவுத்திறன் கொண்ட நிலப் பயன்பாடு மற்றும் நிலப்பரப்பை 1:10000 என்ற விகிதத்தில் வரைபடம் செய்து முடித்துள்ளதாக இஸ்ரோ அறிவித்தது. அதாவது வரைபடத்தில் உள்ள 1 செ.மீ என்பது தரையில் வெறும் 100 மீட்டரைக் குறிக்கும். இது ஒரு நெல் வயலுக்கும் குளத்துக்கும் இடையிலான வித்தியாசத்தை துல்லியமாக வேறுபடுத்திக் காட்டும் அளவுக்குத் தெளிவானது.

2011ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, இந்தியாவில் 6,49,481 கிராமங்கள் இருந்தன. இந்த செயற்கைக் கோள் தரவை அரசு நிறுவனங்களுக்கு இஸ்ரோ வழங்கியுள்ளது.

இது தொடர்பாக இஸ்ரோ எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில்,

"இந்தத் தரவுத்தொகுப்பு கிராமப் பஞ்சாயத்து மேம்பாட்டுத் திட்டங்களுக்குத் துணைபுரிவதுடன், பஞ்சாயத்து ராஜ் அமைச்சகத்தின் 'கிராம் மஞ்சித்ரா' (கிராம வரைபடம்) இணையதளத்தில் உள்ள தகவல் பிரிவுகளில் ஒன்றாக ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது. இது கிராமப்புற அளவில் வலுவான, தரவு சார்ந்த நிர்வாகத்தை சாத்தியமாக்குகிறது" என்று தெரிவித்துள்ளது.

கிராம் மஞ்சித்ரா இணையதளம், உள்ளாட்சி அமைப்புகள் தரவு சார்ந்த வளர்ச்சி முடிவுகளை எடுக்க உதவும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. கிராமங்களை வரைபடமாக்குவது, கிராமப் பஞ்சாயத்து மேம்பாட்டுத் திட்டங்களைச் சிறப்பாகத் தயாரிப்பதற்கு உதவும்.

இது தரவு அடிப்படையிலான முடிவெடுக்கும் முறையை சாத்தியமாக்குவதுடன், நில வளங்களையும் அவற்றின் பயன்பாட்டு முறைகளையும் கண்டறிய உதவும். ஒட்டுமொத்தமாக, இந்தியாவின் கிராமப்புறங்களில் அரசுத் திட்டங்களைச் செயல்படுத்துவதில் வெளிப்படைத்தன்மையையும் பொறுப்புடைமையையும் இது மேம்படுத்தும். மேலும் அடிமட்ட அளவில் ஜனநாயகத்தை வலுப்படுத்தும்.

# மருத்துவ உலகில் மற்றுமொரு அதிசயம்: இரு கைகளை இழந்த பெண்ணுக்கு கிடைத்த மறுவாழ்வு

**புதுடெல்லி, ஏப்.29:**

டெல்லியில் உள்ள ஒரு தனியார் மருத்துவமனையில், மருத்துவ வரலாற்றில் மிகச் சிக்கலான "இரு கை மாற்று அறுவை சிகிச்சை" வெற்றிகரமாக நடத்தி முடிக்கப்பட்டுள்ளது.

வைக்கோல் வெட்டும் இயந்திரத்தில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட விபத்தில், ஒரு பெண் தனது இரண்டு கைகளையும் இழந்து தவித்தார்.





தனது அன்றாடத் தேவைகளுக்காகக் கூட மற்றவர்களைச் சார்ந்திருக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்ட அவருக்கு, மருத்துவத் தொழில்நுட்பமும் மனிதநேயமும் கைகோர்த்துப் புதிய நம்பிக்கையை அளித்துள்ளன.

மூளைச்சாவு அடைந்த ஒருவரின் குடும்பத்தினர் முன்வந்து கைகளைத் தானம் செய்தனர். இதனைத் தொடர்ந்து, மருத்துவ நிபுணர்கள் அடங்கிய குழுவினர் சுமார் 12 மணிநேரம் தொடர்ச்சியாகப் போராடி, அந்தப் பெண்ணுக்குப் புதிய கைகளைப் பொருத்தி சாதனை படைத்துள்ளனர்.

நீண்ட போராட்டத்திற்குப் பிறகு அந்தப் பெண்ணுக்குப் புதிய கைகள் பொருத்தப்பட்டுள்ளன. தற்போது அவர் நலமுடன் இருப்பதாகவும், விரைவில் தனது பணிகளைத் தானே செய்யும் நிலைக்குத் திரும்புவார் என்றும் மருத்துவர்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர். இந்த சாதனையைப் படைத்த மருத்துவக் குழுவினருக்குப் பல்வேறு தரப்பிலிருந்தும் பாராட்டுகள் குவிந்து வருகின்றன.

# சிக்கன் பிரியாணிக்கு பிறகு தர்பூசணி சாப்பிட்ட ஒரே குடும்பத்தை சேர்ந்த 4 பேர் பரிதாப சாவு

**மும்பை, ஏப்.29:**

மராட்டிய மாநிலம் மும்பை பைதோனி பகுதியில் உள்ள முகல் கட்டிடத்தில் வசித்து வந்தவர் அப்துல்லா (வயது 40). இவரது மனைவி நஸ்ரீன் (35). இவர்களுக்கு ஆயிஷா (16), ஷைனப் (13) ஆகிய மகள்கள் இருந்தனர். கடந்த சனிக்கிழமை அப்துல்லா வீட்டுக்கு உறவினர்கள் 5 பேர் வந்து இருந்தனர். எனவே இரவு 10.30 மணியளவில் அப்துல்லா குடும்பத்தினர் உறவினர்களுடன் சிக்கன் பிரியாணி சாப்பிட்டனர்.



உறவினர்கள் சென்றபிறகு அப்துல்லா குடும்பத்தினர் நள்ளிரவு 1 மணி அளவில் தர்பூசணி பழம் சாப்பிட்டனர். இந்தநிலையில் நேற்று முன்தினம் அதிகாலை 5.30 மணியளவில் அவரது குடும்பத்தை சேர்ந்த 4 பேருக்கும் திடீரென உடல்நல பாதிப்பு ஏற்பட்டது.

அவர்கள் வாந்தி, வயிற்றுப்போக்கால் பாதிக்கப்பட்டனர். உடனடியாக அவர்கள் அருகில் உள்ள குடும்ப டாக்டரிடம் சிகிச்சை பெற்றனர். பின்னர் மேல் சிகிச்சைக்காக அவர்கள் ஜே.ஜே. ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர்.

இதில் அன்று காலை 10.15 மணியளவில் அப்துல்லாவின் கடைசி மகள் ஷைனப் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இதையடுத்து அடுத்த சில மணி நேரங்களில் அப்துல்லாவின் மனைவி மற்றும் மூத்த மகளும் உயிரிழந்தனர். இரவில் அப்துல்லாவும் பரிதாபமாக உயிரிழந்தார். அப்துல்லா குடும்பத்தினருடன் சிக்கன் பிரியாணி சாப்பிட்ட உறவினர்களுக்கு எந்த பாதிப்பும் ஏற்படவில்லை என்று கூறப்படுகிறது. சிக்கன் உணவை சாப்பிட்ட பிறகு நள்ளிரவில் தர்பூசணி சாப்பிட்ட நிலையில் அப்துல்லா குடும்பத்தினர் 4 பேரும் அடுத்தடுத்து உயிரிழந்து உள்ளனர். தர்பூசணி விஷத் தன்மையாக மாறியதால் இந்த துயரம் நேர்ந்து இருக்கலாம் என்று கூறப்படுகிறது.

இருப்பினும் பிரேத பரிசோதனை அறிக்கைக்கு பிறகு அவர்களின் மரணத்துக்கான காரணம் தெரியவரும் என போலீசார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் குறித்து ஜே.ஜே. மார்க் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# ஆந்திராவில் பெட்ரோல், டீசலுக்கு கடும் தட்டுப்பாடு: திருமலையில் பக்தர்கள் பாதிப்பு

**திருப்பதி, ஏப்.29:**

ஆந்திர மாநிலத்தில் திடீரென பெட்ரோல், டீசலுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டால் பொதுமக்கள் மிகவும் அவதிக்குள்ளாகி வருகின்றனர். அதிலும் குறிப்பாக பல்வேறு வெளி மாநிலங்களில் இருந்து திருமலைக்கு வந்த பக்தர்கள் தங்களின் கார், வேன்களுக்கு போதிய டீசல், பெட்ரோல் கிடைக்காமல் பெரும் அவதிப்படுகின்றனர். இதையடுத்து, டீலர்களுக்கு முதல்வர் சந்திரபாபு நாயுடு எச்சரிக்கை விடுத்துள்ளார்.



ஆந்திர மாநிலம் முழுவதும் திடீரென பெட்ரோல், டீசலுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதற்கு பல காரணங்கள் கூறப்படுகின்றன. கடப்பா, விஜயவாடா ஆகிய இடங்களில் உள்ள ஆயில் நிறுவனங்களில் ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டால், மாநிலம் முழுவதும் பெட்ரோல், டீசல் கிடைக்கவில்லை என கூறப்படுகிறது. 'இதெல்லாம் உண்மை இல்லை. பெட்ரோல், டீசல் பதுக்கப்படுகிறது. இதன் மூலம் கள்ள சந்தையில் அதிக விலைக்கு விற்கலாமென டீலர்கள் முடிவெடுத்து வேண்டுமென்றே மாநிலம் முழுவதும் பற்றாக்குறையை ஏற்படுத்தி உள்ளனர்' என்ற தகவலும் வெளியாகி உள்ளது. ஆந்திர மாநிலம் முழுவதும் சுமார் 4,150 பெட்ரோல் பங்குகள் உள்ளன. இதில் தற்போது 70 சதவீதத்துக்கும் மேலான பங்குகளில் 'நோ ஸ்டாக்' அறிவிப்பு பலகைகள்தான் காணப்படுகின்றன. அண்டை மாநிலங்களான தெலங்கானா, தமிழகம், கர்நாடகா உள்ளிட்ட மாநிலங்களில் இந்த பிரச்சினை இல்லை. ஆனால் திடீரென ஆந்திராவில் மட்டும் இப்பிரச்சினை தலைதூக்க காரணம் என்ன என்பது குறித்து மாவட்ட ஆட்சியர்கள், டீலர்களுடன் ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு நேற்று ஆலோசனை நடத்தினார். பொதுமக்கள், வியாபாரிகள், விவசாயிகள், மாணவர்கள், அரசு மற்றும் தனியார் ஊழியர்கள் என அனைத்து தரப்பினரும் பாதிக்கப்படுவர் என்பதுடன் சுற்றுலா துறையும் பாதிப்படையும் என்பதால் 24 மணி நேரத்துக்குள் பெட்ரோல், டீசல் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என ஆட்சியர்களுக்கு அவர் உத்தரவிட்டுள்ளார். ஒவ்வொரு 3 மணி நேரத்துக்கு ஒருமுறை இதுதொடர்பாக மாநிலம் தழுவிய அறிக்கையை கொடுக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தியுள்ளார். நேற்று மாலை வரையிலும்கூட திருப்பதி, சித்தூர், நெல்லூர், குண்டூர், கடப்பா, விஜயவாடா, விசாகப்பட்டினம், கோதாவரி மாவட்டங்கள் என ஆந்திரா முழுவதும் எரிபொருள் பிரச்சினை தீர்ந்தபாடில்லை. திருமலையில் உள்ள 2 பெட்ரோல் பங்குகளிலும் நேற்று மதியம் முதல் பெட்ரோல், டீசல் இல்லை எனும் அறிவிப்பு பலகைகள் வைக்கப்பட்டதால் வெகு தூரம் செல்லும் வாகன ஓட்டிகளுக்கு மிகுந்த சிரமம் ஏற்பட்டுள்ளது. திருமலையில் தொடர்ந்து தங்குவதற்கு அறைகளும் கிடைக்காமல், பெட்ரோல், டீசலுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் கீழே இறங்கி செல்லவும் முடியாமல் வாகன ஓட்டிகள் தவித்து வருகின்றனர். எனவே, உடனடியாக இந்த பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும் என பக்தர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# நிர்வாக வசதிக்காக லடாக், மேலும் 5 மாவட்டங்களாக பிரிப்பு

**லே, ஏப்.29:**

லடாக் யூனியன் பிரதேசத்தில் தற்போதுள்ள லே (Leh) மற்றும் கார்கில் (Kargil) ஆகிய இரண்டு மாவட்டங்களுடன், புதிதாக 5 மாவட்டங்கள் சேர்க்கப்பட்டு, மொத்தம் 7 மாவட்டங்களாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இன்று லடாக் துணை நிலை ஆளுநர் விகே சக்சேனா இந்த புதிய மாவட்டங்களுக்கான அறிவிப்பை வெளியிட்டார். ஆகஸ்ட் 2024 இல் மத்திய உள்துறை அமைச்சகம் இதற்கு ஒப்புதல் அளித்திருந்தது.

புதிதாக அறிவிக்கப்பட்டுள்ள மாவட்டங்கள்:

1. சான்ஸ்கர் (Zanskar)
2. டிராஸ் (Dras)
3. ஷாம் (Sham)
4. நுப்ரா (Nubra)
5. சாங்தாங் (Changthang)

நிர்வாக வசதியை மேம்படுத்தவும், தொலைதூரப் பகுதிகளில் உள்ள மக்களுக்கு அரசின் சேவைகள் எளிதில் சென்றடையவும் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# மாநிலங்களவையில் பாஜகவின் பலம் 113 ஆக உயர்வு

**புதுடெல்லி, ஏப்.29:**

ஆம் ஆத்மி கட்சியை சேர்ந்த மேல்சபை எம்.பி.க்கள் ராகவ் சத்தா, அசோக் மித்தல், சந்தீப் பாடக், ஹர்பஜன் சிங், ராஜேந்திர குப்தா, விக்ரம் சஹ்னி மற்றும் ஸ்வாதி மாலிவால் ஆகிய 7 பேர் பா.ஜனதாவில் இணைந்தனர். இந்த 7 எம்.பி.க்களும் தங்களை பா.ஜனதா எம்.பி.க்களாக கருத வேண்டும் என்று மேல்சபை தலைவர் சி.பி. ராதாகிருஷ்ணனிடம் கடந்த வெள்ளிக்கிழமை மனு அளித்திருந்தனர். கட்சி மாறிய 7 எம்.பி.க்களையும் தகுதி நீக்கம் செய்ய வேண்டும் என்று மேல்சபை தலைவரும், துணை ஜனாதிபதியுமான சி.பி. ராதாகிருஷ்ணனிடம் ஆம் ஆத்மி கட்சி குழு தலைவர் சஞ்சய் சிங் மனு அனுப்பினார். இந்த நிலையில் ஆம் ஆத்மி கட்சியின் 7 எம்.பி.க்கள் பா.ஜனதாவுடன் இணைவதை மேல்சபை தலைவர் சி.பி. ராதாகிருஷ்ணன் இன்று அதிகாரப்பூர்வமாக ஏற்றுக் கொண்டார். இதன் மூலம் பாஜகவின் பலம் ராஜ்யசபாவில் 113 ஆக உயர்ந்துள்ளது. அதே நேரத்தில் அரவிந்த் கெஜ்ரிவாலின் ஆம் ஆத்மி கட்சியின் பலம் 3 ஆக குறைந்துள்ளது

# 6 நாள் பயணமாக சிம்லா வந்தடைந்தார் திரவுபதி முர்மு

**சிம்லா, ஏப்.29:**

இமாச்சல பிரதேசத்தில் 27 முதல் மே 2 வரை கோடைக்கால சுற்றுப் பயணம் மேற்கொள்கிறார் ஜனாதிபதி திரவுபதி. இதனையொட்டி அவர் இன்று காலை சிம்லா வந்தடைந்தார். அவரை அம்மாநில முதல்-மந்திரி சுக்விந்தர் சிங், மற்றும் ஆளுநர் கவிந்தர் குப்தா மற்றும் மந்திரிகள் வரவேற்றனர். இந்தப் பயணத்தின் போது, ஜனாதிபதி முர்மு சிம்லாவில் உள்ள மஷோப்ராவில் அமைந்துள்ள ராஷ்டிரபதி நிவாஸில் தங்குகிறார்.

ஏப்ரல் 28 அன்று, சிம்லாவில் உள்ள லோக் பவனில் இமாச்சலப் பிரதேச ஆளுநர் ஏற்பாடு செய்துள்ள விருந்தில் ஜனாதிபதி கலந்துகொள்கிறார். ஏப்ரல் 29 அன்று, ஜனாதிபதி முர்மு அடல் சுரங்கப்பாதையை பார்வையிட்டு அதில் பயணம் செய்கிறார்.

ஏப்ரல் 30 அன்று, பாலம்பூரில் உள்ள சௌத்ரி சர்வான் குமார் இமாச்சல் பிரதேஷ் கிருஷி விஸ்வவித்யாலயத்தின் பட்டமளிப்பு விழாவில் கலந்துகொள்கிறார். அதே நாளில், மஷோப்ராவில் உள்ள ராஷ்டிரபதி நிவாஸில் அவர் 'அட் ஹோம்' வரவேற்பு நிகழ்ச்சியையும் நடத்துகிறார்.

ஜனாதிபதி வருகையை முன்னிட்டு சிம்லாவில் சுமார் 1,000 போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர். போக்குவரத்து நெரிசலை கட்டுப்படுத்த சிம்லா நகரம் முழுவதும் 3 பிரிவுகளாக பிரித்து போக்குவரத்து மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

# ஆப்பிளை வறண்ட பகுதியில் விளைவித்து ஆந்திர விவசாயி சாதனை

**அமராவதி, ஏப்.29:**

இந்தியாவில் ஜம்மு - காஷ்மீர், இமாச்சல பிரதேசம் போன்ற குளிர்ச்சியான மலை பிரதேசங்களில் ஆப்பிள் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. வறண்ட பகுதிகளில் இது சாத்தியம் இல்லை என்பதால், எப்போதும் ஆப்பிள் பழத்திற்கு மவுசு அதிகம். ஆனால், வறண்ட பகுதியிலும் ஆப்பிள் சாகுபடி செய்ய முடியும் என்பதை நிரூபித்துக் காட்டியிருக்கிறார், ஆந்திர விவசாயி ஒருவர். அம்மாநிலத்தில் அனந்தபூர் மாவட்டத்தில் கோட்டங்கா பகுதியை சேர்ந்தவர் ரமண ரெட்டி. விவசாயியான இவர், உலக அளவில் விவசாயத்தில் முன்னோடியாக திகழும் இஸ்ரேல் நாட்டில் இருந்து, ஆப்பிள் செடிக்கான கன்றுகளை தலா ரூ.250 விலையில் 1,500 எண்ணிக்கையில் வாங்கினார். கே.எல்.டி. என்ற நவீன ரகமான இந்த ஆப்பிள் கன்றுகளை, தனது 2.5 ஏக்கர் விவசாய நிலத்தில் ரமண ரெட்டி நட்டுவித்து, நீர் பாய்ச்சி பராமரித்தார். இதற்காக, அவர் ரூ.4 லட்சத்து 20 ஆயிரம் தொகையை செலவிட்டார். வறண்ட வானிலையை தாங்கி வளரும் தன்மை கொண்ட இந்த ஆப்பிள் மரக்கன்றுகள் நன்கு வளர்ந்தன. குளிர்ச்சியான மலை பிரதேசங்களில் வளரும் ஆப்பிள் மரங்கள் காய்ப்பதற்கு 7 முதல் 8 ஆண்டுகள் வரை ஆகும். ஆனால், இந்த நவீன ரக ஆப்பிள் மரங்கள் 2 ஆண்டுகளிலேயே காய்க்க தொடங்கி விடுகின்றன. தற்போது, 1 டன் (ஆயிரம் கிலோ) ஆப்பிள் பழங்களை அறுவடை செய்து விவசாயி ரமண ரெட்டி சாதனை படைத்துள்ளார். ஒரு கிலோ ஆப்பிள் ரூ.120 முதல் ரூ.170 வரை விலை போகிறது. தற்போது, ஆந்திராவில் ராயலசீமா பகுதியிலும் ஆப்பிள் செடிகள் பயிரிடப்பட்டுள்ளன.

# இந்தோனேசியாவில் ரயில் விபத்து! பலி எண்ணிக்கை 14-ஆக உயர்வு!




**தெஹ்ரான், ஏப்.29:**

இந்தோனேசியாவின் தலை நகரான ஜகார்த்தாவில் ரயில் நிலையத்தில் நின்று கொண்டிருந்த பயணிகள் ரயில் மீது நீண்ட தூர அதிவேக ரயில் ஒன்று வேகமாக பின்பக்கம் மோதியதில் பெரும் விபத்து ஏற்பட்டுள்ளது. இந்த விபத்தில் இதுவரை 14 பேர் பலியானதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

80-க்கும் மேற்பட்டோர் படுகாயங்களுடன் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

ஜகார்த்தாவில் உள்ள பெகாசி நகர ரயில் நிலையத்தில் ஜகார்த்தா முதல் சிகரங் வரை செல்லும் பயணிகள் ரயில் மீது ஜகார்த்தா - சுரபாயா இடையே ஓடும் இந்தோனேசியாவின் அதிவேக ரயில் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து, ரயில் இடிபாடுகளில் சிக்கியுள்ளவர்களை மீட்கும் பணி நடைபெற்று வருகின்றது. 100-க்கும் மேற்பட்டோர் மீட்புப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். இந்தோனேசியாவில் போக்குவரத்து விபத்துகள் வழக்கமாக நடைபெறுவதே. அங்கு பேருந்துகள், ரயில்கள், விமானங்கள் உள்பட பழையதாகவும் முறையான பராமரிப்பற்றதாகவும் உள்ளன.

இதற்கு முன்னர், மேற்கு ஜாவா பகுதியில் 2024-ல் ஏற்பட்ட ரயில் விபத்தில் 4 பேர் பலியாகி 20-க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

## ஈரான் புதிய நிபந்தனைகளை ட்ரம்ப் ஏற்க வாய்ப்பில்லை: பேச்சுவார்த்தை தொடர்வதில் சிக்கல்




**வாஷிங்டன், ஏப்.29:**

போர் நிறுத்தத்துக்கு ஈரான் விதித்துள்ள புதிய நிபந்தனைகளால் அதிபர் ட்ரம்ப் அதிருப்தியில் உள்ளதாகவும், அந்த நிபந்தனைகளை அவர் ஏற்க வாய்ப்பில்லை என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளது. இதனால் இருதரப்பு பேச்சுவார்த்தையை தொடர்வதில் இழுபறி நீடிக்கிறது.

அமெரிக்கா, இஸ்ரேல் மற்றும் ஈரான் இடையிலான போரை முடிவுக்குக் கொண்டுவரும் நோக்கில் ஈரான் முன்வைத்த சமீபத்திய திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்க வாய்ப்பில்லை என அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் கூறியதாக அதிகாரிகள் வட்டாரங்கள் தெரிவித்தன. ஈரானின் புதிய நிபந்தனைகளில், உலகளாவிய முக்கிய எண்ணெய் போக்குவரத்துப் பாதையான ஹார்முஸ் ஜலசந்தியை திறப்பதும், ஈரானின் அணுசக்தித் திட்டம் தொடர்பான பேச்சுவார்த்தைகளை ஒத்திவைப்பதும் அடங்கும். நேற்று அமெரிக்க தேசிய பாதுகாப்பு அதிகாரிகளுடன் நடந்த உயர்மட்டக் கூட்டத்தில் ஈரானின் நிபந்தனைகள் குறித்து ட்ரம்ப் தனது சந்தேகங்களைப் பகிர்ந்து கொண்டார். இதனை தொடர்ந்து, ஈரானின் புதிய நிபந்தனைகளை ட்ரம்ப் ஏற்க வாய்ப்பில்லை என்று ஓர் அதிகாரி தெரிவித்துள்ளார்.

ஈரானின் அணுசக்தி செறிவூட்டல் நடவடிக்கைகள் மற்றும் அந்நாட்டின் அணு குண்டு தயாரிக்க தேவையான யுரேனியம் கையிருப்பு குறித்த சந்தேகங்களை தீர்க்காமல் ஹார்முஸ் ஜலசந்தியை மீண்டும் திறப்பது, அமெரிக்காவின் பேச்சுவார்த்தை நிலையை பலவீனப்படுத்திவிடும் என்று அந்நாடு அச்சம் தெரிவித்துள்ளது

## “மேற்காசியாவில் அமைதியை நிலைநாட்ட ரஷ்யா தயார்” - ஈரானிடம் புதின் உறுதி




**மாஸ்கோ, ஏப்.29:**

மேற்காசியாவில் அமைதியை உறுதி செய்ய ரஷ்யா தயார் என ஈரான் வெளியுறவு அமைச்சர் அப்பாஸ் அரக்சி உடனான சந்திப்பில் ரஷ்ய அதிபர் புதின் தெரிவித்துள்ளார்.

கடந்த பிப்.28-ம் தேதி ஈரான் மீது அமெரிக்காவும், இஸ்ரேலும் கூட்டாக இணைந்து தாக்குதல் மேற்கொண்டன. அதற்கு பதிலடியாக இஸ்ரேல் மற்றும் வளைகுடாவில் உள்ள அமெரிக்க நேச நாடுகள் மீது ஈரான் தாக்குதல் நடத்தியது. இதோடு ஹார்முஸ் ஜலசந்தியை ஈரான் முடக்கியது. இதனால் சர்வதேச அளவில் கச்சா எண்ணெய் தட்டுப்பாடு ஏற்பட்டது. இந்நிலையில், ஏப்ரல் 8 அன்று அமெரிக்கா மற்றும் ஈரான் இடையே இடைக்கால போர் நிறுத்தம் ஏற்பட்டது. தற்போது அதை காலவரையின்றி அமெரிக்க அதிபர் ட்ரம்ப் நீட்டித்துள்ளார். இரண்டு தரப்பும் இது தொடர்பாக இறுதி உடன்பாட்டை எட்டுவதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன. இதில் பாகிஸ்தான் மத்தியஸ்தம் செய்து வருகிறது. பேச்சுவார்த்தையை மீண்டும் தொடங்க அமெரிக்காவுக்கு மூன்று நிபந்தனைகளை ஈரான் முன்வைத்துள்ளது. இந்தச் சூழலில் ஈரான் வெளியுறவு அமைச்சர் அப்பாஸ் அரக்சி, ரஷ்யா பயணித்துள்ளார். அங்கு அந்நாட்டு அதிபர் புதினை அவர் சந்தித்தார். இந்தப் போரில் தங்களுக்கு ஆதரவாக ரஷ்யா இருப்பதற்கு புதினிடம் அரக்சி நன்றி தெரிவித்தார். “மேற்காசியாவில் அமைதியை விரைந்து உறுதி செய்ய எங்கள் அதிகாரத்துக்கு உட்பட்ட அனைத்தையும் செய்ய ரஷ்யா தயாராக உள்ளது” என்று அப்போது புதின் தெரிவித்துள்ளார். இதை ரஷ்ய அரசு செய்தி நிறுவனம் உறுதி செய்துள்ளார்.

## அமைதிப் பேச்சுக்கு ஈரான் விதித்த நிபந்தனைகள்: அமெரிக்கா பரிசீலிப்பதாக வெள்ளை மாளிகை தகவல்




**தெஹ்ரான், ஏப்.29:**

ஈரான் மற்றும் லெபனான் மீது போர் தொடுக்கப்படாது என்ற உத்தரவாதத்தை அமெரிக்கா அளிக்குமானால், ஹார்முஸ் ஜலசந்தியை திறக்க தயார் என ஈரான் கூறி இருந்த நிலையில், அது குறித்து அமெரிக்கா பரிசீலித்து வருவதாக வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.

ஈரானுக்கும் அமெரிக்காவுக்கும் இடையே போர் நிறுத்தம் ஏற்பட்டுள்ள போதிலும், மேற்காசியாவில் தொடர்ந்து பதற்றம் நிலவி வருகிறது. கட்டுப்பாடுகள் மற்றும் கட்டணம் ஏதும் இன்றி ஹார்முஸ் ஜலசந்தியை திறக்க வேண்டும், அணு ஆயுத முயற்சியை கைவிட வேண்டும் என்ற அமெரிக்காவின் நிபந்தனைகள் குறித்து நேற்று ஈரான் தனது நிலைப்பாட்டை பாகிஸ்தான் மூலம் அமெரிக்காவுக்கு தெரியப்படுத்தியது.


அமெரிக்காவுடன் அமைதிப் பேச்சுவார்த்தையை மீண்டும் தொடங்க வேண்டுமானால், முதலில், ஈரான் மற்றும் லெபனான் மீது போர் தொடுக்கப்படாது என்பதற்கும், போர் முழுமையாக நிறுத்தப்படுவதற்கும் அமெரிக்கா முறையான உத்தரவாதம் அளிக்க வேண்டும். இந்த உத்தரவாதம் அளிக்கப்பட்டால், ஹார்முஸ் ஜலசந்தி நிர்வாகம் மற்றும் மேலாண்மை குறித்து ஆலோசிக்கப்படும். அதன் பின்னரே, அணுசக்தி விவகாரம் குறித்து ஈரான் விவாதிக்கும் என ஈரான் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில், ஈரானின் இந்த நிபந்தனைகள் குறித்து பரிசீலிக்கப்பட்டு வருவதாக வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது. வாஷிங்டன் டிசியில் செய்தியாளர்களிடம் பேசிய வெள்ளை மாளிகை செய்தித் தொடர்பாளர் கரோலின் லீவிட் இதனைத் தெரிவித்தார்.

மேலும், ஈரானின் நிலைப்பாடு குறித்து விவாதிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப், உயர்மட்ட பாதுகாப்பு ஆலோசகர்களுடன் ஆலோசனை மேற்கொண்டதாக ஈரானின் ஃபார்ஸ் செய்தி நிறுவனம் செய்தி வெளியிட்டுள்ளது.

ஈரானின் நிலைப்பாடு குறித்து செய்தியாளர்களிடம் பேசிய அமெரிக்க வெளியுறவு அமைச்சர் மார்கோ ரூபியோ, “அவர்கள் சமர்ப்பிப்பார்கள் என்று நாங்கள் எதிர்பார்த்ததைவிட இது சிறப்பாகவே உள்ளது. எனினும், இந்த நிலைப்பாடு உண்மையானதா என்ற கேள்வி உள்ளது. அவர்கள் பேச்சுவார்த்தை நடத்துவதில் மிகவும் வல்லவர்கள். எனவே, எத்தகைய ஒப்பந்தம் எட்டப்பட்டாலும் அது அவர்கள் (ஈரான்) அணு ஆயுதத்தை நோக்கி வேகமாக முன்னேறுவதைத் தடுப்பதாக இருக்க வேண்டும்” என்று தெரிவித்தார்.

## பாகிஸ்தான் பலுசிஸ்தானில் 10 நாட்களில் 27 தாக்குதல்கள் - 42 ராணுவ வீரர்கள் உயிரிழப்பு



**குவெட்டா, ஏப்.29:**

பாகிஸ்தானின் பலுசிஸ்தானில் 10 நாட்களில் 27 தாக்குதல்கள் நடத்தியதாகவும், இதில் பாகிஸ்தான் ராணுவ வீரர்கள் 42 பேர் கொல்லப்பட்டதாகவும் பலுச் விடுதலைப்படை தெரிவித்துள்ளது.

பாகிஸ்தானில் இருந்து பலுசிஸ்தானை பிரிக்க பலுச் விடுதலைப்படை என்ற அமைப்பு கடந்த 2000-ம் ஆண்டு முதல் போராடி வருகிறது. இவர்களை தீவிரவாதிகளாக அறிவித்து பாகிஸ்தான் ராணுவம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

இந்நிலையில் பலுச் விடுதலைப் படை செய்தி தொடர்பாளர் ஜீயந்த் பலுச் நேற்று வெளியிட்ட அறிக்கை: பலுசிஸ்தான் மாகாணத்தின் பல இடங்களில் கடந்த 15-ம் தேதி முதல் 25-ம் தேதி வரை 27 தாக்குதல்களை பலுச் விடுதலைப் படை மேற்கொண்டது. சோண்டா, அல்மார்க் பகுதிக்குள் நுழைந்த பாக். ராணுவ வீரர்களை ரிமோட் கன்ட்ரோல் வெடிகுண்டுகள் மூலம் தாக்குதல் நடத்தினோம்.

அதன்பின் துப்பாக்கிச் சூடு தாக்குதல் நடத்தினோம். பாக். படைகள் மீது ட்ரோன் தாக்குதலும் நடத்தப்பட்டது. இதில் பாக். ராணுவ வீரர்கள் 42 பேர் உயிரிழந்தனர். பலர் காயம் அடைந்தனர். ஷாரக், ஹர்னாய் பகுதியில் நடைபெற்ற மோதலில் ஒரு பாக்.வீரரை உயிருடன் பிடித்தோம். ராணுவ நிலைகளை கைப்பற்றி ஏராளமான ஆயுதங்களை கைப்பற்றினோம்.

இந்த தாக்குதலில் உள்ளூர் மக்கள் 10 பேரும் உயிரிழந்தனர். பலுச் விடுதலைபடையைச் சேர்ந்த 3 வீரர்கள் இந்த சண்டையில் கொல்லப்பட்டனர். இவ்வாறு பலுச் விடுதலைப் படை கூறியுள்ளது. சில வாரங்களுக்கு முன் பாகிஸ்தான் கடலோர காவல்படையைச் சேர்ந்த வீரர்கள் 3 பேரை, அரபிக்கடல் பகுதியில் பலுச் படையினர் சுட்டுக் கொன்றனர். அதன்பின் இந்த தாக்குதல் நடைபெற்றுள்ளது.

## வாட்ஸ் அப் இனி இந்த மாடல் போன்களில் இயங்காது: பயனர்களுக்கு வெளியான முக்கிய அறிவிப்பு

**நியூயார்க், ஏப்.29:**

ஆண்ட்ராய்டு 6.0-க்கும் குறைவான இயங்குதளங்களில் இயங்கும் ஸ்மார்ட்போன்களில், வரும் செப்டம்பர்-8 ஆம் தேதி முதல் வாட்ஸ்அப் சேவை நிறுத்தப்படும் என்று மெட்டா நிறுவனம் அறிவித்துள்ளது. தொழில்நுட்ப அம்சம் மற்றும் மேம்படுத்தப்பட்ட பாதுகாப்பு வழங்குவதற்காக, ஆண்ட்ராய்டு 5.0 மற்றும் 5.1 போன்ற ஓல்டு வெர்ஷன்களில் இனி வாட்ஸ் அப் இயங்காது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதிய பாதுகாப்பு வசதிகள் மற்றும் கூடுதல் அம்சங்களை வழங்க பழைய இயங்குதளம் மற்றும் ஹார்டுவேர் போதுமானதாக இல்லை என்பதால் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. பயனர்களுக்கு ஏற்கெனவே இதுதொடர்பாக எச்சரிக்கை குறுஞ்செய்திகள் அனுப்பப்பட்டு விட்டதாகவும் மெட்டா தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. பயனர்கள் தங்கள் உரையாடல்கள், இமேஜ்கள் உள்ளிட்டவை இழப்பு ஏற்படாமல் தடுக்க முன்கூட்டியே புதிய வெர்ஷன்களுக்கு மாறிக்கொள்ளுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## காசாவில் 14 கி.மீ நீள சுரங்கப்பாதை தகர்ப்பு - இஸ்ரேல் ராணுவம்



**ஜெருசலேம், ஏப்.29:**

வடக்கு காசா பகுதியில் ஹமாஸ் அமைப்பினரால் பயன்படுத்தப்பட்டு வந்த சுமார் 14 கிலோமீட்டர் நீளமுள்ள நிலத்தடி சுரங்கப்பாதைகளை அழித்துள்ளதாக இஸ்ரேல் பாதுகாப்புப் படை (IDF) அறிவித்துள்ளது.

இஸ்ரேல் ராணுவத்தின் வடக்கு பிரிகேட் மற்றும் ‘யஹலோம்’ (YAHALAM) சிறப்புப் பொறியியல் பிரிவு இணைந்து கடந்த சில மாதங்களாக காசாவின் வடக்குப்பகுதி மற்றும் பெய்ட் ஹனூன் (BEIT HANOUN) பகுதிகளில் தேடுதல் வேட்டையை நடத்தியநிலையில் இந்தச் சுரங்கப்பாதைகளைக் கண்டறிந்து அழித்தன.

அழிக்கப்பட்ட சுரங்கப்பாதைகளுக்குள் ஏராளமான ஆயுதங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. காசாவில் சுரங்கப்பாதைகள் அழிக்கப்படும் அதே வேளையில், மறுபுறம் லெபனானில் உள்ள ஹிஸ்புல்லா அமைப்பின் இலக்குகளை நோக்கி இஸ்ரேல் தனது தாக்குதலைத் தீவிரப்படுத்தியுள்ளது.

## தெற்கு சூடானில் விமான விபத்து - 14 பேர் பலி



**ஜூபா, ஏப்.29:**

கிழக்கு ஆப்பிரிக்காவில் சூடான் அருகே அமைந்துள்ள நாடு தெற்கு சூடான். அந்நாட்டின் யொயி நகரில் இருந்து தலைநகர் ஜூபாவுக்கு இன்று சிறிய ரக விமானம் புறப்பட்டது. அந்த விமானத்தில் விமானி உள்பட 14 பேர் பயணித்தனர்.

இந்நிலையில், தலைநகர் ஜூபா அருகே நடுவானில் பறந்துகொண்டிருந்தபோது திடீரென விமானம் வனப்பகுதியில் விழுந்து விபத்துக்குள்ளானது. விபத்துக்குள்ளான உடன் விமானம் முழுவதும் தீப்பற்றி எரிந்தது. இந்த விபத்தில் விமானத்தில் பயணித்த 14 பேரும் தீயில் கருகி உயிரிழந்தனர்.

இந்த சம்பவம் குறித்து அறிந்து விரைந்து சென்ற மீட்புக்குழுவினர் விமான விபத்தில் உயிரிழந்த 14 பேரின் உடல்களையும் மீட்டு விசாரணை நடத்தி வருகின்றனர். முதற்கட்ட விசாரணையில் மோசமான வானிலை காரணமாக விமானம் வனப்பகுதியில் விழுந்து விபத்துக்குள்ளானதாக தகவல் வெளியாகியுள்ளது.

## சுதந்திர நாடுகள் மீது தனது கொள்கையை திணிக்கும் நிலையில் இனி அமெரிக்கா இல்லை: ஈரான்



**தெஹ்ரான், ஏப்.29:**

“பிறநாடுகள் என்ன செய்ய வேண்டும் என்பதை அமெரிக்காவால் இனி திணிக்க முடியாது. சுதந்திரமான நாடுகள் மீது தனது கொள்கையை திணிக்கும் நிலையில் இனி அமெரிக்கா இல்லை.” என்று ஈரான் பாதுகாப்பு அமைச்சக செய்தித் தொடர்பாளர் ரெசா தலாய் நிக் தெரிவித்துள்ளார்.

மேற்கு ஆசிய போரை முடிவுக்குக் கொண்டு வர அமெரிக்காவுக்கு ஈரான் மூன்று நிபந்தனைகளை விதித்துள்ள நிலையில், ஈரான் பாதுகாப்பு அமைச்சக செய்தித் தொடர்பாளர் ரெசா தலாய் நிக் செய்தியாளர்களிடம் பேசினார். அப்போது அவர், “பிறநாடுகள் என்ன செய்ய வேண்டும் என்பதை அமெரிக்காவால் இனி திணிக்க முடியாது. சுதந்திரமான நாடுகள் மீது தனது கொள்கையை திணிக்கும் நிலையில் இனி அமெரிக்கா இல்லை. தனது சட்டவிரோத, பகுத்தறிவற்ற கோரிக்கைகளை கைவிட வேண்டும் என்ற ஈரானின் கோரிக்கையை அமெரிக்கா ஏற்கும்” என தெரிவித்தார்.

இந்நிலையில், அமெரிக்காவுக்கும் ஈரானுக்கும் இடையே அதிகரித்து வரும் பதற்றங்கள், உலகின் அனைத்து நாடுகளையும் பாதித்து வருவதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது. இது தொடர்பாக பேசியுள்ள ஐ.நா. பொதுச் செயலாளர் ஆன்டோனியோ குட்டரெஸ், “அமெரிக்காவுக்கும் ஈரானுக்கும் இடையே அதிகரித்து வரும் பதற்றங்களால் கடல்சார் பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் அதிகரித்துள்ளன. ஒவ்வொரு கடற்கரை நாட்டையும் மட்டுமல்லாது, நிலத்தால் சூழப்பட்ட நாட்டையும் இது பாதிக்கிறது. உலக அளவில் அதிகரித்து வரும் பிளவுகள் நம்பிக்கையை அரித்து, சர்வதேச சட்டத்துக்கு சவால் விடுத்து கூட்டுப் பாதுகாப்பின் அடித்தளங்களை சிதைக்கின்றன” என தெரிவித்துள்ளார்.

ஈரான் - அமெரிக்கா இடையே போர் நிறுத்தம் அமலில் இருந்தாலும் அது நிச்சயமற்றதாக இருப்பதால், கச்சா எண்ணெய் விலை சர்வதேச அளவில் 2.8% உயர்ந்து ஒரு பீப்பாய் பிரென்ட் கச்சா எண்ணெய் 109 அமெரிக்க டாலருக்கு விற்பனையாகிறது. ஹார்முஸ் ஜலசந்தி பெரும்பாலும் கடக்க முடியாத நிலையில் உள்ளதால் அந்த பகுதியில் அசாதாரண சூழலே நிலவி வருவதாக புளூம்பெர்க் செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்த மார்ச் மாதம் முதல் ஹார்முஸ் ஜலசந்தி முடக்கப்பட்டுள்ளது. உலகில் எண்ணெய் விநியோகத்தில் ஐந்தில் ஒரு பங்கைக் கொண்டிருக்கும் இந்த கடற்பாதை முடக்கப்பட்டுள்ளதால், பல நாடுகளில் எண்ணெய் தட்டுப்பாடு அதிகரித்துள்ளது. எனவே, மோதலை விரைவாக முடிவுக்குக் கொண்டு வர இந்தியா உட்பட பல நாடுகள் ஈரானுக்கும் அமெரிக்காவுக்கும் தொடர்ந்து அழுத்தம் கொடுத்து வருகின்றன.

# மொழி, பிராந்தியவாதம் மூலம் நாட்டில் பிளவுகளை விதைக்க முயற்சி: பிரதமர் மோடி





# எல்லை தாண்டிய பயங்கரவாதம்: இரட்டை நிலைப்பாட்டிற்கு இடமில்லை

# உலகின் 5-வது பெரிய ராணுவ செலவு செய்யும் நாடு என்ற அந்தஸ்தை பெற்றது இந்தியா

# மேற்குவங்காள 2ம் கட்ட தேர்தல்: இன்று வாக்குப்பதிவு

# அரசு பள்ளிகளில் மாணவர் சேர்க்கை 1 லட்சத்தை கடந்தது


# தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www. tamilnaduepaper.com

Tamilnaduepaper

சென்னை

29.04.2026 புதன்கிழமை

இலவச இ-பேப்பர்